பிஸ்மில்லாஹ்

# ஸீரத்துல் குப்ரா

என்னும்

## கதீஜா நாயகி றலியல்லாஹு அன்ஹாவின் ஜீவிய சரித்திரம்.

இஃது

ஹாஜி மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை

அவர்கள் முயற்சியால்

உருது பாஷையிலிருந்து உரைபடுத்தப்பட்டதை

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

1950 ரூ 1-4-0.

85

Q7:332
N50
111451

பிஸ்மில்லாஹி.

---

# ஸீரத்துல் குப்ரா

என்னும்

## கதீஜா நாயகி றலியல்லாஹு அன்ஹாவின் ஜீவிய சரித்திரம்.

---

இஃது

ஹாஜி மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை

அவர்கள் முயற்சியால்

உர்து பாஷையிலிருந்து உரைபடுத்தப்பட்டதை

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

---

இதன் விலை] 1950 [ரு 1-4-0.

பிஸ்மில்லாஹி

## ஹாமிதன் வமுஸல்லியன் வமுஸல்லிமா.

## நமது நிலைமை.

---

நாம் தற்கால வர்த்தமானங்களை மாத்திரம் வாசித்தறிய வழக்கப் படுத்திக்கொண்டோம். எவற்றில் நமக்கு இதோபதேச பாடங்களிருக்கின்றனவோ அந்தப் புராதன சரித்திரங்களை நாம் பார்ப்பது கொஞ்சத்திலும் கொஞ்சமாய் விட்டது. நாம் ஆண் பிள்ளைகளாயிருந்தும் நாவல்களையும் கற்பனைக்கதைகளையும் பார்ப்பதே நமக்கு நேத்திரானந்த மென்று நினைக்கிறோம். நமது பெண்களோ வழக்கமாக வழங்கிவரும் பாவனா ரூபமான கட்டுக்கதைகளையே கல்வி விளக்கங்களின் விருத்திக்குக் காரண மென்று கருதுகிறார்கள். ஆனால் மஹான்களான நமது முன்னோர்களின் ஜீவ விருத்தாந்தங்களை உற்று நோக்கிப் பூர்வத்தில் முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாளை எவ்வாறு போக்கினார்களென்றும், அவருடைய நற்குணங்களும் நல்ல எண்ணமும் எவ்வளவு மகிமை யுற்றிருந்தன வென்றும் தெரிந்து கொள்ள, அல்லாஹு தஆலா இவர்களுக்கு அவ்வளவு அருள் புரிய வில்லைபோலும்.

இப்போது இதோ நீங்கள் படிக்கிற இச்சரித்திரமானது, எவரும் எஜமானியாக ஏற்று பின்பற்றத்தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய நம் பெருமாட்டியின் ஜீவியவிருத்தாந்த மாகும். அம்மங்கையர் தமது வடிவம் சங்களில் உலகப் பெண்களெல் லாரினும் மீக்குற்றவர். அன்றியும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மவர்களுடைய பிராட்டிக ளெல்லாரினும் அவர் பிரதம பிராட்டியர் என்ற பெருமை அவருக்கு வாய்த்திருக்கிறது. அவரது வாழ்க்கை சம்பந்தமான சரித்திரமோ அனைவரும் கண்டு அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

கால வர்ணத்தினால் வர்ணம்பூசப்பட்டும் மேலைத் தேசத்தாரின் பின்பற்றலில் பீடிக்கப்பட்டு மிருக்கிற ஒரு ஸ்திரியை நான் பார்க்கும்போது, இத்தப் புதிய வெளிச்ச மென்னும் நூதனக் கல்வியின் போதனையின் மீது எனக்கு மிக்க சினமுண்டாகின்றது.

முஸ்லிம் பெண்கள் தங்கள் இஸ்லாம் மதஸ்தாபகரான நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தங்கள் ஜீவகால பரியந்தம் ஏற்படுத்தி நடத்திக்காட்டின சட்ட திட்டங்களின் படி தங்கள் இல்வாழ்க்கையை ஏன் நடத்திவரக்கூடாது. இல்வாழ்க்கையின் சீர்திருத்தத்துக்காக ஐரோப்பா தேசத்தின் ஓர் பிரபல சீமாட்டியைப் பின் பற்றவேண்டியதும், அவரால் கற்பிக்கப்படும் கல்வியினால் பயனடைய முயன்று பணத்தையும் காலத்தையும் சேதப்படுத்த வேண்டியதுமான அவசியம் என்னயிருக்கிறது? நாம் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவின முஸ்லிம்களா யிருக்கிறோமாதலால், நாம் எப்போதும் முஸ்லிம்களையே தொடர்ந்து நடக்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.

"அந்நாஸு அலா தீனி முலூகிஹிம்"—மனிதர்கள் தங்கள் அரசர் செல்லும்வழி செல்பவர்—என்ற வாக்கியமானது எந்தப் பாஷையிலிருந்ததோ அது சர்வ பாஷைக்கும் தலைமையாயிருந்த காலத்துக்கே சொந்தமாயிருந்தது. இன்னும் எந்த தேசத்தில் அந்த பாஷைபிறந்து வளர்ந்ததோ அந்த தேசத்துக்கே அந்த வாக்கியம் சரியென்று கொள்ளத்தக்கது. இங்கு ஹிந்துஸ்தானத்திலிருந்து கொண்டு அந்த வாக்கியம் தனக்காதாரமெனக் கண்டு இஸ்லாம் மதத்திற்கு இவ்வாழ்க்கையில் மாத்திரமல்ல, மேலும் லௌகிக சம்பந்தமான ஒவ்வொரு விஷயத்திலும் முற்றிலும் வேறுபட்டவர்களாயும் விகர்ப்ப முள்ளவர்களாயுமிருக்கிற ஜனங்கள் செல்லும் வழியில் செல்வதென்றால் இது சுத்த மூடத்தனமா யிருக்கிறது.

இதோ நான் எழுதி வருகிற இந்தச்சரித்திரத்தை இதற்கு முன்னேயும் பன்முறை பலர் எழுதியிருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் அச்சரித்திர சம்பந்தமான விஷயங்களையும் விருத்தாந்தங்களையும் மிகச்சுருக்கி சொல்லி இருப்பதானது, அறியவேண்டிய முக்கிய சங்கதிகள் ஒன்றும் நல்ல விதமாகப் புத்தியில் அமையாதபடி அந்தகாரத்தில் போட்டுவிடுகிறது.

உம்முல் மூமினீனாகிய நாயகி கதீஜா பெருமாட்டியின் ஜீவிய சரித்திர மெழுதுவதற்குப் இந்நூலின் பல பக்கங்கள்

போதுமா? சமுத்திரம் ஓர் சிறு பாத்திரத்தி லடங்குமா? சங்கைப் பொருந்திய இந்நாயகியினது மெச்சத்தக்க குணநிசயங்கள் இவ்வளவு சுருக்கமான வி. த்தில் ஒருபோதும் அடங்கா.

ஆயினும் நான் எழுதின இச்சரித்திரம் இப்படிச் சுருங்கின தற்குக் காரணம் யாதெனில், றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் சம்பந்தப்பட்டவரையில் கதீஜா பெருமாட்டியின் சரித்திரம் எவ்வளவோ அவ்வளவு தான் தெரிந்தெடுத்து இதில எழுதப்பட்டிருக்கிறது. சரித்திர தோரணையில் எங்கேயாவது ஹஜ்ரத் அவர்களின் சரித்திரம் தொடரக்கண்டால் அங்கு அதைச் சுருக்கியிருக்கிறேன். எதார்த்தத்தில் கதீஜாபெருமாட்டியின் சரித்திரத்தில் நின்றும் பிரசுரத்துக்குக் கொண்டு வரத்தக்கது எவ்வளவென்றால், அன்னவர் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடன் வாழ்ந்துவந்த வாழ்க்கை சம்பந்தப்பட்ட வரையில் மாத்திரமேயாம். மணவாளன் மணவாட்டி இருவரையுஞ் சேர்த்து சொல்லாதவரையில் விஷயம் நன்கு விளங்காது. நான் இந்தச் சரித்திரத்தில் அம்முறையைப் போதுமான அளவாக அனுஷ்டித்திருக்கிறேன்.

ஐரோப்பிய சரித்திரக்காரர் எப்போதாவது முஸ்லிம் போதகரான ஒரு மஹானைப்பற்றி சரித்திரம் எழுதத்தலைப்பட்டால் அல்லது அவர்களின் வாழ்க்கையைக் குறித்துப் பிரசுரிக்க முயன்றால், அப்போது அவர்கள் தங்கள் பாரபக்ஷத்தினால் அந்த மஹான்மீது அவசியமாக சில குற்றங்களைத் தங்கள் புத்தி கோணலால் கற்பித்து விடுகிறார்கள். இதை அவர்கள் சதா கையாடி வந்திருக்கிறார்கள்.

அந்தச் சரித்திரக்காரர்களில் வில்லியம் மேவர் என்பவர் மிகவும் பேர்போனவர். அவர் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய மனையாட்டிகளின் சரித்திரம் எழுதுகையில், அவரது மந்தபுத்தியானது அவர்களையும் குற்றங்கூறுதபடி விட்டுவிடவில்லை. கதீஜா பெருமாட்டியின் சரித்திரம் எழுதும்போது அவர், இடைவிடாத இந்த வழக்கத்தை மறந்தாரில்லை. நாம் இந்தச் சரித்திரத்தில் அவரது விதண்டாவாதக் குற்றச் சாட்டலைக் கண்டனம் செய்ய முயன்றிருக்கிறோம். ஏனெனில் இதரஜாதியாரில் பரவியிருக்கிற கெட்ட எண்ணமான பெரும்புயல்

அடங்கி நசிக்கவும், ஜனங்கள் கதீஜா பெருமாட்டியின் உண்மை யான விசுவாசத்தை யுணர்வதுடன், நபிகள் பெருமானுருடைய நடவடிக்கைகளும் தோஷமில்லாத தூய்மையானவை யென்று தெரிந்து கொள்ளவுமேயாம்.

இந்தச் சரித்திரத்தில் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் சம்பந்தப்பட்ட இல்வாழ்க்கை விஷயங்கள் எவையோ அவை நமக்கு அடியில் வரையப்படும் பாடங்களைப் போதிக் கின்றன. அவைகளை நம் ஆடவரும் பெண்டிரும் அனுஷ்டானத் துக்குக் கொண்டு வருவது கடமை:

(1) தன் வயதினும் மூத்தாளை விவாகஞ் செய்தல்.

(2) விதவையை விவாகஞ் செய்தல்.

(3) மனையாளுடன் மருவி வாழ்தல்.

(4) மனையாள்மீது நம்பிக்கை வைத்தல்.

இதேபோல் கதீஜா பெருமாட்டியின் வாழ்க்கை விஷ யங்கள் நம் பெண்டிருக்குப் பின்வரும் பாடங்களைக் கற்பிக்கின்றன:

(1) இஸ்லாம் மார்க்கத்தின் மீது உண்மையான பிரியம் வைத்தல்.

(2) கஷ்டங்களில் கணவனுக்கு உதவி செய்தல்.

(3) இதமான வார்த்தைகளால் கணவன் மனதைக் கவரச் செய்தல்.

(4) பொன்னையும் பொருளையும் கணவன் மீது குர்பானக அர்ப்பணஞ் செய்தல்

(5) கணவன் மனதுக்குக் கலக்கம் வராமல் காத்தல்.

நம் முஸ்லிம் வர்க்கத்தை சேர்ந்த ஆடவரும் பெண்டிரும் இச்சரித்திரத்தில் கூறியுள்ள இவ்விஷயங்களால் இதோபதேச மடைவார்க ளென்றும், தற்கால நடவடிக்கையான வாழ்க்கையை விட்டுவிடுவார்களென்றும், இதிற்காணப்படும் பிரகாசமான சட்ட திட்டங்களைத் தழுவி நடக்கத் தயாராய் விடுவார்களென்றும் நாம் நம்புகின்றோம்.

---

## வம்ச நாமங்கள்.

கதீஜா றலியல்லாஹுஅன்ஹா என்ற நாமம் பெற்ற இப்பெரு மாட்டியார் குவைலிதுடைய புத்திரி. இவரது அன்னை ஜாயிதா என்பவருக்கு மகள். கதீஜா பெருமாட்டிக்கு ஓர் காரணார்த்தமாய் வந்த தாஹிரா என்ற பட்டப்பெயரு மிருந்தது. இவர் பிதா குறைஷி குலத்தைச் சேர்ந்தவர். மாதாவும் குறைஷி குலத்தில் ஓர் சிறந்த குடும்பத்தவர். பிதாவின் வழியாக இவர் வம்சதோரணை வருமாறு:—

கதீஜா பெருமாட்டியார் குவைலிதுடைய புத்திரி. குவைலிது அஸதுடைய புத்திரர். அஸது அப்துல் உஸ்ஸாவுடைய புத்திரர். அப்துல் உஸ்ஸா குஸைய்யு உடைய புத்திரர். குஸைய்யு றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய நாலாம் பாட்டனார்.

மாதாவின் வழியாக இவர் வம்ச தோரணை வருமாறு:— கதீஜா பெருமாட்டி பாத்திமாவின் புத்திரி. பாத்மா ஜாயிதாவின் புத்திரி. ஜாயிதா அசம்முடைய புத்திரர். அசம்மு ஹர்முடைய புத்திரர். ஹரமு ரவுஹாவின் புத்திரர். ரவுஹா ஹஜமுடைய புத்திரர், ஹஜமு அப்துடைய புத்திரர், அப்து மயீசுவின் புத்திரர், மயீசு ஆமிருவின் புத்திரர், ஆமிரு லுவைய் உடைய புத்திரர், இந்தத் தோரணையிலும் கதீஜாபிராட்டியாரின் வம்சம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய வம்ச தோரணையில் வந்து கலக்கின்றது.

ஆகவே கதீஜாபிராட்டியார் தம் மாதா பிதாக்களான இருவர் வழியிலும் உயர்குலத்தவரா யிருப்பதுமன்றி, றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய வம்ச பரம்பரையிலேயே யோர் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவராயு மிருக்கின்றனர்.

கதீஜாபிராட்டியார் ஈஸவி 555-வது ஆண்டுக்குச் சரியான கிஸ்ரவி 57-வது ஆண்டில் பிறந்தவர். அறபுதேசம் இருளால் மூடப்பட்டிருந்த காலத்தில் இப்பெருமாட்டி பிறந்திருந்த

போதிலும் பிறந்த ஆரம்பத்திலிருந்தே இவர் நல்ல மனமும் சிறந்த குணங்களுமுள்ளவரா யிருந்து வந்தனர். இவரின் வம்ச தோரணையை றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய வம்ச பரம்பரையுடன் சேர்ப்பதற்காக அடியில் ஓர் வம்சவளி வரைகின்றோம். அதைப்பார்த்தால் இவர் வம்சம் றசூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடன் எவ்வாறு சம்பந்தப் படுகின்றதென்பது நன்கு விளங்கும்.

| | | |
|---|---|---|
| | அதுனன் | |
| | மஅத்து | |
| | இல்யாஸ் | |
| | முத்ரிகா | |
| | நுலர் | |
| | மாலிகு........................................ | புஹர் |
| ஆமிரு............................ | லுவைய்யு............................................ | காலிபு |
| மயீசு | கஃபு | |
| அப்து | முர்ரத்து | |
| ஹஜமு | கிலாபு | |
| ரௌஹா | குஸைய்பு.............. | அப்துல் உஸ்ஸா |
| ஹரமு | அப்துமனுபு | அஸது |
| அசம்மு | ஹாஷிம் | குவைலிது |
| ஜாயிதா | அப்துல் முத்தலிபு | கதீஜா |
| பாத்திமா | அப்துல்லா | |
| கதீஜா றலி | முஹம்மதுர் றசூலுல்லாஹ் | |

கதீஜா பெருமாட்டியின் வம்சப்பெருமை உங்களுக்கு விளங்கி விட்டது. இனி அவரது சுயப்பெருமையையும் பிரபுத்துவத்தை யும் கேளுங்கள். அவரின் பிதாவாகிய குவைலிது என்பவர் அறபு தேசத்து வர்த்தகர்களில் தலைமை பூண்டவராயும் பேர்போன வர்த்தக சிகாமணியாயு மிருந்தார். அந்த வர்த்தகத்தினாலேயே அறபியர்களில் உயர்குலத்தவரான பனீ தமீம் வர்க்கத்தாரும் பனீகஃபு வர்க்கத்தாரும் இவரை நன்குமதித்து மகிமைப்படுத்தி வந்தார்கள். இவரது செழித்தோங்கின செல்வமும் தழைத்து வளர்ந்த சம்பத்துதான் குறைஷிகளில் இவருக்கு ஓர் மதிப்பைக் கொடுத்து மற்றவரினும் இவரைசிறந்தவராகும்படி செய்தது.

இவர் எவருக்கும் பிரியமுள்ளவராயிருந்த காரணங்க ளெல்லா வற்றினும் முக்கிய காரணம் ஒன்றுண்டு. அதாவது:— நீதி நெறியிலும் நம்பிக்கையிலும் நன் நடக்கையிலும் மற்றவரைக்காண இவர் சிறந்த பதவியுள்ளவரா யிருந்தார் என்பது தான். இவர்மீது சந்தோஷமாகாதவர் எவருமிருந்ததில்லை.

## கதீஜா நாயகியின் முதல்கல்யாணம்

கதீஜா றலியல்லாஹு அன்ஹா தக்க பருவத்தை யடைந்தபோது, தமீம் வர்க்கத்தைச் சேர்ந்த ஜிராரு என்பவரின் புத்திரரான நப்பாஷ் பிரபுவுக்கு முதன் முதல் விவாகம் செய்யப்பட்டார். இக்கலியாணத்தில் மூடபக்தி நிறைந்த அக்கால வழக்கப்படியே விமரிசையான சடங்குகள் நடந்தன. குவைலிது என்பவர் எப்படி செல்வத்திலும் இன்பவாழ்க்கையிலும் சிறந்தவராயிருந்தரோ அப்படியே நப்பஷ் பிரபுவும் செல்வத்திலும் ஆட்சி அதிகாரங்களிலும் அதிக பிரபலமானவரா யிருந்தார். அநேகம் பேர் அவரை இடுகுறிப் பெயரால் அழைக்காமல் அபூஹாலா என்ற நாமத்தால் கூப்பிடுவார்கள்.

நப்பாஷ் பிரபுவால் கதீஜாபெருமாட்டிக்கு இரண்டு புத்திரர் பிறந்தார்கள். ஒருவர் பெயர் ஹாலா. மற்றொருவர் பெயர் ஹிந்த். ஹாலா என்பவர் மூடபக்தியுள்ள அக்காலத்திலேயே மரணத்தை யடைந்தார். ஹிந்துவோ நுபுவத்துடைய காலத்தைப் பெற்றுக்கொண்டார்; ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சகவாசிகளான அஸ்ஹாபுகளில் ஒருவரானர்; யவ்முல் ஜமல் என்னும் யுத்தத்தில் அலி ரலியல்லாஹு அன்ஹுவின் பக்கம் சார்ந்து அமராடினர்; நூற்றுக்கணக்கான சத்ருக்களை சம்ஹாரம் செய்து அதே அமர்க்களத்தில் இரத்தசாக்ஷி மரணமாக ஷஹீதாயினர். இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீசுகளை அனேகமாக ஹிந்த் என்பவரால் ரிவாயத்து செய்திருக்கிறர்கள் அல்லவா? அந்த ஹிந்த் இவர்தான்.

இப்போது கதீஜா பெருமாட்டியின் சத்தியவாக்கும் சரீர சுத்தமுமான பிரஸ்தாபம் அறபுதேசத்தில் பரவி விட்டது. அவரது யுக்தியையும் புத்திசாதுர்யத்தையும் ஜனங்களுணர்ந்து

புகழத்தொடங்கினர்கள். இதனுல் கதீஜாபெருமாட்டி பொதுவாக சர்வஜனங்களிலும் தாஹிரா (திரிகரணசீலி) என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். சீர்திருத்தமும் நாகரிகமும் பரவின காலத்தில் ஓர் கூட்டத்தாரால் அல்லது ஒரு நகரத்தாரால் ஒரு பட்டத்தை சம்பாதிப்பது பிரமாதமல்ல. ஏனெனில் சீர்திருத்த மடைந்த நாகரிகமானது இவ்வகையான பட்டத்தைப் பெறத்தக்க யோக்கியதை உள்ளதுதான். என்ருலும் பெண்கள் பிறப்பே பெருந்துன்ப மென்றெண்ணப் பட்டதும் பெண்களின் தூர்ல பங்களை யொழிக்க பெண் பிறந்த அந்தக்ஷணமே அதன் கழுத்தை நெறித்துக் கொன்றுபோடுவதுமான கொடிய காலத்தில் ஒரு பெண்பால் தாஹிரா என்ற பட்டம் பெற்று சிறந்து விளங்கின ரென்ருல் எதார்த்தத்தில் இது ஒரு பெரும் பேச்சேயாம். நுண் ணறிவுடையோர் இதனுல் தெரிந்து கொள்வதென்ன வென்ருல், இந்தப் பட்டப்பேரிலும் ஓர் இரகசியமிருந்தது. அதாவது:— இவரது வாழ்நாளின் அந்தியபாகம் பூரணசுத்தத்தில் செல்வதா யிருந்ததால் இவர் புத்தி பூர்வமான ஆரம்பத்திலேயே நரவாக்கு இவருக்கு தாஹிரா என்ற பட்டமளித்தது. அந்தப் பட்டமோ மெச்சத்தக்க அவரின் ஜீவியத்துக்கோர் உண்மையான அத்தாட் சியாய் முடிந்தது. அவர் விக்கிரக வணக்கத்தில் வளர்ச்சியடைந்த வராயிருந்தாலும், அவரது வாழ்நாளின் அந்தியபாகம் இஸ்லா முடைய உண்மையான வணக்கத்திலும் சுத்தமான நடவடிக்கை யிலும் கழிந்தது.

இவர் மணவாட்டியாயிருந்த காலமோ நப்பாஷ் பிரபுவுடன் இவர் விக்கிரகங்களை கும்பிடுகிறவராயும், ஆண்டவனைவிட்டு அன்னிய தெய்வங்களிடத்தில் உதவிதேடுகிறவராயும் இருந்த காலமாம். ஆயினும் சத்தியமும் சுத்தமுமான இரண்டு ஒளிகள் இவரிடத்தில் மறைந்திருந்தன. அவை வெளியுருவங்களென்னும் தடிப்புகளாலாகிய திரைக்குள் இலங்கிக்கொண் டிருந்தன. இவருக்கு வயது ஏறஏற அந்தத் தடிப்புகள் கரைந்து தத்துவ ஞானமென்னும் மின்னலானது இவர் நெற்றியில் பிரகாசித்து விளங்கினது.

## இரண்டாம் கலியாணம்

ஃப்பாஷ் பிரபு காலஞ்சென்ற பிறகு மஹ்ஜூம் கிளையைச் சேர்ந்த ஆயிது என்பவரின் புத்திரர் அதீகு என்பவருக்கு கதீஜா நாயகியை இரண்டாம் கலியாணமாக விவாகஞ் செய்யப்பட்டது. அவராலும் நாயகிக்கு ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணுக்கும் ஹிந்த் என்றே பெயரிடப்பட்டிருந்தது. இந்த ஹிந்த் என்பவர் கொஞ்சகாலம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் அன்பான மடியில் வளர்ந்தவர். நுபுவ்வத்தின் முதல் வருஷத்திலேயே றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் மீது ஈமான் கொண்டார். ஒரு பெரிய ஸஹாபியாயும் பரிசுத்த மஹானுயுமிருந்து சென்றுபோன முஹம்மது மஹ்ஜூமி றலியல்லாஹு அன்ஹு இந்த ஹிந்துவின் புத்திரர்தான். அதீகிடத்தில் கதீஜா பெருமாட்டிக்கு அதிக பிரியமிருந்தது. அவரோ பெரிய ஓர் அனுபவசாலி. ஆனுல் அவரும் கடைசியில் இவ்வுலகத்திலிருந்து பிரயாணமாய்விட்டார். கதீஜா பெருமாட்டி முன்போல் விதவையாகவே யிருந்துவிட்டார்.

---

## விதவையான காலத்தின் விருத்தாந்தங்கள்.

அதீகு இறந்துபோன பின் கதீஜா நாயகி மூன்றும் விவாகம் வேண்டாது விலகியிருந்தனர். அவர் மனம் உலகத்தைச் சற்று வெறுத்தது போலிருந்தது. இப்போது அவர் தம் வாழ்நாளில் பெரும் பாகத்தை கஃபாவென்னும் தேவாலயத்தில் கழிக்கத் தொடங்கினர். குவைலிது பெரிய தனவந்தராயும் கதீஜா பெருமாட்டி மிக்க அழகுள்ளவராயு மிருந்ததினுல் அவர் விதவையான பிறகும் பல பக்கங்களிலிருந்து பெண்கேட்டு தூதுகள் வரத் தொடங்கின. பெரிய பெரிய தனிகர்களான குறைஷிகள், இன்னும் விவாகமே செய்விக்காத தங்கள் குமாரர்களுக்கு கதீஜா பெருமாட்டியை மணம்புரிவிக்க ஆசை கொண்டார்கள். அக்காலத்தில் ஒட்டகம் மிக்க உபயோகமுள்ளதும் அதிக விலைபெற்றதுமான ஓர் சிறந்த மிருகமென்று எண்ணப்பட்டு வந்தது ஒட்ட

கங்களின் மூலமாகவே வர்த்தக வேலைகளெல்லாம் வெகு சுளுவாக நடந்துவந்தபடியால் பெண்கேட்டுவந்த தனிகர்களெல்லாம் நூறு நூறு ஒட்டகங்கள் தருவதாக அப்பெண்மணிக்கு ஆசை காட்டினார்கள். என்றாலும் கதீஜா பெருமாட்டியின் மனம் வெறுப்புற்று அவைகளை அங்கீகரிக்காமல் மறுத்து, விவாகஞ் செய்து கொள்ள எனக்கிஷ்டமே யில்லையென்று ஸ்பஷ்டமாக விடையளித்துவிட்டனர். வசீகரம் பொருந்திய குறைஷி வாலிபர்கள் இதைக்கேட்டு நாணமுற்றுத் தலைகுனிந்தனர். தங்கள் ஆசைகளை நாசமாக்கி அகத்திலடக்கிக் கொண்டு உள்ளுக்குள் விசனிப்பவர்களா யிருந்தார்கள். ஸ்திரீயின் சம்மதமில்லா விட்டால் பின்பு புருஷர் என்ன செய்ய முடியும்? வழியொன்று மில்லாமல் கடைசியாக மவுனமுற் றிருந்து விட்டார்கள்.

கதீஜா பெருமாட்டி தம் வாழ்நாளில் கொஞ்ச நேரத்தைக் கஃபதுல்லாவி லிருந்து கழிப்பர். கொஞ்சநேரம் அறபுதேசத்தில் மிகவும் பெரியவராய் மதிக்கப்பட்டு வந்த குறிசொல்லும் மாதுகளிடம் போய் அவர்கள் சொல்லும் ஆரூடங்களை உற்றுக்கேட்பர். அதினும் எதிர்கால சம்பவங்களைக் குறித்து அவர்களிடம்கேட்டு வாதாடுவர். தங்களின் பக்தி விசுவாசங்களில் இவருக்கோர் ஆக்கிரணசக்தி இருப்பதைக்கண்டு அம்மாதர்கள் இவர் மீது அதிக பக்ஷமாயிருப்பார்கள். திடுமென அம்மாதர்கள் இவர் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்குப் பெரிய உபசரிப்பும் மரியாதையும் நடக்கும். இவர் அம்மாதர்களை அழைப்பித்தால் உடனே அவர்கள் தங்கள் சாஸ்திர புத்தகங்களை எடுத்துக் கட்கத்திலிடுக்கிக் கொண்டு வந்து சேர்வார்கள். அவர்களிடம் ஆரூட பலன்களையும் சம்பவங்களையும் குறித்து இவர் வெகுநேரம் பேசிகொண்டிருப்பார்.

---

## வர்த்தகக் கடிவாளம் கதீஜா பெருமாட்டியின் கைக்கு வந்தவிபரம்.

பிறகு குவைலிது பிரபு தமது முதுமூப்பான வயதினால் தளர்ந்த கிழவனாய்போனார். அவர் தமக்குப் பலம் குன்றி வரு

வதைக் கண்டு தம்வீட்டிலிருந்து வெளியில் புறப்படுவதையும் விட்டுவிட்டார். வர்த்தகமோ அவர் வம்ச பரம்பரையில் வந்த தொழிலாயிருந்தது. அதை நடத்திவர அவருக்கு ஒரு ஆண் பிள்ளை இல்லை. கடைசியாக அவர் தம் புத்திரியாகிய கதீஜா பெருமாட்டியை அழைத்து "அம்மா! நானோ பலம்குன்றின கிழவனாய்ப் போனேன். இனி வர்த்தக சுமையைத் தூக்க என்னால் முடியாது. நீ இந்த வேலையை ஒப்புக்கொள், நான் உனக்கு உதவியாக சில காரியதரிசிகளை ஏற்படுத்துவேன்" என்று சொன்னார்.

நாம் மேலே கூறிவந்தபடி கதீஜா பெருமாட்டி அதிக புத்தி சாதுர்யமுள்ள பெண்பாலா யிருந்தனராதலால், தம் தந்தையரின் தளர்ச்சியைக் கண்டு தைரியத்தை விடாமல் அவர் சொல்லுக்கிணங்கி "என் முதுமூப்பரான பிதாவே! தங்கள் வர்த்தக வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன். நீர் வீட்டில்தானே சும்மா நிம்மதியாயிரும்" என்று வணக்கமாய் சொன்னார்.

குவைலிது பிரபுவுக்குக் கவலை நீங்கி ஆறுதல் உண்டாகி விட்டது. பண்டசாலையின் கணக்கு புத்தகங்களெல்லாம கதீஜா பெருமாட்டியினிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அவர் தம் சமர்த்தான ஏற்பாடுகளால் எல்லா அடிமைகளையும் வேலைக்காரர்களையும் தமக்கு அடங்கி நடக்கும்படி செய்துகொண்டார். சொற்ப தினத்திற்குள் வர்த்தக சாதனங்களை எவ்வளவாகப் பெருக்கி விட்டனரென்றால், அதனால் வருமானமும் இலாபமும் முன்னிலும் அதிகரித்துவிட்டன.

அப்போது இவருடைய வர்த்தகம் எமனிலும் ஷாம் என்னும் சிரியா நாடுகளிலும் பரவியிருந்தது. அக்காலத்தில் எமனும் சிரியாவுந்தான் இரண்டு வர்த்தக மண்டிகளா யிருந்தன. அவ்விரண்டிலுமே அரபு தேசத்தவர் தங்கள் சரக்குகளை அனுப்பி அதிக இலாபம் சம்பாதிப்பவர்களா யிருந்தார்கள் ஆனால் பாபில், பசரா இந்நாடுகளுக்கும் மக்கா ஷரீபிலிருந்து வர்த்தக சரக்குகள் போவதுண்டு. எனினும் எமனிலும் சிரியாவிலுந்தான் வர்த்தகம் முழுமுரமாக நடந்துவந்தது. இதனாலே தான் கதீஜா பெருமாட்டி சிரியாவையும் எமனையும் தமது வர்த்தக ஸ்தானமாக நியமித்துக் கொண்டார்.

இருபது பேருக்குமேல் யூத அடிமைகளும் அறபிகளும் குறைஷிகளும் அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந் தார்கள். அவரது வர்த்தகம் அதிக பலமாக வளர்ந்தோங்கிக் கொண்டிருந்தது. இவையெல்லா மிருந்தும் கதீஜா பெரு மாட்டிக்கு மிக்க நம்பிக்கையும் தக்க யோக்கியதையுமுள்ள ஒரு காரியதரிசி அவசியம் தேவையாயிருந்தது. அப்படிப்பட்டவர் எவரேனும் கிடைத்தால் அவரது தலைமையின் கீழ் தன்னுடைய இந்த எல்லா அடிமைகளையும் அமைத்து வெளியூர்களுக்கு அனுப்புவேனென்றும் அவரே இவர்களுக்குத் தலைவராயிருந்து சகல காரியங்களையும் நடத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவர் எண்ணிக் கொண்டிருந்தனர்.

---

## தாஹிராவினிடம் அமீன் வரல்.

இவ்விதமாக காலம் சென்றுகொண்டிருந்தது. எனினும் ரிஸாலத்தென்னும் சூரியன் மூடபக்திகளான பேரிருளென்னும் உதய ஸ்தானத்தைவிட்டு கிளம்பிவிட்டது. அதன் பேரொளி யானது பூமியின் பரப்பைத் தனது கிரஹணங்களால் பிரகாசிக்கச் செய்துவிட்டது. மூட இருள் அது தானாகவே ஒளிமண்டலத்தை விட்டு ஒதுங்கிப்போவதாயிருந்தது. காலமானது தன் சிருஷ்டிகளை அறபுதேசத்தில் இன்னும் மறைவாகவே யிருந்ததும் உலகத்தில் இன்னும் பொதுவாக ஒளி வீசா திருந்ததுமான பழைய தோர் அச்சின் பக்கம் தள்ளிக்கொண்டிருந்தது.

இந்த ரிஸாலத்தென்னும் சூரியனும் றஹமத்தென்னும் அருள் சுரக்கும் ஸ்தானமுமா யிருந்தவர் யார்? அஹ்மது முஜ் தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர் களேயாவர் (என் ஆவி அவருக்கர்ப்பணம்).

இவர்களுடைய தந்தையோ முந்தியே காலஞ்சென்று விட்டார். இவர்கள் பாட்டனாராகிய அப்துல் முத்தலிபுடைய அன்பான சம் ரக்ஷணையும் இவர்களுக்கு வாய்க்கவில்லை. பெரிய தகப்பனாரான அபூதாலிபுடைய சம்ரக்ஷணையின் கீழ் இவர்கள் பரிபாலிக்கப்பட்டு

வந்தார்கள். அபூதாலிபோ மற்றும் குறைஷி பிரபுக்களைப் போலவே தாமும் வர்த்தகத்தொழில் செய்துவந்தார். இதற்கு முன் இவருடைய வர்த்தகம் வெகுவாக விருத்தியடைந்துவந்தது. ஒவ்வொரு வருஷத்திலும் இவருடைய வர்த்தகம் ஒட்டகங்கள் சிரியா நாடுகளுக்குப் போய் திரண்ட இலாபத்துடன் திரும்புவனவா யிருந்தன. ஒருமுறை இவர் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு போயிருந்தார். ஆயினும் அதற்குப் பிறகு தாமே நேரில் போகும்படியான சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. வேறு ஆட்களை வர்த்தக ஒட்டகங்களுடன் அனுப்பிக்கொண்டிருந்தார். இதற்குக் காரணம் யாதெனில், இவருக்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீது அதிக பட்சமிருந்தது. இவர்களைப்பற்றி தம் தந்தையாகிய அப்துல் முத்தலிபு வசிய்யத்து செய்தார். வசிய்யத்து செய்திராமற் போனாலுங்கூட ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ரிஸாலத்தின் அடையாளங்கள் அபூதாலிபுடைய மனதைக் கவரர்ந்தன' ஆகவே அவர் அற்பநேரமும் இவர்களைத் தமது பார்வையிலிருந்து மறையவிடாதபடி பாதுகாத்து வந்தார். இவர்களின் சந்தோஷத்தையும் க்ஷேமத்தையும் மறக்காமல் எப்போதும் கவனித்து வருவார்.

ஹஜரத் அவர்களோ அநாதையாயிருந்தார்கள். தந்தையின் தயவான சம்ரக்ஷணையுமையம் பார்க்கவில்லை. அன்னையின் அன்பான மடியிலிருந்து அதிக நாள் ஆரோக்கியத்தை அடையவில்லை. புத்தி உதயமானபோது தாங்கள் அநாதையும் ஏழையுமாயிருப்பதைக்கண்டு, மனம் அதிக அச்சத்தை யடைந்தது. ஆயினும் அபூதாலிபுடைய அன்பான சம்ரக்ஷணையானது இவர்கள் தங்கள் மாதா பிதாக்களையும் மறந்து, தங்களுக்கு எல்லாமாயிருப்பவர் அபூதாலி பென்று கருதும்படி இவர்கள் மனதில் ஓர் எண்ணத்தை உறையச் செய்தது.

அபூதாலிபோ இப்போது பலங்குன்றின வயோதிகரா யிருந்தார். பரிபாலனச் சுமை மிக்க பளுவாயிருந்தது. தம் பிள்ளைகளின் கவலை யொரு பக்கம் தம்சகோதரர்பிள்ளையின் கவலை யொருபக்கம்; எதை ஏற்பது, எதைத் தள்ளுவது? அவர் இ[illegible]

கவலையுற்றிருக்கும் காலத்தில் அறபுதேசம் ஒருபெரும் பஞ்சத்தால் பிடிக்கப்பட்டது. வர்த்தகம் செய்யலா மென்ற ஆசையும் போய் விட்டது.

ஒரு நாள் அபூதாலிபு தம் குடும்ப சம்ரக்ஷணையைப்பற்றி அச்ச முற்று ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை அருகில் அழைத்து "மகனே! நான் பலங்குன்றிப் போனேன். ஒன்றும் செய்யக் கூடாதவனாயிருக்கிறேன். பஞ்சமோ பலத்து விட்டது. சம்பாதிப்பவர் ஒருவர். சாப்பிடுகிறவர் பத்து பதினைந்து பேர். இந்த நிலைமையில் நாம் என்னசெய்கிறது? நீரே சொல்லும், கடன்காரர் தொந்தரவு சகூத்தறுப்பாயிருக்கிறது. ஏதாவது வர்த்தகம் செய்யலா மென்றால் கையில் முதல் இல்லை; காலமோ வரவர கஷ்டத்தையே காட்டிக்கொண்டு சுழிக்கின்றது; மனமோ பெரிய வசனத்தை அடைந்திருக்கிற" தென்று சொன்னார்.

இவ்விதமாக அபூதாலிபு சொன்னதைக் கேட்டு ரசூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்கள், "என் அருமையான பெரிய பிதாவே! எனக்கு லாயக்கான ஒரு வேலையைக் கொடுத்தால் நான் அதைச் செய்ய சித்தமாயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அபூதாலிபு அதிக சந்தோஷத்தை யடைந்து சொல்லத் தொடங்கினதாவது :—தற்போது நம் குலத்தாரில் கதீஜாவின் வர்த்தக காரியங்கள் நன்றாய் நடந்து வருகின்றன. அவர் இன்னும் இரண்டு மூன்று தினத்தில் தம் வர்த்தக சரக்குகளை (ஷாமுக்கு) சிரியாவுக்கு அனுப்பப் போகின்றனர். அவருக்கு ஒரு நம்பிக்கையிள்ள அமீன் அவசியம் தேவையாயிருக்கின்றது. நீர் அவரிடம்போய் பேசுவீராகில் அவர் உடனே உம்மை அங்கிகரிப் பார் என்றும், உமக்குச் சம்பளம் ஏற்படுத்தி அவரின் வர்த்தக சரக்குகளுடன் உம்மை அனுப்புவார் என்றும் நான் நம்புகிறேன். என்றார். அதற்கு நாயக மவர்கள், என் பெரியபிதாவே! நான் அவரிடம் போவதில் எனக்கு யாதொரு தடையுமில்லை. ஆயினும் நானே நேரில் போவது என் குலப் பெருமைக்கு ஏற்றதாகு மென்று நான் நினைக்கிறேன். என் பக்கத்தால் எவராவது அவரிடம் போய் அவர் மனபாவனையைத் தெரிந்து எனக்காக சிபார்சு செய்து என்னை அவரிடம் கூட்டிக் கொண்டுபோவது மிகவும் உத்தமமாயிருக்கு மென்று சொன்னார்கள்.

இதைக்கேட்டு அபூதாலிபு மௌன முற்றிருந்து விட்டார். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வெளியில் வந்து விட்டார்கள். அபூதாலிபு இன்னும் அதே கவலையில் உட்கார்ந்திருக்கையில், அப்துல், முத்தலிபுடைய மகளாயும் ஹஸரத் அவர்களின் மாமியர்யு மிருந்த ஆத்திகா என்பவர், தம்சகாதரோன அபூதாலிபிடம்வந்து உட்சார்ந்தார். உட்கார்ந்தபின் சகோதாரைப்பார்த்து "ஏன் இன்று ஏதோ கவலையுள்ளவராகத் தோன்றுகிறீர்? இப்படி மனம் விசனமுற்றிருப்பதற்கு காரணம் முக்கியமான ஓர் பெருங் காரியத்தைப்பற்றிய கவலையாயிக்குமோ" என்றனர்.

அதற்கு அபூதாலிபு, ஒன்று மில்லை என்று விடையளித்து, நீர் இப்போது இங்கு வந்த காரணம்யாது என்று வினவினர். அதற்கு ஆத்திகா, "சோதர முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) இப்போது வாலிப பருவத்தை அடைந்திருக்கிறார். வயது இருபத்தைந்தாய்விட்டது. அவருக்கு ஒரு பெண்ணைப்பார்த்து கலியாணம் ஏன் செய்விக்காமலிருக்கிறீர், என்றனர். அதற்கு அபூதாலிபு," அம்மா! அந்த எண்ணம் எனக்கு மிருக்கிறது. ஆயினும் நான் என்ன செய்வேன். சரி சமானமல்லாத குடும்பத்தில் அவருக்கு நிகாஹு செய்விக்க எனக்கு இஷ்ட மில்லை. சமவரிசை யுள்ளவர்களில் செய்விக்கலா மென்றால் அதற்குத் தக்க நிதியில்லை. நீர் பிரத்தியக்ஷமாகப், பார்க்கிறீர் பஞ்சத்தின் கடினமும் வெயிலின் தீட்சண்ணியமும் காலாபக்கமும் பரவியிருக்கிறது. அதுவோ அவரவர் எண்ணியிருக்கும் எண்ணங்களும் ஆசைகளுமான விருட்சங்களை எரித்துக் கரித்துவிடுகிறது. காலநிலைமை இப்படி யிருப்பதுடன் கையில் காசில்லாத தோஷமும் தொடர்ந்திருக்கிறது. இப்படியான சந்தர்ப்பத்தில் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமு) டைய கல்யாணம் எவ்விதமாகச்செய்விக்க விரும்பு கிறேனே அவ்விதமாகச் செய்விக்க இயலாதவனா யிருக்கிறேன்' என்றார்.

அதற்கு ஆத்திகா, இப்போது கதிஜா தன் வர்த்தக சரக்கை சிரியா நாடுகளுக்கு அனுப்ப சித்தமா யிருக்கிறார். அவருக்கு ஒரு நம்பிக்கையுள்ள அமீன் வேண்டுமென்கிறார். நீர் உத்தரவு கொடுத்தால் நான் அவரிடம் போய் பேசுகிறேன் என்றார். இது முந்தியே அபூதாலிபுடைய மனதிலிருந்த எண்ணமாதலால் அவர்

உடனே ஆத்திகாவை நோக்கி, அம்மா! நீர் அப்படிச் செய்வது நல்ல காரியம்; என்கினும் ஒரு பக்துவினுல் அடையும் நன்றிகளான உபகாரச் சுமையை தாக்கிக்கொள்வது எனக்கும் பெரிய வெட்கமா யிருக்கிறது. ஆயினும் தற்சமயம் இதைத் தவிர வேறு யாதொரு வழியும் தென்படக் காணும் என்று சொன்னூர்.

எனவே ஆத்திகா, கதிஜாவினிடம் வந்தனர். கதிஜா அவரை மிகவும் மரியாதையுடன் உட்காரவைத் உபசரிப்பு செய்தார். பிறகு அவரை நோக்கி, அறபு குல நாயகி! தாங்கள் இவ்வளவு தூரம் வருவதற்கு சிரமம் எடுத்துக் கொண்ட காரணம் யாதோ? என்றனர்.

அதற்கு ஆத்திகா, அவரை நோக்கி என் சகோதரராகிய அப்துல்லாவுடைய புத்திரர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்ற பெயருள்ள ஒரு பிள்ளையிருப்பது உமக்குத் தெரிந்திருக்கலாம். அந்தப் பிள்ளையை என் தகப்பனர் அப்துல் முதலிபு சிறிது நாள் மிக்க அன்புடன் பரிபாலித்து வந்து, அவர் மரணமாகும் போது என் சகோதரர் அபூதாலிபிடம் அவரை ஒப்புக்கொடுத்துப் போனூர். இப்போது அந்த பிள்ளை கல்யாணம் செய்யத்தக்க வாலிப பருவத்தை அடைந்திருக்கிறூர். ஆனல் இப்போது எங்கள் வர்த்தக காரியம் க்ஷீணித்திருப்பது உமக்குத் தெரியும். என் சகோதரர் அபூதாலிபு பலம்குன்றினவரா யிருப்பதால் ஒன்றை செய்யவும் வைக்கவும் தகுதியற்றவரா யிருக்கிறூர். உங்கள் வர்த்தக வேலைகளை நடத்திவர ஒருவர் உங்களுக்குத் தேவையென்று கேள்வி படுகிறேன். உமக்குச் சித்தமானல் என் சகோதரர் பிள்ளையை அந்த வேலைக்கு வைத்துக் கொள்ளுங்கள். பனூ ஹாஷிம்களாகிய நாங்கள், உங்கள் நன்றியறிந்து உங்கள் உபகாரத்தை எப்போதும் மறவாமல் நினைப்பவர்களா யிருப்போம் என்றனர்.

இதற்கு முன்னே ஒருபோது, கதீஜா பெருமாட்டி ஒரு சொர்ப்பனங் கண்டிருந்தார். அதெவ்வாறெனின்: வானத்திலிருந்து சந்திரன் வந்து தமது மடியில் விழுந்ததாகவும், அதன் ஒளி உலக மெங்கும் பிரகாசித்ததாகவும் கண்டார். உடனே இந்த சொர்ப்பனத்தை யெழுதி புஹைரா என்ற பெயருடைய ஒரு கிறிஸ்துவ

சன்னியாசியினிடம் அனுப்பினர். அந்த சன்னியாசியோ ஆருடம் சொல்வதில் தனக்கு நிகரில்லாதவன் அதற்கவன் எழுதியனுப்பின ஜவாபானது :—அறபு குலத்திற் சிறந்த சீமாட்டியே! உலகத்தில் இப்போது பிரசன்னமாய்ப் போன அர்கிய காலத்து நபி (அலைஹிஸ்ஸலாம்) உன்னை மணந்து கொள்வார். அவரது மார்க்க வெளிச்சத்தால் உலகமெல்லாம் பிரகாசமாகும் இதுவே நினது சொர்ப்பனத்துக்குப் பலன் என்பதே.

ஆத்திகா, சொன்ன வார்த்தைகளைக் கேட்ட கதிஜா பெருமாட்டிக்கு, அந்த கனவு நினைவில் வந்தது. அந்த சன்னியாசி சொன்ன ஆருடபலன் மெய்யா யிருக்கலாமென்ற ஓர் எண்ணம் பிறந்தது. ஆகவே, ஆத்திகாவை நோக்கி, அறபுகுல நாயகி! முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) உடைய நற்குணங்களையும் நன்னெறியையும் நம்பிக்கையையும் குறித்து நான் இதற்கு முன்னேயும் அநேகமாய் கேள்விப்பட்டிருக்கிறேன் தங்கள் சிபார்சை நான் அங்கீகரித்தேன் தாங்கள் அவரை அனுப்புங்கள். மற்றவரின் சம்பளத்தைப் பார்க்கிலும் அவருக்கு நான் அதிக சம்பளம் கொடுப்பேன். நான் அவருக்கு உபசரித்ததாக அல்ல, அவர் எனக்கு உபகாரஞ் செய்ததாக எண்ணுவேன். ஆனால், அவர் வர்த்தகத் தளவாடத்துடன் கூடிப்போவதற்கு முன்னே நான் அவரிடம் கொஞ்சம் பேசவேண்டியதா யிருக்கிறது. ஆதலால் தாங்கள் இப்போதே அவரை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டு வருவது நலமாகும் என்றனர்.

ஆத்திகா தம் வீட்டுக்கு வந்து, அபூதாலிபிடம் எல்லா சங்கதிகளையும் சொல்லிக் காட்டினர். அதைக் கேட்டு அவரும் சந்தோஷமானர். பின்பு ஆதிகா சர்வலோகத்தின் சர்தாராகிய நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை அழைத்து, அவர்களுக்கு நல்ல நல்ல ஆடைகளை யுடுத்தித் தம்மோடு கூட அழைத்துக் கொண்டு, கதீஜா பெருமாட்டியின் மாளிகைக்கு சேகினர்.

இங்கு கதீஜா பெருமாட்டி தமது வீட்டை அழகாக அலங்கரித்து, ஓர் ஆசனத்தின் மீது உட்கார்ந்து, எதிரில் மெல்லிய

திரைச் சீலையை தொங்கவிட்டு தவுருத் வேதத்தை முன்னல் வைத்துக் கொண்டு நபியவர்களின் வருகையை எதிர்பார்த் திருந்தனர்.

கொஞ்ச நேரத்திற் குள்ளாக பெரியானுக்குப் பிரியரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் ரிஸாலத் தென்னும் பேரொளியின் அடையாளங்களும் நுபுவ்வத் தென்னும் நுண்ணிய இரகசியத்தின் குறிகளும், தங்கள் விசாலித்த நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்க, கதீஜா பெருமாட்டியின் இல்லத்தில் பிரவேசித்தார்கள். அவர்களுடன் ஆத்திகாவும் இருந்தார்.

கதீஜா பெருமாட்டியும் அவரது வேலைக்காரர்களும், நபிகள் பெருமானுக்கு மரியாதையாக எழுந்து நின்று வரவேற்றனர் கதீஜா பெருமாட்டிக்குப் பேச நாவெழவில்லை. ஆயினும் அவர் ஆத்திகாவை நோக்கி, "குறைஷிகுல நாயகி! என் வர்த்தக சரக்குகள் பிரயாணத்திற்குத் தயாரா யிருக்கின்றன. தாங்கள் இவர்களை வீட்டுக்கழைத்துக் கொண்டு போய், உடனே அனுப்பி விடுங்கள். இவர்கள் வர்த்தகத் தளவாடத்துடன் போகட்டும். இவர்களுக்கு சம்பளமாக நான் இரண்டு ஒட்டகங்கள் தருவேன் என்று இம்மட்டே பேசினர்.

ஆத்திகா தங்கள் சகோதரின் புத்திர ரான அராதைப் பிள்ளை யை பின்பு வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் யாத்திரையில் உடுக்கத்தக்க உடைகளை யுடுத்தினர்கள். ஹஸரத் அவர்கள் தங்கள் பெரியபிதா மாமி முதலானவர்களிடத்தில் விடை பெற்றுக் கொண்டு கதீஜா பெருமாட்டியினிடம் வந்து ஓர் பக்கத்தில் மௌனமாகஉட்கார்ந்து விட்டார்கள்.

கதீஜா பெருமாட்டி மைஸரா வென்னும் தம்அடிமையைக் கூப்பிட்டு, "மைசராவே! இதோ பார், முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்) உன்னுடன் வருகிறார்கள். அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் உண்டாகாதபடி பார்த்துக் கொள். உன்னை அவர்களின் ஊழியனக எண்ணிக்கொள்ள வேண்டும். வழியில் எந்த விடத்திலும் அவர்களை விட்டுப் பிரியக்கூடாது. அவர்களின் அபிப்பிராயத்தை அங்கிகரிக்க வேண்டும். போஜனபானங்களைப் பற்றி கவனிக்க வேண்டும். இரவும் பகலும் அடிமைப்போல்

அவர்களின் பணிவிடையிலும் உபசரிப்பிலும் பராக்காயிருக்க வேண்டும். ஹாஷிம் குலப்பெரியோர்களின் முன் என்னை வெட்கமடையும்படிச் செய்து விடாதே. நீ யாத்திரையில் அவர்களின் மனதுக்குத் திருப்திகரமாக நடந்து கொள்வாயானல் நான் உன்னையும் திருப்திப் படுத்துவேன். இது மாத்திரமல்ல. நீ இந்த அடிமைத் தனத்திலிருந்து நீங்கி உரிமை பெறுவதும் ஓர் ஆச்சரியமல்ல'' வென்று சொன்னார்கள்.

பின்பு மைசராவினிடம் விலையுயர்ந்த ஓர் போர்வையைக் கொடுத்து உயர்ந்த சாமான்களால் சோடனை செய்யப்பட்ட ஓர் ஒட்டகத்தையும் அவர் வசம் ஒப்புவித்து, ''ஏ மைஸரா! மக்கா ஷரீபை விட்டு வெளியில் புறப்படும் போது ஒட்டகையின் மூக்கணாங்கயிற்றை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் கையில் கொடுக்க வேண்டும். ஆனல் ஊரையும் உறவின் முறையாரையும் விட்டுத் தூரமாய் போனல் அப்போது இவர்களை இந்த ஒட்டகையின் மீது ஏற்றி நீ அதன் மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, பாகன் போல் முன்னே செல்ல வேண்டும்'' என்று ஆக்ஞாயாபித்தனர். அதற்கு மைஸரா, ''ஏ அறபு குலத் தாசியே! தாங்கள் ஆக்ஞாயாபித்தபடி நான் நடந்து கொள்வேன். ஆண்டவன் துணை செய்ய வேண்டும். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு எவ்வித சிரமமும் கொடேன். தாங்கள் கவலைபற்று நிம்மதியா யிருங்கள்'' என்றார்.

பின்பு மைஸரா வர்த்தக சரக்குகளை ஒட்டகங்களின் மீது ஏற்றி, மூக்கணாங்கயிற்றை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் கையில் கொடுத்து மக்காவிலிருந்து பிரயாணமானர். புறப்படும் ஸ்தானத்தில் தங்கள் பந்துமித்திரர்களைப் பிரயாணப் படுத்தி அனுப்புவதற்காக வந்திருந்த ஊர் ஜனங்கள் அநேகர் கூட்டமாயிருந்தார்கள். அவர்கள் அப்துல்லாவுடைய புத்திரரான நாயகமவர்களை இந்த நிலைமையில் கண்டு மிகவும் துக்கித்தார்கள். அவர்களின் யாத்திரை கோலத்தின் மீது பரிதபித்துக் கண்ணீர் சொட்டத் தொடங்கினர்கள். அபூதாலிபும் ஆத்திகாவுங்கூடத் தங்கள் பிள்ளையைப் பிரயாணப்படுத்தி அனுப்ப அங்கு வந்திருந் தார்கள். பிள்ளைக்குப் பாதரக்ஷை யில்லாமல் வெறுங்காலா யிருப் பதையும், அவர்கள் கையில் ஒட்டகங்களின் மூக்கணாங்கயிறு

இருப்பதையுங் கண்டு, ஆத்திகா தனக்கும் தெரியாதபடி அழத் தொடங்கி விட்டனர். ஆ! என்று அலரி சப்தமிட்டு ஏ அப்துல்லா! நீர் உமது மண்ணறையான குழியிலிருந்து தலையைத் தூக்கும். உம்முடைய அருமந்த புத்திரரின் நிர்பாக்கிய நிலைமையைப் பாரும். அப்துல் முத்தலிபே! நீர் உமது கபுறை விட்டு வெளியில் வாரும். நீர் எவருக்கு இன்பசுகங்களை யூட்டி வளர்த்திரோ அவர் இன்று அடிமைகளைப் போல் ஒட்டகங்களின் கயிற்றை கையிற் பிடித்தவராய் யாத்திரைக்குத் தயாரா யிருப்பதைப் பாரும். ஏ ஆமினுவே! நீர் எங்கே யிருக்கிறீர்? உமது சால்குலை யாத்திரைக் கோலமான வேடிக்கையைப் பார்த்துக் கொள்ளும்" என்று புலம்பலுற்றார்! அபூதாலிபுடைய கண்களும் விசனமான கண்ணீரால் ததும்பிக் கொண்டிருந்தன. அவர் அடிக்கடி ஹலரத்அவர்களின் முகத்தைப் பார்ப்பதும் நீர்த் ததும்பும் தமது கண்களைத் துடைத்துங் கொள்ளுவதுமா யிருந்தார். வானலோகத்திலோ மலக்குகள் முறையிடத் தொடங்கினார்கள். எல்லோரும் ஏ சர்வலோக நாயகா! நீ எவரை நபியாக்கி யிருக்கிறாயோ, இன்னும் எவரை இஸ்லாமுக்குத் தலைவராய் ஏற்படுத்தினாயோ, இன்னும் எவர் மீது ரிஸாலத்தையும் நுபுவத்தையும் பூர்த்திசெய்யப் போகிறாயோ, அவருடன் இக்காலம் இதென்ன நடவடிக்கை நடத்திக் கொண்டிருக்கிறது?" என்று சொல்லுகிறவர்களா யிருந்தார்கள். அப்போது அவர்களுக்குப் பிறந்த உத்திரவாவது, ஏ மலக்குகளே! நமக்குத் தெரிந்தது உங்களுக்குத் தெரியாது. இதிலும் ஓர் இரகசியம் மறைந்திருக்கிறது" என்பது தான்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் கண்ணீர் சொரிந்தவர்களாய்த் தங்கள் பந்துமித்திரர்களிடஞ் சொல்லிச் சொல்லிப் பிரயாணத்துக்கு விடைபெறுகிறவர்களா யிருந்தார்கள். அபூதாலிபோ இங்கு தளவாடத் தலைவரைப் பார்த்து "தம்பீ! இந்தப்பிள்ளை எத்திம் வழிநடப்பின் வழக்கம் தெரியாதவர். இவர் மேல் கொஞ்சம் கவனம் வைக்கவேண்டும். கூடியவரையில் இவருக்கு எவ்வித கஷ்டமும் உண்டாகாத வண்ணம் பார்க்க வேண்டுமென்று எச்சரித்தார்கள். எனவே ஆத்திகாவோடு

அபூதாலிபோடும் எல்லா ஜனங்களும் மக்காவுக்குத் திரும்பி விட்டார்கள். இந்தத் தளவாடமும் பிரயாணமாய் விட்டது

## ரஸூல் நாயகமவர்கள் ஷாம், மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போதல்.

வர்த்தகத் தளவாடம் பட்டணத்தின் எல்லையைத் தாண்டி வெளியே போய்விட்ட போது, கதீஜா பெருமாட்டியின் உத்தரவுப் படி மைஸரா, அந்த விலையுயர்ந்த போர்வையை ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் திருமேனியில் சாற்றி ஜோடனை செய்யப்பட்ட அந்த ஒட்டகையின்மேல் அவர்களை உட்கார வைத்துஅதன் மூக்கணாங்கயிற்றைத் தன் தோள்மீது போட்டுக் கொண்டார். இந்த தளவாடத்தின் கூடவே ரஸூல்நாயகமவர்களுக்கு சத்துருக்களாயும் ஜென்ம விரோதிகளாயு மிருந்த அபூஜஹலும் உக்பாவும் ஷைபாவு மிருந்தார்கள். அவர்கள் ரஸூல் நாயகமவர்களுடன் மைஸரா நடந்து கொள்ளும் நடவடிக்கைகளைப் பார்த்து மைஸராவை நோக்கி "ஏ மைஸரா! இவனொரு ஏழைப் பையனாயிருக்கிறான். இவன் உனக்கு அடிமையைப்போல் அடங்கியிருக்கும்படி இவனுக்கு கந்தையான முரட்டுத்துணியை உடுக்கக் கொடு. இவனுக்கு யாத்திரையின் கஷ்டங்கள் தெரிந்து அனுபவமாகும்படி, கடினமான வேலைகளைச் செய்யச்சொல்" என்றார்கள். அதற்கு மைஸரா, "நான் உங்களுக்கு அடிமையல்லேன். கதீஜா பெருமாட்டியின் அடிமையாயிருக்கிறேன். என் எஜமாட்டி எனக்கிட்ட கட்டளைப்படியே நான் நடந்து கொள்வேன்" என்றார்.

கதீஜா பெருமாட்டியின் பந்துக்களில் ஒருவரான கஸீமத்துபுனுல் ஹகம் என்பவரும் இந்தயாத்திரையில் ஹஜரத் அவர்களுடனிருந்தார். இந்த தளவாடம் நேரே மிஸ்ரை நோக்கிச்சென்றது. நடுவழியில் இரண்டொரு ஒட்டகம் நடக்க இயலாமல் கால் சோர்ந்திருந்து விட்டன. கூடியவரையில் பிரயாசைப்பட்டும் அவைகளின் கால் எழவில்லை. கடைசியாக ரஸூல் நாயக மவர்கள் தங்கள் ஒட்டகையிலிருந்து கீழே இறங்கி சோர்வடைந்த அந்த ஒட்டகங்களின் உடம்பின்மேல் தங்கள் திருக்கரத்தை வைத்தார்கள். ஆண்டவனுடைய வல்லமையினால் அந்த ஒட்டகங்களுக்கு சோர்வு நீங்கி சுறுசுறுப்புண்டாகி சரேலென்று நடக்கத்

தொடங்கி தளவாடத்திலிருந்த எல்லா ஒட்டகங்களுக்கும் முன்னே நடந்து சென்றன. இதைக்கண்ட கஸீமாவும் மைஸராவும் பிரமித்திருந்து விட்டார்கள். அவர்களின் மனதில் நபியவர்களின் மதிப்பும் மரியாதையும் முன்னிலும் அதிகமாய்விட்டன.

இந்த வர்த்தகதளவாடம் மிஸ்ருடைய எல்லைகளில் பஸராவை நெருங்கிச் சென்றபோது, ஓரிடத்தில் தங்குவதற்கு ஒட்டகங்கள் அவிழ்த்து விடப்பட்டன. அதற்குச் சமீபமாகவே நஸ்தூரா என்ற ஒரு கிருஸ்துவ சன்னியாசியின் மடமிருந்தது. அந்த மடத்தருகில் உலர்ந்துபோன ஒரு மரமிருந்தது அந்த மரத்தின் கிழே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உட்கார்ந்தார்கள். அவர்கள் உட்கார்ந்த அந்த க்ஷணமே அந்த மரம் துளிர்த்துத் தழைத்துவிட்டது. இதைப்பார்த்த நஸ்தூரா ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஓடிவந்து, ஒரு முறை ரஸூல் நாயகமவர்களை உற்றுப்பார்பவனும் ஒருமுறை புத்தகத்தைத்திறந்து பார்ப்பவனுமிருந்து, கடைசியில் அடக்க முடியாமல் சப்தமிட்டு "இயேசுநாதருக்கு இன்ஜீலை அனுப்பின உன்னதப் பெருமையுள்ள தேவன் மேல் ஆணையாக! பரிசுத்த வேதங்களில் எவரைக்குறித்து முன்னறிக்கைகள் கூறப்பட்டனவோ அவர் இவர்தான்" என்று சொல்லத்தொடங்கினன். பின்பு ஹஸரத் அவர்களைப்பார்த்து "ஏ மக்காவாசியே! நான் லாத்து. உஸ்ஸா என்னும் சுவாமிகளின் மேல் ஆணையிட்டு உம்மைக் கேட்கிறேன், உம்முடைய பெயரென்ன சொல்லும்" என்றான் அப்போது ஹஸரத் அவர்கள் அதிக கோபமாய் அவனை நோக்கி பார்த்து, "ஏ துர்ப்பாக்கியனே! தூரப்போ. எனக்கு லாத்து உஸ்ஸாவினும் மிகக்கெட்டது வேறொன்றில்லை" என்றார்கள்.

இவ்விதமாகத் தங்களின் கோபங் கலந்த சப்தத்தை கஸீமா கேட்டு உடனே வாளையுருவிக்கொண்டு சமுகத்தில் வந்து விட்டார். அந்த சன்னியாசியை சங்கரிக்கநாடினர். அவன் சரேலென்று ஒரே ஓட்டமாக ஓடி மடத்துக்குள் நுழைந்து, கதவைச்சாற்றி தாழ்ப்பாள் போட்டுக் கொண்டான். பின்பு மடத்தின் மெத்தைமேல் வந்து சப்தமிட்டு "ஓ தளவாடக்காரரே! நீங்கள் என்னைப் பற்றி அச்சப்படவேண்டாம். ஆண்டவன் மேல் ஆணையாக, உங்களினும் நல்ல ஒரு தளவாடம் இதுவரையில் இங்குவந்ததில்லை.

எல்லாவற்றிலும் நீங்கள் எனக்கு அதிக பிரியமுள்ளவர்களா யிருக்கிறீர்கள். இதோ இந்த மரத்தடியில் உட்கார்ந்திருப்பவர் அந்தியகாலத்து நபியென்றும் எல்லா நபிகளுக்கும் முத்திரை யென்றும் இவரைப் பின்பற்றினவனுக்கு ஈடேற்றம் கிடைக்கு மென்றும், இவருக்கு வழிப்படாதவன் கொடிய நரகில் வீழ்வா னென்றும் எங்கள் வேதத்தில் எழுதுப்பட்டிருக்கிறது. நான் இவ ரைத்தரிசிக்க ஆசைகொண்டு ஒருநீண்ட காலமாக இங்கு வசித்து வருகிறேன். அல்ஹம்து லில்லாஹ்; இன்று அந்த ஆசை நிறைவேறி விட்டது. ஆஹா இவருடைய நுபுவ்வத்தின் காலம்வரையில் என் மூச்சு இருக்கவேண்டுமே. அது வரையில் என்வயது நீடித்தால் நானும் இவருடைய மார்க்கத்தைத் தழுவிக்கொள்வேனே. ஏ ஜனங்களே! நபியே யன்றி வேறு எவரும் இந்த மரத்தடியில் உட் காரவே முடியாதென்று வான வேதங்களில் வரையப் பட்டிருக் கிறது" என்று சொன்னான்.

பின்பு நஸ்தூரா, கஸீமாவை நோக்கி, உமக்கும் இவருக்கு மிருக்கிற சம்பந்த மென்னவென்று விசாரித்தான். அசற்கு கஸீமா நான் இவர்களுக்கு ஊழியனா யிருக்கிறேனென்று சொல்லி, பின்பு யாத்திரையில் ஹஸரத் அவர்களால் வெளியான எல்லா சங்கதி களையும் எடுத்தோதினர். நஸ்தூராவென்னும் சன்னியாசி இவை களைக்கேட்டு, கஸீமாவே யூதர்கள் இவருக்குப் பெரிய விரோதி களாயிருக்கிறார்கள். அவர்களால் விளையும் தீங்குகளுக்கு எப் போதும் அச்சமுற்றிருக்கவேண்டும். நீங்கள் ஷாமுக்கு (சிரியாவுக்கு) போகவேண்டாம். இவர் நபியாயிருக்கிறார். கடைசியில் தப்பான மதங்களையெல்லாம் அழித்து நாசமாக்கி ஒரு சத்திய மார்க்கத்துக்கு இவர் அஸ்திபாரம் போடுவார். இராக் அரபு முதலான எல்லா தேசங்களையும் ஜெயித்து வெற்றிகொள் வார் என்றான். சன்னியாசி, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்மேல் உயிரைவிடுகிறவனா யிருக்கிறானென்று அறிந்த போது, கஸீமா தமது வாளை உறையிலிட்டுக்கொண்டு ஹஸரத் அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். கஸீமாவின் மனதில் தன்னைப்பற்றி நல்ல எண்ணத்தை யுண்டாக்கி பின்பு நஸ்தூரா மெத்தையிலிருந்து இறங்கி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சமுகத்தில் வந்தான். அப்போது

அவன் கையில் ஒரு பட்டுத்துண்டு இருந்தது. அதை அவன் அடிக்கடி பார்ப்பனாயிருந்தான். ஒரு சமயம் அவன் கண்களில் நீர் ததும்பும். ஒரு சமயம் அவன்முகம் புஞ்சிரிப்பான குறிகளால் பிரகாசிக்கும். கொஞ்சநேரத்திற்குப் பிறகு அவன் மிக்க ஒழுக்கத்துடன், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடத்தில் வணங்கி சொல்லத் தொடங்கினதாவது, “நான் தங்களிடத்தில் சில குணாதிசயங்களைப் பார்க்கிறேன். அக்குணங்களை நான் இதுவரையில் எவரிடத்தும் கண்டதில்லை. கர்த்தர் தேமானிலிருந்து எழும்புவார் என்று முன்னறிவிக்கையாய் வேதத்தில் கூறியுள்ள அந்த நபி தாங்களென்றே நான் முழுநம்பிக்கையாய் நம்புகிறேன். மனிதர்கள் அதிக ஆவலுடன் கூட்டங் கூட்டமாகவந்து தங்களிடம் சேர்வார்களெனக் காண்கிறேன். நான் தங்கள் மித்திரர்களை நேசிக்கிறேன். தங்கள் சத்துருக்களை என் பகைவர்களாக நினைக்கிறேன்” என்பதே.

நஸ்தூரா சொன்னபடியே கஸீமாவும் மைசாராவும் ஷாம் (சிரியாவுக்குப்) போகிற எண்ணத்தை விட்டுவிட்டார்கள். அந்த பஸராவின் பஜாரிலேயே சரக்குகளை விற்றுவிடலாமென்றெண்ணி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிஸல்லமவர்களுடன் பஸராவுக்கு பிரயாணமானார்கள். இவர்களின் வர்த்த சரக்கு மற்றவர்களுடைய சரக்குகளுக்கு முன்னதாகவே விற்பனையாய் விட்டது. இதற்கு முந்திய ஒவ்வொரு வருஷத்தின் லாபத்தைவிட அதிக இரட்டிப்பான லாபம் கிடைத்தது. சரக்குகளை விற்பதில் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளவும் இல்லை.

---

## மக்கா ஷரீபுக்குத் திரும்பல்.

வர்த்தக சரக்குகள் இவ்வளவு சுலபமாக விற்பனையாகி, மற்ற விபாபாரிகளும் ஹஜரத் அவர்களின் பரக்கத்தால் தங்கள் சரக்குகளைத் துரிதமாக விற்றுவிட்டபடியால் இனி இவ்விடத்தில் தங்குவது சரியல்லவென்று நினைத்து, இந்த வர்த்தகத் தளவாடம் மக்கா ஷரீபுக்குப் பிரயாணமாய்விட்டது. ஒவ்வொரு மன்ஜிலையும் கடந்து, மக்கா ஷரீபிலிருந்து மூன்றுநாள் பிரயாணதூரத்திலிருக்கிற மர்ருல் ளஹ்ரான் என்ற ஓர் ஜாகையில் வந்து தங்கினார்கள். அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹுவும் இந்த தளவாடத்

திலிருந்தார்கள். அவர்கள் மைஸராவை நோக்கி, "மைஸராவே! தளவாடம் வந்த சேதியை வழக்கப்படி கதீஜாவுக்கு அறிவிக்கும் பொருட்டு, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமை அனுப்பு என்று சொன்னார்கள். மைஸரா உடனே ஒரு ஒட்டகத்தை ஆபரணங்களால் அலங்கரித்தார். அவரை நோக்கி அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு "ஏ மைஸரா! ஒட்டகத்தை இப்படி அலங்கரிப்பதற்குக் காரண மென்னவென்று கேட்டார்கள். அதற்கு மைஸரா, அறபு குலத்தரசியான கதீஜா பெருமாட்டி ஒரு வழக்கத்தை நெடுகிலும் நடத்திவருகிறார். அதாவது தளவாடம் வந்த சேதியை அறிவிக்கிற தூதன் எந்த ஒட்டகையின்மேல் ஏறிச் செல்லுகிறானோ அந்த ஒட்டகையை அந்த தூதனுக்கே கொடுத்துவிடுவார். ஆதலால் ஆபரணுதிகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த ஒட்டகம் அப்படியே முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குக் கிடைக்கவேண்டு மென்று நான் விரும்புகிறேன்" என்றார். இதைக் கேட்டசத்துருவான அபூஜஹல், மைஸராவை நோக்கி, "முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) இன்னும் மக்காஷரீபின் வழிதுறைகள் தெரியாத வராயிருக்கிறார். இந்த ஒட்டகத்தின்மேல் வேறு எவரையாவது ஏற்றி அனுப்பு. துரிதமாகப் போய்ச் சேதியைத்தெரிவிக்கட்டும். இவர்போனால் ஒருசமயம் எங்கேயாவது வழி தெரியாமல் திசை தப்பி அலைந்து கொண்டிருப்பார். நமது தளவாடம் நெடுநாள் இவ்விடத்திலேயே விழுந்து கிடக்க நேரிடும்" என்று சொன்னான். இவன் வார்த்தையை மைஸரா இலட்சியம் பண்ணாமல் ஹஸரத் அவர்களை ஒட்டகையின்மேல் உட்காரவைத்து மக்காஷரீபுக்குப் பிரயாணப்படுத்தி அனுப்பி விட்டார்.

ஒட்டகம் வழியைக் கடந்து செல்லும்போது, ஹஸரத் அவர்களுக்கு திடீரென நித்திரை மேலிட்டது. ஒட்டகம் வழியை மறந்து விட்டது. இருளான இரவாயிருந்தது. ஒட்டகம் வழி தப்பி வேறுவழியில் நடந்துபோய்க் கொண்டிருந்தது. அப்போது அல்லாஹு தஆலாவின் உத்திரவினால் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அங்குவந்து, அந்த ஒட்டகையின் மூக்கணாங்கயிற்றைப் பிடித்து அதைத் திருப்பி நேரான வழியில் விட்டுப்போயினர். பிறகு

அவர்கள் கண்விழித்தபோது தங்களை மக்கா ஷரிபிலிருக்கக் கண்டார்கள்.

ஸஹீஹான ஹதீஸில் வந்திருப்பதென்ன வென்றால், "நான் அல்லாவினிடத்தில் ஒன்றைக்கேட்டு அதற்கு ஜவாபு கிடைத்த பின், ஆ! நான் ஏன் கேட்டேன் என்று எனக்கு வெட்க முண்டாயிற்று" என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். அதாவது நான் அல்லாவினிடத்தில் "என் ஆண்டவனே! நீ மூசா அலைஹிஸ்ஸலாமுக்கு உன்னிடம் வசனிக்கும் பரிவட்டத்தைப் போர்த்தினாய். சுலைமான் அலைஹிஸ்ஸாலமுக்குப் பெரிய இராஜ்ஜியத்தைக் கொடுத்தாய், அவர்களுக்குக்கெதிரில் எனக்கு என்னென்ன அருளப்பட்டன என்று கேட்டேன். அதற்கு அல்லாஹு தஆலா, ஏ முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) தந்தையை இழந்த அநாதைப்பிள்ளைகள் ஜனங்களின் பார்வையில் தாழ்வுற்றிப்பதும் அந்த அநாதைகளின் மனதை எவரும் சந்தோஷப்படுத்தாம லிருப்பதும் உமக்குத்தெரியாதா? நீர் அப்துல்லாவின் அநாதைப் பிள்ளையா யிருந்தீர். நான் உமக்குப் பெருமையைக் கொடுத்தேன். அப்துல் முத்தலிபு, அபூதாலிபு இவர்களுடைய மனதில் உமது பிரியத்தைப்போட்டேன். அவர்கள் தங்கள் உயிரையும் பொருளையும் உமக்கு அர்ப்பணம் செய்தார்கள். பகைவர்களின் தீங்குஅணுகாமல் அவர்கள் உம்மைப் பாதுகாத்தார்கள். இதவுந் தவிர நீர் ஷாம் யாத்திரைப்போய்த் திரும்பின காலத்தில் உமது ஒட்டகம் வழித்தப்பிப் போனதும் பின்பு நாம் ஜிப்ரயீலை அனுப்பினதும் அவர் உமது வேலைக்காரனைப்போல் ஒட்டகையைத் திருப்பி உம்மை நேர்வழியில் தரிசனம்கொண்டு வந்ததும் உமக்குத் தெரியாதா? ஜிப்ராயீலுடைய தரிசனம் நுபுவத்துக்கு முன் எந்த நபிக்கும் வாய்க்கவில்லை. எல்லா நபிமார்களும் தங்களுக்கு நபிபட்டம் வந்தப் பிறகே அவரைத் தரிசித்தார்கள். உமக்கு நபிபட்டம் வருகிறதற்கு முன்னமே அவர் உமது ஊழியராக்கப்பட்டார். இதுவுமன்றி நீர் சொத்து சுதந்திரமில்லாத சுத்த ஏழையாயிருந்தீர். பின்பு கதீஜாவின் பொருளைக் கொண்டு நாம் உம்மைதனவந்தராக்கினோம். இது உமக்குத் தெரியாதா?" என்று இவ்விதமாகவிடையளித்தான் —என்பதே.

"அவன் உம்மை வழி தப்பினவராகக்கண்டு உமக்கு வழிகாட்டினுன்" என்று அல்லாஹு தஆலா அருளின இந்த ஆயத்தானது மேலே கூறிவந்த சம்பவமான வழிகாட்டலேயே குறிக்கின்றது. இதுவுமின்றி ரஸூல் நாயகம், தங்கள் அன்னையின் அரவணைப்பான தொட்டிலில்கூட அவர்கள் வழிதப்பினவர்களா யிருந்த தில்லை. வழி தப்பின ஓர் குடும்பத்தில் அவர்கள் பிறந்து தங்கள் வாழ்நாளில் அதிக பாகத்தை மூட இருள்மலிந்திருந்த காலத்தில் கழித்தவர்களாயிருந்த போதிலும், ஆதியின் வழிகாட்டலால் அவர்கள் மனோ முகம் சோதியுற்றிருந்தது. அவர்களுக்கு எவரும் வழிகாட்டவேண்டிய அவசிய மிருந்ததில்லை.

இது நிற்க, இங்கு அல்லாஹ்றுடைய ரஸூல், வர்த்தகத் தளவாடம் வந்த நற்செய்திகூற கதீஜா பெருமாட்டியின் மாளிகையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அங்கு கதீஜா நாயகி தம் தோழிகளுடன் மாளிகையின்மீது உட்கார்ந்து தளவாடத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு தோழி நபீஸா சொல்வதாவது:— அந்த தினத்தில் நானும் கதீஜா பெருமாட்டியிடம் இருந்தேன். அவர் வர்த்தகத் தளவாடம் எப்போது வருமென்ற ஏக்கத்தினுல் கிலேசமுற்றிருந்தனர். அப்போது அவர் நாவிலிருந்து வந்துகொண்டிருந்த ஆசைச் சொற்களாவன:—

"அன்பரே, நீர் திரும்பிவரவேண்டும். உமது காலை நான் முத்தமிடவேண்டுமே. சாஷ்டாங்கம் சமர்ப்பித்து, உமது பாதாரவிந்தங்களில் படிந்த தூசியை நான் முகர்ந்து முத்தமிடவேண்டும். நீர் எத்தினத்திலாவது சற்று நேரமிருந்து இளைப்பாறின அந்த விடத்துக்கு நான் போகவேண்டுமே, சாஷ்டாங்கமாகப் பணிந்து அந்த விடத்தை நான் முத்தமிடவேண்டுமே. உமது அழகிய திருமுகத்தை என் இருதயத்தில் இதோ நான் பார்க்கின்றேன். மனோரஞ்சிதமான உமது கன்னத்தின், ஆசையின் செண்பகப்பூவையும், ரோஜாமலரையும், நான் முகர்ந்து முத்தமிடுகின்றேன். நான் ஒரு மானைக்காணுமிடத்தில் நீலோர்ப்பலம் போன்ற உமது கருவிழியின் ஆசையில் வெறிகொண்டவளாய், அந்த மானின் கண்களை முத்தமிடுவேன். நான் இல்லத்தின் மூலையில் இழிவுற்றிருக்கு மோர் ஏழை. நீரோ ஜகத்தை யாளும் சக்ரவர்த்தி. இதோ நான் என் கையை உமதாசையில்

முத்தமிடுகிறேன். இது எனக்கு இனிய சந்தோஷம்" என்பதாகும்.

அனல் காற்று வீசிக்கொண்டிருந்தது. வெய்யில் மிகவும் உக்கிரமாயிருந்தது. சூரிய வெப்பத்தினுல் ஒவ்வொரு பொருளும் கொதிப்பேறியிருந்தது. இருந்தாப்போலிருந்து, மின்னலைப் போல் அதிகவேகமாக வருகிற ஒட்டகத்தின்மேல் ஓர் சவார் தூரத்தில் வருவதைக் கண்டார்கள். நபீஸா சொல்வது:—ஒரு மேகப்படலம் அவர் சிரசின்மேல் நிழலிட்டுக்கொண்டிருந்ததை நாங்கள் எல்லோரும் பார்த்தோம். கதீஜா பெருமாட்டியோ முதலில் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பின்பு வேலைக்காரர்களை விழித்து, "ஜனங்களே! அனல்வீசும் அக்கினிபோன்ற இந்தக் கொடு வெயிலில் இவ்வளவு வேகமாக வந்துக்கொண்டிருக்கிற இவர் யார்?" என்று கேட்டனர். அவர்கள் உற்றுப் பார்த்து, "அம்மணி! அவர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) என்று எங்களுக்குத் தோன்றுகிறது" என்றுர்கள். கொஞ்ச நேரத்திற்குள்ளாக அந்த சவார் தெருவாசலில் வந்து சேர்ந்தார். பார்க்க, மெய்யாகவே அவர்கள் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களா யிருந்தார்கள்.

பின்பு ஹஜரத் அவர்கள் ஆசீர்வதித்து வர்த்தகத் தளவாடம் வந்திருக்கிற நற்செய்தியை கதீஜா பெருமாட்டிக்குத் தெரிவித்து மைஸராவின் கடிதத்தையும் கொடுத்தார்கள். அக்கடிதத்தில் எழுதியிருந்த வாசகம் யாதெனில்:—கோரிய கோரிக்கைகளை குறைவில்லாமல் நிறைவாயடைந்து நாங்கள் யாத்திரை யினின்று திரும்பி வந்து விட்டோம். முந்திய வருஷங்களில் கிடைத்த லாபத்தினும் இவ் வருஷத்திய லாபம் மிக்க அதிகமாயிருக்கிறது. நாங்கள் ஆசை வைத்திருந்த லாபத்துக்குமேல் அதிக லாபம் கிடைத்தது. இவையெல்லாம் முஹம்மது அலைஹிஸ்ஸலா மவர்கள் எங்களோடு கூட யிருந்த பறக்கத்தேயாம். மற்ற சங்கதிகளை சமுகத்தில் வந்து விண்ணப்பம் செய்வேன்" என்பதே.

கதீஜா பெருமாட்டி அத்தியந்த ஆனந்தமடைந்தனர். இந்த நற்செய்தியைத் தெரிவிப்பதற்கு ஹஸரத் அவர்கள் எந்த ஒட்டகத்திலேறி வந்தார்களோ அந்த ஒட்டகையை அதன் ஆபரணுதிகளுடன் அப்படியே ஹஸரத் அவர்களுக்கு இனும் கொடுத்து

விட்டனர். உடனே கடிதத்துக்கு பதில் எழுதித் தமது முத்திரையைப்பதித்து ஹஸரத் அவர்களிடம் கொடுத்து இந்தக் கடிதத்துடன் திரும்பித் தளவாடத்துக்குப்போய் மைஸராவுடன் மிகத் துரிதமாகத் திரும்பிவந்து சேரவேண்டும் என்றனர்.

கதீஜா பெருமாட்டியின் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஹஸரத் அவர்கள் பிரயாணமானார்கள். அல்லாஹ்வினது கிருபையினால் அதே தினத்தில் தளவாடம் போய்ச் சேர்ந்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் இவ்வளவு துரிதமாக வருவதைக்கண்ட அபூஜஹல், "மைஸராவே, முஹம்மது (அலைஹிஸ்ஸலாம்) வழி தெரியாதவரென்று நான் உனக்கு சொல்லவில்லையா? இதோபார் அவர் போகாமல் திரும்பி வருகிறார், அவர் இருக்கட்டும். வேறு யாரை யாவ ரை அனுப்பு" என்று சொன்னான்.

மைஸராவும் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹுவும் இதைக் கேட்டு, ஹஸரத் அவர்கள் வருவதைப் பார்த்து வெகுவாக யோசித்து, மெய்தான் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) வழி தெரியாமல் திரும்பி வருகிறார்களென்றே நம்பி விட்டார்கள். ஆனால் கதீஜா பெருமாட்டியின் முத்திரை பதித்த கடிதத்தை அவர்கள் மைஸராவினிடம் கொடுத்தபோது, அவர் சந்தோஷமடைந்து அபூஜஹலைப் பார்த்து "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் வழிதப்பவில்லை. நீ தான் வழிகெட்டிருக்கிறாய். கதீஜா பெருமாட்டியின் முத்திரை பதித்துள்ள கடிதம் இதோ இருக்கிறதுபார்" என்று சொன்னார். இதைக்கண்ட அபூஜஹல் வெட்கித் தலை குனிந்தான்.

பின்பு சொற்ப தினங்களில் தளவாடம் மக்காஷரீபுக்கு வந்து சேர்ந்தது. கஸீமாவும் மைஸராவும் தங்கள் யாத்திரை மார்க்கத்தில் கண்ட சகல அற்புதங்களையும் நஸ்தூரா சொன்னவார்த்தைகளையும் கதீஜா பெருமாட்டிக்கு விபரமாகச் சொல்லிக் காட்டினார்கள். அறபு குலத்தரசியான கதீஜா பெருமாட்டி (இவைகளைக் கேட்டு மிக்க சந்தோஷமுற்று) நபிகள் பெருமானுக்குக் குறித்த சம்பளத்துக்கு இரட்டிப்பான சம்பளங் கொடுத்தனர். மைஸராவுக்குப் பதினாயிரம் திர்ஹம்கள் கொடுத்ததுமன்றி அவரை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து உரிமையும் செய்து விட்டனர்.

## கதீஜாபெருமாட்டிக்கும் நபிகள் பெருமானாருக்கும் திருக்கல்யாணம்.

நப்பாஷ் பிரபுவும் அதீகு தனவானும் காலம் சென்றபிறகு கதீஜா பெருமாட்டி கல்யாண நினைவையே விட்டுவிட்டாரென்பதும், லெளகிக இன்ப சுகங்களின் எண்ணத்திலிருந்து தமது இருதயத்தை எடுத்து விட்டாரென்பதும் தெரிந்த விஷயம். ஆனால் குறிகூறும் மாதுகள், இந்த அறபு நாட்டில் ஒரு நபி பிரசன்னமாயிருக்கிறார் என்றும், அவர் தமது தீர்க்க தரிசன முத்திரையை உலகமெங்கும் பதிவு செய்து விடுவார் என்றும், பூர்வ மதங்களையெல்லாம் சத்தியமல்லாத சுத்த சூன்னியம்போல் அழித்து ஒழிப்பாரென்றும் சொல்லி வந்ததினாலும், இந்த நற்செய்தியின் அடையாளங்கள் ரஸூல் நாயகமவர்களின் நெற்றியில் இலங்கிக் கொண்டிருந்ததை கதீஜா பெருமாட்டி கண்ணுற்றதினாலும், நஸீமா, மைஸரா இவர்களின் வாய்மொழியால் நஸ்தூராவின் சங்கதிகளையும் யாத்திரையில் நடந்த மற்ற சம்பவங்களையும் அவர் கேட்டதினாலும், அவர் மனம் மெய்யாகவே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் மீது மையல் கொண்டிருந்தது. இந்தச் சம்பவ அடையாளங்களின் பயனாகவே ஹஸரத் அவர்களை மணம்புரிந்துகொள்ள கதீஜா பெருமாட்டியின் மனதில் ஓர் எண்ணம் பிறந்தது. இதுவுமன்றி தாம் அழியாத ஒரு செல்வத்தால் பெருவாழ்வை அடையவேண்டுமென்றும், ஒரு நாள் உலக சமுத்திரங்களை யெல்லாம் தனது பேரலைகளால் மோதியடிக்கப்போகிற அந்த அருள்சுரப்பான தடாகத்தின் ஆதீனத்தில் தம்மை அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் அப்பெண்மணிக்கு ஆசையுண்டாயிற்று.

இந்த எண்ணம் ஒரு பக்கத்திலிருக்க, "அன்னை தந்தைகளின் ஆதரிப்பிழந்து அநாதையாக வளர்ந்தவரை நாம் மணம் புரிந்து கொண்டால், நம்மைக் கல்யாணம் செய்யக் காத்துக் கொண்டிருக்கும் தனவந்தர்களும் தலைவர்களும் என்னென்ன விபரீத எண்ணம் எண்ணுவார்களோ இறைவனுக்கே தெரியும். இதுவுமன்றி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இன்னும் கல்யாணமே ஆகாத குமாரராயிருக்கிறார். எனக்கோ நாற்பதாம்

வயது நடக்கிறது. அவர் என்னை விரும்பி ஏற்பாரோ அல்லது வெறுத்து வேண்டாமென்பாரோ, ஆண்டவனுக்கே தெரியும்" என்று பலவாறாக அவர் மனம் ஆலோசித்துக்கொண்டிருந்தது.

இவ்விதமான யோசனையில் ஆழ்ந்த அவர் கவலையுற்றிருக்கும் சமயத்தில், நபீஸா வந்து அவரை நோக்கி, "அறபு குலத்தரசியே! என்றுமில்லாமல் இன்று தாங்கள் ஏதோ விசனமுற்றிருப்பதாகக் காண்கிறேன். தங்களுக்கு விசனத்தையுண்டாக்கத்தக்க விரோதிகள் எவருமில்லையே. இருதயத்தில் ஏதோ ஒரு புதிய எண்ணமல்லவோ பிறந்திருப்பதாகத் தெரிகிறது. அதை வெளியிடுவதில் தங்களுக்கு ஏதும் சிரமம் இல்லாதிருக்கிற பக்ஷம், உற்ற தோழி போன்ற உங்கள் வேலைக்காரியாகிய என்னிடம் சொல்லுங்கள், அது என் சக்திக்குள் அடங்கின ஒரு காரியமாயிருந்தால் அதைச் செய்து முடிக்க நான் பின்வாங்கேன்" என்றாள்.

இதைக்கேட்ட கதீஜா பெருமாட்டி சற்றுநேரம் மவுனமுற்றிருந்து பின்பு நபீஸாவை இரகசியத் தோழியென மதித்து, நபீஸாவே! நான் உனக்கு என்ன சொல்லப் போகிறேன்? என் மனமானது என்னை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பக்கம் இழுக்கின்றது. அவர்களை மணம்புரிந்து கொள்ள என்மனம் ஆசிக்கின்றது. ஆயினும் சில பல காரணங்களை சிந்தித்தால் என் எண்ணம் நிறைவேறுமென்று எனக்குத் தோன்றவில்லை என்றனர்.

அதற்கு நபீஸா அவரை நோக்கி "அம்மணீ! இதென்ன பிரமாதம், தாங்கள் உத்தரவு கொடுத்தால் நான் அவர்களிடம் போய், உங்களை மணந்து கொள்ள அவர்களை இணங்கச் செய்வேன்" என்றாள். அப்போது கதீஜா பெருமாட்டி, "நபீஸாவே அப்படி நடக்கும் பக்ஷம் பின்பு என்ன சொல்லக்கிடக்கிறது. உன்மனம் திருப்தியாகும்படி நான் உனக்கு அவ்வளவு இனாம் கொடுப்பேன்" என்றனர்.

நபீஸா கதீஜா பெருமாட்டியினிடம் விடைபெற்றுக்கொண்டு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய வீட்டுக்கு வந்து, அவர்களைக்கண்டு பேசத்தொடங்கி "தாங்கள் வாலிப திசையை அடைந்து விட்டீர்கள். அறபு குலத்தில் சிறந்த ஒரு

பெண்ணைப் பார்த்து இதுவரையில் ஏன் விவாகம் செய்து கொள்ளாம லிருக்கிறீர்கள்?" என்றாள். அதற்கு நாயகமவர்கள் "நபீஸாவே கையில் பணமில்லாத மிடையே அதற்குத் தடையா யிருக்கிறது" என்றார்கள். அப்போது நபீஸா, "தங்கள் குலத் திலேயே ஒரு சிறந்த சீமாட்டி தங்களை விவாகஞ் செய்துகொள்ள விரும்பினால், தாங்கள் அவளைத் தங்கள்மனைவியாக ஏற் பீர்களா?, என்று கேட்டாள். அதற்கு நாயகமவர்கள் அவள் யார்? என்றார்கள். அதற்கவள், "எங்கள் அரசியான கதீஜா பெருமாட்டிதான்" என்று சொன்னாள். நாயகமவர்கள் புன்னகை புரிந்து, நல்லது இது நடக்கக்கூடிய காரியமா? என்றார்கள். "அதற்கு நான் பொறுப்பாளி" என்றாள் நப்ஸா. நாயகமவர்கள் மௌன முற்றிருந்து விட்டார்கள். நபீஸா அங்கிருந்து திரும்பி வந்து, இந்த நற்செய்தியை கதீஜா பெருமாட்டியின் காதுக் கெட்டினாள்.

அப்போது கதீஜா பெருமாட்டியின் குதூகுலத்தைக் கேட்க வேண்டுமா? உடனே அவர் தமது பந்து மித்திரர்களையும் அதற்கு உடன்படுத்திக் கொண்டனர். அவர்கள் உடன்படாமலிருக்க என்ன ஆக்ஷேப மிருந்தது? இல்லை, யாதலால் அவர்களும் சம்ம தித்துவிட்டார்கள். திருமணத்திற்காக ஓர் சுபதினம் குறிக்கப் பட்டது. கதீஜா பெருமாட்டி. தமது சிறிய தந்தையான உமர்றுஇப்னுல்அஸதையும் மற்றொருசிறிய தந்தையின் குமாரரான வர்கத்இபுனுநவ்பலையும் அபூதாலிபிடம் அனுப்பினர். அபூதாலிபு தமது சோதர புத்திரரின் சம்மதத்தை யறிந்து சந்தோஷமடைந்து உமர்இப்னுல் அஸதுக்கு மங்கள வார்த்தை கூறினர்.

கதீஜா பெருமாட்டியின் மாளிகை அறபிகளின் வழக்கப்படி பலவகையான சிங்காரிப்புகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டது. விலையுயர்ந்த பலவர்ண விரிப்புகள் விரிக்கப்பட்டன. கண்ணாடி தீபங்களும் மெழுகுவத்திகளும் எரிக்கப்பட்டன.

---

## குறைஷிகுலத் தலைவர்களும் கனதனவான்களும்.

குறைஷிகுலத் தலைவர்களும் கனதனவான்களும் கூடிய ஓர் கூட்டத்துடன் அபூதாலிபு தமது சோதர புத்திரரான ஒளி

நிறைந்த நபிகள் பெருமானை அழைத்துக்கொண்டு, கதீஜா பெருமாட்டியின் கல்யாண மண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள். அங்கு அப்பெண்மணியின் பந்து மித்திரர்களும் வந்து கூடியிருந்தார்கள். அப்போது அபூதாலிபு எழுந்து நின்று குத்பா ஓதினர். அதன் பொருள் யாதெனில் :—

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக் குரியவை. அவன் எங்களை இபுராஹீம், இஸ்மாயீல் அலைஹிவஸ்ஸலா மவர்களுடைய வித்திலிருந்து முளைப்பித்தான். மஅத்து, முலருகளின் குலத்தினின்றும் உதிக்கச் செய்தான். எங்களுக்காக கஃபா என்னும் பெருமை வாய்ந்த ஆலயத்தையும், பாதுகாப்புள்ள ஹரமையும் அமைத்தான். மனிதர்களுக்குள் எங்களை அதிகாரிகளாக்கினன். பின்பு என் சகோதரராகிய அப்துல்லாவுடைய புத்திரரான இந்த முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) மிகவும் உயர்ந்த பதவியுள்ளவர். நிலையாத நிழல் போன்ற செல்வம் இவருக்கில்லையாயினும், குறைஷிகளில் ஒருமனிதனையும் இவரையும் சீர் தூக்கிப் பார்த்தால், குலத்திலும் சிறப்பிலும் வரிசையிலும் புத்தியிலும் இவரே மீக்குற்றவராவார். இவருக்கும் எனக்குமுள்ள பந்துத்தவம் உங்களுக்கு தெரிந்தேயிருக்கிறது. இவர் இப்போது குவைலிதின் குமாரத்தியான கதீஜாவை இருபது ஒட்டகங்களின் மஹரில் நிகாஹு செய்து கொள்ள நாடுகிறூர். அல்லாவினுணை இவருக்கு உன்னத மகத்துவமும் பெரும் பிரக்கியாதியுமான ஓர் காரியம் சம்பவிப்பதா யிருக்கிறது என்பதே.

இவ்விதமாக அபூதாலிபு குத்பா ஓதின பிறகு கதீஜா நாயகிக்கு சிறியதந்தையின் குமாரரான வறக்கத்துபுனு நவ்பல் ஒரு குத்பா ஓதினர். அதன் பொருளானது :—

"எல்லாப்புகழும் அல்லாஹுத் தஆலாவுக் குரியவை. நீர் சொல்லி வந்ததுபோல் அவன் நம்மை வரிசையும் மேன்மையுமுள்ளவர்களாக்கினன். ஆகவே நாம் அரபுகளில் தலைமைபூண்டவர்களாயும், அவர்களில் கௌரவம் பொருந்தினவர்களாயு மிருக்கிறோம். நீங்களோ இப்போது சொல்லிவந்த எல்லாவற்றிற்கும் அருகரா யிருக்கிறீர்கள். எங்கள் குடும்பம் உங்கள் மேன்பாடான வரிசையை ஏற்கின்றதேயன்றி மறுக்கிறதில்லை. மனிதர்களில் ஒருவரும் உங்கள் பெருமை சிறப்புகளை நிராகரிக்கமாட்டார்.

உங்களின் பெருமைக்கும் சிறப்புக்குமே நாங்கள் உங்களுடன் சம்பந்தம் செய்துகொள்ள விரும்புகிறோம். ஆகவே குறைஷிகள் கூடிய இந்த சபையார் அறியும்படி, நான் குவைலிதுடைய புத்திரி கதிஜாவை அப்துல்லாஹ்வுடைய புத்திரர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு இந்த மஹரின்பேரில் நிகாஹு செய்வித்தேன்" என்பதே.

இவ்விதம் வறக்கத்இபுனு நவ்பல் ஓதிமுடித்தபின், அபூதாலிபு கதீஜாவின் சிறியதந்தையாகிய அம்றுஇபுனு அஸதை நோக்கி நீரும் இந்த குத்பாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று சொல்ல, அவர் எழுந்து "ஓ அறபுகளே! நீங்கள் அறியும்படி நான் என் சகோதரரான குவைலிதுடைய குமாரத்தி கதீஜாவை அப்துல்லாவுடைய குமாரர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் நிகாஹில் கொடுத்தேன்" என்று சொன்னார்.

இதன் பிறகு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் தரபிலும் கதீஜாநாயகியின் தரபிலும் ஈஜாபு கபூல் என்னும் சம்மதமும் பொருத்தமும் கேட்கப்பட்டது. அறபுகளின் பெரியரான கனவான்கள் அபூதாலிபுக்கு மங்கள வாக்கு கூறினார்கள். பிறகு சபை எழுந்து விட்டது.

அபூதாலிபவர்கள் வலீமா விருந்துக்காக ஒரு ஒட்டகையை அறுத்துச் சமைத்து, தங்கள் பந்து மித்திரர்களுக்கும் குறைஷி குலத்தலைவர்களுக்கும் விருந்து வைத்தார்கள். கதீஜாநாயகி தம்முடைய தோழிகளைத் தப் என்னும் வாத்தியம் கொட்டிப் பாடும்படி உத்தரவளித்தனர். பின்பு அந்த அடிமை பெண்களைத் தம்முடைய கல்யாண சந்தோஷத்தில் அடிமைத்தனத்திலிருந்து நீக்கி உரிமையாக்கினார்கள்.

கதீஜா நாயகிக்கு குறிக்கப்பட்ட மஹர் நானூறு களஞ்சி பொன் என்றும், ஐந்நூறுதிர்ஹம் என்றும் இப்படியும் சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். எவ்விதத்திலும் கதீஜா பெருமாட்டியை நபிகள் பெருமானார் மணம் புரிந்து கொண்டார்கள். இப்போது நாயகருக்கு வயது இருபத்தைந்தும் நாயகிக்கு வயது நாற்பதுமாயிருந்தன.

ஹஸரத்அவர்கள் தங்களுடைய இந்த முதல் விவாகத்தினுல் நப்சின் இச்சையை நீக்கினதற்கு அறிகுறியாக, இவ்வுலகத்தில் உன்னதமான ஓர் நமூனவை நிலைநிறுத்தினர்கள். தாங்கள் விரும்புகிற பக்ஷம் குறைஷிகுலத்தில் கன்னிகையான சின்னப் பெண்களும் அவர்களுக்குக் கிடைக்கலாம். என்றாலும் எதில் அல்லாஹு தஆலாவுடைய நோக்கமான நன்மைகளும் பறக்கத்து களும் பொதிந்த அளவிறந்த இரகசியங்கள் மறைந்திருந்தனவோ அந்த அழகிய முக்கிய காரியத்தைத் தங்கள் உம்மத்துகளில் ஸ்தாபிக்க வேண்டிய அவசியம் தங்களுக்கிருந்தபடியால், விதவை யாயும் வயதில் மூத்த வராயுமிருந்த ஸ்திரீயை விவாகஞ் செய்து, இவ்வகையான இல்வாழ்க்கையில் பெரும் பயன்உண்டென்பதைத் தங்கள் உம்மத்துகள் அறியும்படி அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது.

இன்று நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். கல்லியாணம் செய்து வாழ்ந்த புருஷனுங்கூட தன்தாரத்தை இழந்தால் மறுவிவாகத்துக்கு ஓர் விதவையான ஸ்திரீயை அவன் விரும்பு கிறதில்லை. அப்படி அவன் ஒரு விதவையை விவாகம் செய்து கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய பந்துக்கள் அவனை தூஷித்து பங்கப்படுத்துகிறார்கள்.

இஸ்லாம் மார்க்கத்துக்கு மூலகாரணரான நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் பதின்மூன்று விவாகங்கள் செய் தார்கள். அம்மனையாட்டிகளில் ஹஸரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா ஒருவர் மாத்திரம், வாழ்க்கைப்படாத கன்னிகை யாயிருந்தார்கள். மற்ற பனிரண்டு மனையாட்டிகளுக்கும் முதலில் ஒரு முறை, இரு முறை விவாகமாகி வாழ்க்கைப்பட்ட வர்களாகவே யிருந்தார்கள். இல்வாழ்க்கையில் நாங்கள் எங்கள் நபி அலைஹிஸ்ஸலாமவர்களைப் பின்பற்றுகிறோமென்று பிரஸ்தா பிக்கிற முஸ்லிம்கள், தங்கள் நபியவர்கள் என்ன செய்தார்களென் பதையும் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்க ளென் பதையும் சற்று யோசித்துப் பார்க்கக் கடவர்.

நாம் யுக்தி பிரமாணத்தால் யோசித்தால், கன்னிகை யான பெண்ணைவிட வாழ்க்கைப்பட்ட விதவையே பலவகை யிலும் குணங்களில் சிறந்தவளென்று நமக்குப் புலப்படுகிறது.

முன்வாழ்க்கை சம்பந்தமாக குடித்தன விஷயத்தில் அவள் அனுபவ முள்ளவளாயிருக்கிறாள். தாய் தந்தைகளின் மீதுள்ள பிரியத்திலும் அவர்களுக்குப் புருஷன் மீது பிரியம் அதிகமா யிருக்கும் இதனாலேயே அவள் அடிக்கடி தாய்வீட்டுக்குப் போக வேண்டுமென்று கேட்பதில்லை. குடித்தனத்தை நடத்தும் முறை மையும் ஒழுக்கமும் அவளுக்கு நன்றாய் தெரிந்திருக்கின்றன. புருஷனுக்குத் தன்மீது நேசத்தை யுண்டாக்கக் கூடிய தந்திர வார்த்தைகளெல்லாம் அவளுக்குத் தெரியும். வன்மையுள்ள நெஞ் சையும் வசப்படுத்தக்கூடிய வளாயிருக்கிறாள்.

வாழ்க்கைப்படாத கன்னிகையோ கொஞ்சமும் அநுபவ மில்லாதவளாயும் குடித்தன விஷயங்களில் பிரியமில்லாத வளாயு மிருக்கிறாள். அவள் செல்லப்பெண்ணா யிருப்பதனால், அவளை இல்லப் பெண்ணாக்க எவ்வளவோ நாள் பிடிக்கும். அவள் அடிக்கடி தாய் வீட்டுக்குப்போக அழுது கொண்டிருப்பாள். புருஷனைவிட தாய் தந்தையரையே அவள் அதிகமாக நேசிப் பாள். போகப்போகத்தான் குடித்தன முறைமையைச் சரிவரச் செய்ய அவளுக்கு உணர்ச்சி யுண்டாகும். வந்தவுடன் புருஷன் மனதை வசப்படுத்த அவளால் முடியாது. நாம் நமது சுயேச் சைக்கு வசப்படல் என்னும் கருவைக் களைந்தெடுத்து விட்டுப் பார்க்கும் பக்ஷத்தில், கன்னிகையான பெண்ணைவிட விதவையான ஸ்திரியே பலவிதத்திலும் அதிக மேலாயிருக்கிறாள் என்பது நன்குவிளங்கும்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் ஒரு வித வையை விவாகம் செய்து கொண்டதானது அவர்களின் இச்சை யில்லாத் தன்மைக்கு ஓர் அத்தாட்சியாயிருக்கிறது. கதீஜா நாயகி தமது செல்வப் பெருமையில் நபிகள் பெருமானை மணந்து கொண்டதானது இஸ்லாமில் அவர் வைத்திருந்த பிரியத்தை ருசுப்படுத்துவதா யிருப்பதுடன், அல்லாஹு தஆலாவுடைய நாட்டத்தின் பயனாயு மிருக்கிறது.

முஸ்லிம் சகோதரர்களே! இது விஷயத்தில் நீங்கள் உங்கள் சர்தாராகிய முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களையும் உம்முல் மூமினீனாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களையும் பின்பற்றவேண்டும்.

ஏனெனில் அவர்களுடைய ரூஹுகள் சந்தோஷமடைவதற்கும் உங்களுடைய இஸ்லாமிய இல்வாழ்க்கையினுல் நீங்கள் மெய்யான முஸ்லிம்களென்று ருஜுவாவதற்குமேயாம்.

நாம் முகவுரையில் கூறியபடி சர்வில்லியம் மூர் என்ற யூரோப்பிய சரித்திரக்காரர், கதீஜா நாயகியின் இந்த நிகாஹு சம்பந்தமாக ஒரு விந்தையான கதையை எழுதியிருக்கிறுர். அதை அப்படியே மொழி பெயர்த்து அடியில் காட்டுகிறோம்.

அவர் எழுதுகிறதாவது :—"கதீஜா தன்னுடைய பிதாவின் பிரியத்துக்கு விரோதமாக முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விவாகம் செய்துகொள்ள விரும்பினுள். இதனுல் விவாக தினத்தில் ஒரு மாட்டை அறுத்து சமைத்துத் தன் பிதாவுக்குத் தின்னக் கொடுத்து அதன்மேல் சாராயத்தையும் நன்ருக் குடிக்கும்படி கொடுத்தாள். அவர் அந்த போதையில் மயக்கங்கொண்டிருக்கிற சமயம் பார்த்து, உடனே முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைக் கூப்பிட்டனுப்பினுள். குவைலிது போதை மயக்கத்தில் தன் மகளை நிகாஹு செய்து கொடுத்துவிட்டார். ஆனுல் அவருக்குப் போதை தெளிந்து உணர்வு வந்தபோது, நாலாபக்கமும் பார்த்தார். மாட்டைஅறுத்திருப்பதும் சோறு சமையலாவதும் பந்து மித்திரர்கள் வந்து கூடியிருப்பதும் அவர் புத்திக்கு ஒன்றும் புலப்படவில்லை. அப்போது அங்கிருந்தவர்கள் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) உமக்கு மருமகனுயிருக்கிறுர். நீர் இப்போது த ன்உம்முடைய மகளை அவருக்கு விவாகஞ் செய்வித்தீரென்று அவருக்குச் சொன்னுர்கள். இதைக் கேட்டவுடன் அவருக்குக் கோபம் மூண்டு, அங்கம் பதரி "நான் ஒருபோதும் என் அழகிய குமார்த்தியை ஒரு ஏழை குறைஷியின் மகனுக்கு விவாகஞ் செய்விக்கமாட்டேன். பெரிய பெரிய அறபு தலைவர்கள் அவளை விவாகஞ் செய்துகொள்ள விரும்புகிறுர்கள்" என்று சொன்னுர். இதைக்கேட்டு முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் பெரிய தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கடினமாக இரைச்சலிட்டு "நாங்கள் உம்முடைய மகளைக்கேட்க விரும்பிவந்ததில்லை. அவள்தானே விரும்பித் தூண்டுதல் செய்ததிலுலேயே இந்த நிகாஹு நடந்திருக்கிறது" என்று சொன்னுர்.

ஆகவே இருபக்கத்திலும் மும்முரமான சண்டைமூண்டு கத்தி களையும் உருவிக்கொண்டார்கள். என்றாலும், கதீஜாவின் கிழட்டுத் தகப்பன் அடங்கி அமர்ந்தார். பிறகு இருதரபுக்கும் சமாதான மாய் விட்டது என்பதே.

சர்வில்லியம் மூர் கட்டின இந்த கதையானது, எவ்வளவு தவறாயிருக்கிறதோ அவ்வளவு நகைப்புக்கும் இடமாயிருக்கிறது. விலலியம் மூர் என் செய்வார்? கதீஜாவுக்கு நிகாஹு ஆனதும் நிகாஹுக்காக நாள் குறித்ததும் அபூதாலிபு, வரக்கத்இபுனு நவ்பல், அம்ருப்னு அஸது இவர்கள் குத்பா ஓதினதும் அந்த சமயத்தில் குவைலிது இருந்ததில்லை என்பதும் ஆகிய இந்த சங்கதிகள் ஒன்றுமே அவர் நினைவில் வராமையால், தலைவாலில்லா ஒரு கட்டுக்கதையை எழுதிவிட்டார். கதீஜா பெருமாட்டியின் ஜீவிய சரித்திரத்தில் யாதொரு குற்றமும் தென்படாமையினால் அவர் இந்த ஒரு குற்றத்தைக் கற்பித்துக்கொண்டார்.

கதீஜா பெருமாட்டிக்கு இந்த நிகாஹு நடந்தகாலத்தில் குவைலிது உண்மையாய் இறந்துபோயிருந்தார். அவர் இருந்திருக்கும் பக்ஷம், கதீஜாவை நிகாஹு செய்துகொடுக்க மற்ற பந்துக்களைவிட அவரே அதிக பாத்தியஸ்தர் என்று எண்ணப் படுவார். அவர் அப்போது உயிரோடு இருந்தாரென்று நாம் ஒப்புக் கொண்டாலுங்கூட, வில்லியம் மூருடைய கட்டுக்கதை அவருக்கு உபயோகப்படாமல் அவலமாய் அழிகின்றது.

அறபுதேசம் மூடஇருளால் மூடப்பட்டிருந்த காலத்தில் அவ்விடத்து ஸ்திரீகளுக்கு நிக்காஹு செய்வதும் பிறகு விலக்கி விடுவதும் சாதாரண வழக்கமாயிருந்தது. அவர்களுக்கு அப் போது இல்வாழ்க்கையின் கட்டுப்பாடான சட்டம் ஒன்றும் ஏற்பட்டிருந்ததில்லை. அவர்களுக்கு எது பிரியமாகுமோ, எதில் சுகம் கிடைக்குமோ அதுவே அவர்களுடைய இல்வாழ்க்கையின் சட்டமாயிருந்தது. இதுவும் சரியல்லவென்றால், கதீஜா பெரு மாட்டிக்கு நிகாஹு செய்த காலத்தில் அவர் தம் குடும்பத்தில் சுதந்திரியாகிய ஒரு அதிகாரியா யிருந்தார். குவைலிதுடைய சகல காரியங்களையும் தம்முடைய கைவசத்தில் ஆக்கிக்கொண்ட வரா யிருந்தார். சிப்பந்திகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் தம்மு டைய கையினாலேயே சம்பளம் கொடுப்பவராயிருந்தார். வியாபார

நடவடிக்கைகளையும், குடும்ப விவகாரங்களையும் ஒருவருடைய மந்திராலோசனை யில்லாமல் தாமாகவே நடத்தி வந்தார். குவைலிது அப்போது மரித்துப் போகாம லிருந்தாலும் அவர் தம்முடைய வியாபாரக் காரியங்களை விட்டுவிட்டபின், நல்லது கெட்டதுகளின் பகுத்தறிவில்லாதபடி அவ்வளவு தளர்ந்த வயோதிகராகி ஒரு மூலையில் விழுந்துகிடந்தார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது கதீஜாநாயகி சுயேச்சையாக விவாகஞ் செய்துகொள்ள என்ன தடையிருந்தது. தகப்பனுக்குச் சாராயத்தைக் கொடுத்து அவரை மயக்கவேண்டிய அவசியமில்லையே.

அவருக்கு சாராயத்தைக் கொடுத்த மயக்கத்தினால் அவர் தமது மகளை முஹம்மதுர் றஸூலுல்லா அவர்களுக்கு விவாகஞ் செய்வித்தார் என்று வில்லியம் மூர் சொல்லுகிறாரே, அது எப்படிப்பட்ட சாராயமாயிருந்திருக்கும்? அதன் போதை அப்போதே இறங்கி கொஞ்சநேரத்திற்குள்ளாக குவைலிதுக்கு உணர்வுவந்து கோபங்கொண்டு கோடையிடிபோல் கர்ஜித்தாராமே! நல்லது குவைலிதுக்கு சாராயம் குடிப்பாட்டினதாகவே ஒப்புக்கொள்வோம். அவர் சகோதரருக்கும் சகோதரின் பிள்ளைகளுக்கும் குறைஷி கனவான்களுக்குமா சாராயம் கொடுத்து மயக்கப்பட்டனர்? இல்லையென்றால் அந்த சகோதரர் தம் சகோதருடைய பிரியத்துக்கு விரோதமாக இந்த விவாக ஏர்பாட்டுக்கு எப்படி சம்மதித்தார்? இதுவுமின்றி குவைலிது கொஞ்சநேரத்தில் கோபமாய் விட்டாராம். கொஞ்சநேரத்தில் குளிர்ந்து போனாராமே? அவரது கோபத்தின் ஏற்றமும் இறக்கமும் இவ்விதமிருக்கும் பக்ஷம், கதீஜாநாயகி தமது நாற்பது வருஷத்திய அநுபவத்தில் தமது தந்தையின் கோப சுபாவத்தை அநந்தமாயிர முறை கண்டேயிருப்பார். அப்பாவுக்கு முதலில் கொஞ்சம் கோபம்வந்து உக்கிரமாவார் என்றும், பிறகு கோபந்தணிந்து குளிர்ந்து போவார் என்றும் அவருக்குத் தெரியுமே. பின்பு ஒரு மாட்டையும் பலகோப்பை சாராயத்தையும் ஏன் நஷ்டமாக்க வேண்டும்?

இன்னும் மக்காவில் சாராயக்கடைகள் அநேக மிருந்தன வென்று தமது சரித்திரத்தில் எழுதியிருக்கிறார்.

இது மெய்தான், இதை யார் மறுக்கக்கூடும்? சாராயக் கடைகள் இருக்கவே யிருந்தன. குவைலிது சாராயம் குடிப்ப வராயு மிருந்திருக்கலாம். ஆனால் கதீஜாவுடைய நிக்காஹின் போது அவருக்குச் சாராயத்தைக் குடிப்பாட்டினரென்பது சுத்தபொய்யா யிருக்கிறது. இபுனு ஹிஷாமும் இப்னு இஸ் ஹாக்கும் தபரியும் சஹீஹான ரிவாயத்தினல் நகல் செய்திருப்ப தென்ன வென்றால், கதீஜா நாயகியின் கலியாணத்தின் போது அவர் தகப்பனர் இருந்ததில்லை—இறந்து போனரென்பதுதான். இதுதான் சஹீஹாயு மிருக்கிறது.

---

## கதீஜா பெருமாட்டி தமது உரிமையை கணவருக்கு அர்ப்பணம் செய்தல்.

விவாகமாகுமுன் ஹஸரத்து ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் ஜீவனோபாயக் கவலையினின்று நீங்காத வர்களாயிருந்தார்கள். ஆனால் விவாகமான உடனே அந்தக் கவலை நீங்கி, அதன் விசாரமில்லாதவர்களானர்கள். கதீஜா நாயகிதமது இரத்தினதிகள் முதல் சகல சொத்துக்களின்மீதும் ஹஜரத்தவர்களுக்கு சர்வாதிகாரமும் கொடுத்து, இந்த சொத் துக்கள் இனி தங்கள் இஷ்டம்போல் வினியோகம் செய்யத் தங்களுக்கு அதிகாரமுண்டென்றும், தாங்கள் என் வீட்டுக்கு எஜமானும் அதிகாரியாயுமிருக்கிறீர்கள் என்றும் இஷ்டமாகச் சொல்லிவிட்டனர். எந்த வேலைக்காக ஹஸரத்அவர்கள் இவ்வுல கத்தில் பிரசன்னமானர்களோ, எதன் சீர்த்திருத்தம் ஹஸரத் தவர்களைக்கொண்டு சம்பந்தப்பட்டிருந்ததோ அந்தவேலையை நிறை வேற்ற இப்போது இலகுவான சமயம் வாய்த்துக்கொண்டது. பெரிய பிதாவான அபூதாலிபு அவர்களும், அங்கு தமது பதியே தமக்குக் கதியென விசுவாசிக்கும் கதீஜா பெருமாட்டியும் ஹஸரத் அவர்களுக்குப் பக்க பலமானர்கள். கதீஜா நாயகி இரவும் பகலும் விளக்கின்மேல் விட்டிலைப் போல் ஹஸரத் அவர்களின் மேல் தமது பிராணனை விடுகிறவராயிருந்தனர். அவர்களின் உத்திரவுக்கு வழிபடுவதே தமக்கு முக்கிய கடமை யென்றெண்ணி யிருந்தனர். இன்னும் ஹஸரத் அவர்கள் தமக்குப் புருஷராக

வாய்த்ததைப் பற்றி பூரித்து சந்தோஷமடைந்த கதீஜா நாயகி சொல்லிக்கொண்டிருந்த வசனங்களாவன:—

"மனோரக்ஷகரான இந்த மஹாராஜவுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மகாவிருக்ஷம் போன்ற உன்னத பதவியுள்ள இவர்களின் செய்கை என்மேல் நிழலிட்டது. நான் காதலித்து எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த ஹுமா என்னும் தெய்வீகபக்ஷி இப்போது என்மேல் நிழலிட்டதற்கு நான் நன்றியறிந்து ஆயிரம் முறை ஷுக்குருசெய்கிறேன் என்பனவும் இன்னும் இவை போன்றனவுமாம்.

ஹஸரத் அவர்கள் தங்கள் பந்து மித்திரர்களுக்கும் பந்துவல்லாத மற்றவருக்கும் தங்கள் இஷ்டப்படி பொருளை விரையஞ் செய்பவர்களா யிருந்தனர். ஏன் இப்படிச் செய்கிறீர்களென்று கதீஜா நாயகி கேட்டதேயில்லை. கணவர் சந்தோஷமாயிருக்க வேண்டு மென்பது மாத்திரமே அவர் கருத்தாயிருந்தது. இத்துடன் அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைக்கப்போகிற அழகிய அந்த நற்காலம் எப்போது வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அன்றியும், தமது மரணத்துக்கு முன்னே அந்த காலம் வரவேண்டு மென்றும் அதன் பரக்கத்துகளைக் கண்டு தமது கண்கள் குளிர்ச்சியடைய வேண்டுமென்றும் இவர் ஏக்க முற்றிருந்தனர்.

---

## வஹி இறங்குதல்.

இப்போது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய நிலைமை எவ்வாறிருந்ததென்றால், அவர்கள் அநேகமாக வீட்டை விட்டு வெளிப்பட்டு மக்காவின் மலைகளில்போய் தனித்திருப்பார்கள். நுபுவ்வத்தின் அடையாளங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. விவாகமாகி ஏறக் குறைய பத்து வருஷகாலஞ் சென்று விட்டது. அவர்கள் கடைத்தெருவுக்ாவது அல்லது வேறெங்கேயாவது போய்க்கொண்டிருந்தால் கற்களிடத்தி லிருந்தும் மரங்களிடத்தி லிருந்தும் அஸ்ஸலாமு அலைக்க யா நபிய்யல்லாஹ் என்ற சப்தம் வருவது அவர்கள் காதுக்கு எட்டிக்கொண்டிருந்தன. அவைகளைக் கேட்டு அச்சம் அடைந்து

வீட்டுக்குவந்து, கதீஜா நாயகியினிடம் சம்பவத்தைச் சொல்லு வார்கள். கதீஜா நாயகி அவர்களுக்கு ஆறுதலாக "நாயகமே! தாங்கள் மிகவும் தயாள சிந்தையும் கண்ணியமும் பொருந்திய புருஷராயிருக்கிறீர்கள். விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் இரக்கப்படுகிற தங்கள் உத்தம குணங்கள் மிக்கப் பெருகி வளர்ந்திருக்கின்றன. தங்களுக்கு எவ்வித ஆபத்தும் அணுகமாட்டாது" யென்று தேர்தல் சொல்வார்கள்.

சில தினங்களுக்குப் பிறகு நாயகமவர்களின் வழக்கமான நட வடிக்கைகளில் இன்னுமொன்று அதிகப்பட்டது. அதாவது:— அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து வெளிப்பட்டால் பலநாள்வரையில் இருக்குமிடந் தெரியாதபடி மறைந்திருப்பார்கள். அப்போது அவர்கள் ஹிரா என்னும் மலைக்குகைக்குப்போய் உட்கார்ந்து அல்லாஹு தஆலாவை தியானஞ் செய்துகொண்டிருப்பார்கள். அதற்காக, வீட்டிலிருந்து போகும் போது பலநாட்களுக்கு வேண்டிய உணவுகளைச் சித்தஞ் செய்து கொண்டு போவார்கள். அந்த உணவுகள் செலவாய்ப்போனால் பிறகு வீட்டுக்கு வருவார்கள். உணவுகளைத் தயாரித்துக்கொண்டு பிறகு போய்விடுவார்கள்.

இவ்விதமாக ஹஸரத் அவர்கள் ஹிராமலைக் குகையில்போய் பக்நாள் தங்குகிறார்களென்ற சங்கதி கதீஜா பெருமாட்டிக்குத் தெரிந்தபோது, அவருக்கு மிகவுஞ் சஞ்சலமுண்டாயிற்று. நாய கருக்கு அங்கு ஏதாவது கஷ்டம் நேரிடாமலிருக்க வேண்டுமென்று எண்ணினார். ஏனெனில் ஹிராமலைக் குகையானது மக்காவிலிருந்து மூன்றுமைல் தூரத்திலிருக்கிறது. அந்த குகை பார்ப்பவர் களின் புத்தி சிதறும்படி அவ்வளவு பயங்கரமான பள்ளமா யிருந்தது. அந்தவிடத்தில் ஹஸரத்அவர்கள் துணையில்லாமல் தனித்தவர்களா யிருந்தார்கள். ஆகவே கதீஜா நாயகி இதைப்பற்றி பெருங் கவலையுற்றவராயிருந்தனர். சில சமயங்களில் நாயகியும் ஹஸரத் அவர்களுடன் புறப்பட்டு கூடவே போய் விடுவார்கள். தூரத்தில் உட்கார்ந்து ஹஸரத் அவர்களைப் பார்த்துக் கொண்டிருப் பார்கள். அநேகக் தடவைகளில் நாயகி அந்த குகைக்கு ஹஸரத் தவர்களுக்காக உணவும் கொண்டுபோ யிருக்கிறார்கள்.

கணவருக்கு வழிபடுவதென்னும் காரியத்தை இதற்குமேல் அதிகமாக எந்த ஸ்திரீயாவது நிலைநிறுத்தக் கூடுமா? இன்று ஒரு

புருஷன் தன் வீட்டையும் பெண்ஜாதி பிள்ளைகளையும் விட்டு விட்டு காடுகளிலும் மலைகளிலும் வசிப்பவனாய் உலகவாழ்க்கையை வெறுத்தவனாய், அல்லாஹுதஆலாவுடைய வணக்கத்தில் பராக்குற்றவனாயிருப்பானாகில் அவனுடன் கதீஜா நாயகியைப்போல் பட்டணத்திலிருந்து மூன்று மைல் தூரம் போகவும் அவனுக்காக அநேக தடவை உணவுகொண்டு போய்க்கொடுக்கவுமான பதிவிரதா சிரோமணிக ளிருக்கிறார்களா? தற்கால ஸ்திரீகளோ தங்கள் கணவருக்கு ஏதாவது சம்பவம் நேர்ந்தால், அவன் பயித்தியங் கொள்ளியாய் போனானென்று தங்கள் கூட்டத்தாரிடத்திலும் குடும்பத்தாரிடத்திலும் பிரஸ்தாபித்து புகார்செய்வார்கள். எங்கள் கணவருக்கு பயித்தியம் பிடித்துக்கொண்டதென்றும் இப்போது அவர் வீட்டுக்கவலையே யில்லாமல் ஒதுங்கிவிட்டாரென்றும் அவருக்குப் பிள்ளைகள் நினைவுமில்லை, பெண்ஜாதி நினைவுமில்லை யென்றும், காடுகளில் விழுந்துகிடப்பதே அவர் வேலை யென்றும் பரிகாசமாகச் சொல்லித் தூற்றுவார்கள்.

ஆனால் கதீஜா பெருமாட்டி, தம் நாயகர்மேல் வைத்திருந்த பிரியத்திற்கும் அந்த அறபுகுல நாயகியின் மனோ தைரியத்திற்கும் மெச்சிக்கொள்ள வேண்டியதா யிருக்கிறது. அவர் செல்வத்தில் வளர்ந்த சீமாட்டியாயிருந்தும் கணவருடன் மூன்று மைல் தூரம் நடந்து செல்பவராயும், பின்பு திரும்பி வீட்டுக்கு வருபவராயுமிருந்தார். கதீஜா நாயகி நடந்து காட்டின வழியே மெய்யான பதிவிரதா தன்மையின் அடையாளமாகும்.

தற்காலத்தில் சொற்பசொற்ப காரியத்திலும், புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும் பிணக்கமுண்டாய் விடுகிறது. மூன்று மைல் தூரம் நடப்பது ஒரு பக்கத்தி லிருக்கட்டும், வீட்டில் வைத்திருக்கிற தண்ணீர் குடம் வரையில் போய் புருஷனுக்காகத் தாக சாந்திக்குத் தண்ணீர் கொண்டு வருவதும் பெண்சாதிக்குக் கஷ்டமா யிருக்கிறது. இலகு, சுளுவுகளான வேலைகளுங்கூட அவளுக்கு பாரமாகத் தெரிகிறது. கொஞ்சங் கஷ்ட முண்டானால் வீட்டு பிராது அந்நிய ஸ்திரீகளிடம் அழுது முறைப்பாடு செய்யப்படுகிறது. கதீஜா நாயகி இப்படி செய்யக் கூடாதா? அவர் செல்வத்தில் வளர்ந்த சீமாட்டியா யிருந்தனரே, அனுபவ சாலியுமா யிருந்தனரே, ரஸூல் நாயகமவர்கள் தங்கள் நுபுவத்தின்

அடையாளங்களில் கட்டுண்டிருந்ததால் கதீஜா நாயகி ஏன் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும், அவ்வளவு தூரம் ஏன் நடந்து போய்வர வேண்டும், ஏன் தன் சுகவாழ்க்கையை இழக்க வேண்டும், தன் வேலைக்காரர்களை ஹஸரத் அவர்களின் பணிவிடைக்காக நியமகம் செய்து தாம் சுகமாக வீட்டில் யிருக்கக் கூடாதா? இல்லை, இல்லை! அவர் மெய்யான பதிவிரதையா யிருந்தனர். ஒரு ஸ்திரீக்கு உலகத்தில் சகல சுகபாக்கியங்களும் வாய்த்திருந்த போதிலும், அவள் தன் புருஷனுக்குக் கஷ்டமுண்டான காலத்தில் அவனுக்கு அவள் எவ்வாறு உதவி செய்ய வேண்டுமென்பதை கதீஜா நாயகி தம் செய்கையால், உலக ஸ்திரீகளுக்கு உணர்த்திக் காட்டினர்.

எனவே ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹவஸல்ல மவர்களுக்கு வயது நாற்பத்தொன்றான போது (சிலர் சொற்படி ரபீயுல் அவ்வல்மீ 8உ, சஹீஹான சொல்படி றமலான் 7உ) அவர்களுக்கு வஹி இறங்கினது. அப்போது நாயகமவர்கள் தங்கள் வழக்கப்படி ஹிராமலைக் குகையிலிருந்து ஹக் தஆலாவை தியானஞ் செய்து கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் திடும்பிரவேசமாக ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள், அல்லாஹு தஆலாவுடைய உத்திரவைக் கொண்டு வந்து, இறங்கி, நாயகமவர்களை நோக்கி கும்யாமுஹம்மது (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே, எழுந்து நில்லும்) என்று சொன்னர்கள். நாயகமவர்கள் தலை தூக்கிப் பார்த்தபோது, அங்கு ஒரு மனிதனை நிற்க கண்டார்கள். அவர் நெற்றியில் லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸுலுல்லாஹ்என்று ஒளி யெழுத்தால் வரையப்பட்டிருந்தது. அதன் பிறகு அவர் நாயகமவர்களை நோக்கி இக்ரஃ (நீர் ஓதும்) என்று சொன்னர். அதற்கு நாயகமவர்கள் "அல்லாஹுடைய அடியாரே! நான் ஓதிப் படித்தவனல்லவே. என்னை என்ன ஓதச்சொல்லுகிறீர்?" என்றூர்கள். பின்பும் அவர் நீர் ஓதும் என்றூர். அவர்கள் முன்போலவே ஜவாபு சொன்னர்கள். அப்பொழுது அவர், நாயகமவர்களை கழுத்தோடு கழுத்தாய்க் கட்டியணைத்து இறுக நெருக்கினர். அதனல் நாயகமவர்களுக்கு மிகுந்த வலியுண்டாயிற்று. மூன்றும் முறை இப்போது நீர் ஓதும் என்று சொன்னர். அதற்கும் நாயகமவர்கள் முன்போலவே "நான் படிக்காத உம்மியா யிருக்கிறேன்.

என்ன ஓதுவேன்" என்று ஜவாபு சொன்னார்கள். கடைசியாக நான்காம் முறை அவர் இக்ரஃ பிஸ்மி ரப்பிகல்லதி கலக கலகல் இன்ஸான மின்அலக், இக்ரஃ வரப்புகல் அக்ரமுல்லதீ அல்லம பில்கலமி அல்லமல் இன்ஸான மாலம் யஃலம் என்று ஓதினர். அவரது வற்புறுத்தலினால் நாயகமவர்களும் அதையே ஓதினார்கள். பிறகு அவர் தம்முடைய காலால் பூமியை உதைத்தார். பூமியிலிருந்து தெளிவான ஒரு ஜலஊற்று சுரந்து ஓடத் தொடங்கினது. அந்த ஜலத்தில் மூழ்கி அவர் ஒலுவு செய்து பின்பு நாயகமவர்களுக்கும் ஒலுவின் முறையைக் காட்டித் தொழுகவைத்துப் போய்விட்டார்.

இந்த ஆச்சரியமான சம்பவத்தினால் நாயகமவர்களுக்கு ஓர் பயங்கரமான திடுக்க முண்டாயிற்று. மலை உச்சத்திலேறி கீழே விழுந்து விடவேண்டு மென்ற நாட்டங் கொண்டு மலையின் மேல் ஏறி விட்டார்கள். உடனே ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அங்கு பிரசன்னமாகி "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமே! நீர் மெய்யாக அல்லாவுடைய ரஸூலாயிருக்கிறீர். நானோ எல்லா நபிமார்கள் ரஸூல்மார்கள் இடத்தில் வந்து கொண்டிருந்த ரூஹுல் அமீனாகிய ஜிப்ரயீலா யிருக்கிறேன்" என்று சொன்னார்கள். பிறகு நாயகமவர்கள் அந்த நாட்டத்தை விட்டு விலகினார்கள். இப்போது நாயகமவர்களுக்கு நாலா பக்கத்தி லிருந்தும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமுடைய ரூபம் தோன்றத்தொடங்கியது. அதனால் நாயகமவர்கள் பிரமை கொண்டு நின்றவிடத்தில் ஒரே நிலையாய் நின்று விட்டார்கள்.

கதீஜா நாயகியின் வேலைக்காரர்கள் அந்த மலைக்குகையில் வந்து நாயகமவர்களைப் பார்க்க, வழக்கப்படி அவர்கள் அங்கில்லாமையால் மனக்கலக்கமுற்று இங்கு மங்குமாகத் தேடித்திரிந்து திடுமென நாயகமவர்கள் நின்றிருந்த விடத்துக்கும் வந்து விட்டார்கள். மலையின் மேல் நிற்பவர்கள் நாயகமவர்கள் தானென்றறிந்து, அவர்களைச் சப்தமிட்டுக் கூப்பிட்டுத் தங்களுடன் அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். உடனே கதீஜா நாயகி, கதவைத் திறந்து பிரமை கொண்டவர் போல் நாயகமவர்களின் முகத்தைப் பார்க்கத் தொடங்கினர். நாயகமவர்கள் நாயகியை நோக்கி, "ஜம்மிலூனி, ஜம்மிலூனி (எனக்குக் கம்பளி போர்த்துங்கள் எனக்கு கம்பளி போர்த்துங்கள்)" என்று சொன்

னர்கள். உடனே அவர்களுக்குக் கம்பளி போர்த்தப்பட்டது. கதீஜா நாயகி ஹஸரத்அவர்களை பார்த்து "நாயகமே! தங்களைத் தேடி வரும்படி நான் சில வேலைக்காரர்களை அனுப்பி யிருந்தேன். தாங்கள் எங்கேயிருந்தீர்கள்" யென்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் தங்கள் பத்தினி அந்த இரகசியத்தை வெளிப்படுத்த மாட்டாரென்ற நம்பிக்கையினால் நடந்த விருத்தாந்தங்க ளெல்லா வற்றையும் விபரமாகச் சொல்லிச் கதீஜாவே, நான் குறி கூறுகிறவனுய்ப் போவேனே என்று பயப்படுகிறேன் என்று சொன்னர்கள். இதைக் கேட்ட கதீஜா நாயகி நாயகமே, அல்லாஹு தஆலா தங்களுக்கு நன்மையைத் தவிர மற்றொன்றையும் நாடமாட்டான். தங்களின் முபாரக்கான திரு முகத்தில் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக் கிறது தங்கள் திரு மேனியிலிருந்து நல்ல வாசனை வீசுகின்றது. இந்த ஒளியையும், வாசனையும், இதற்கு முன் நான் தங்களிடம் கண்டதுமில்லை மணக்ததுமில்லை. தாங்கள் மனத்தேர்வுடன் இவ்விடத்திலேயே இருங்கள். இனி ஜிப்ரயீல் தங்கள் பார் வைக்குத் தென்பட்டால் உடனே எனக்குத் தெரியப்படுத்துங்க ளென்று சொன்னர்.

கதீஜா பெருமாட்டி கேட்டுக் கொண்டபடி, நாயகமவர்கள் சம்மதித்தார்கள். கொஞ்ச நேரம் சென்ற பிறகு ஜிப்ரயீல் அலை ஹிஸ்ஸலாம், நாயகமவர்கள் முன் தோன்றலானர்கள். நாயக மவர்கள் கதீஜா பெருமாட்டிக்கு இதை அறிவித்தார்கள். கதீஜா பெருமாட்டி நாயகமவர்களைத் தமது வலது பாரிசமாக உட்கார வைத்துக் கொண்டு இப்போதும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் தங்களுக்குத் தென்படுகிறார்களா? என்ற கேட்டார்கள். அதற்கு நாயக மவர்கள் ஆம் தென்படுகிறார் என்று சொல்ல, பிறகு கதீஜா நாயகி தமது இடது முழங்காலின் பக்கம் நாயகமவர்களை உட்கார வைத்துக் கொண்டு இப்போதும் அவர் தென்படுகிறாரா என்று கேட்க, ஆம் இப்போதும் அவரை நான் பார்க்கிறேன் என்று நாயகமவர்கள் சொன்னர்கள். பின்பு கதீஜா பெருமாட்டி தமது துப்பட்டியை நாயகமவர்கள் மீது நிறையபோர்த்தி அவர்களின் தலை மாத்திரம் திறந்திருக்கும்படி செய்து இப்போது சொல்லுங்க ளென்றார். நாயகமவர்கள் 'இப்போது அவர் எனக்குத் தென்படக் காணேம்' என்றார்கள். அப்போது கதீஜா பெருமாட்டி மிகவும்

விஷயமாக அறிவித்துக்கொண்ட தென்னவென்றால், நாயகமே! நான் தங்களுக்கு நன்மாராயம் கூறுகிறேன். தங்களுக்குத் தோற்ற மானவர் அல்லாஹு தஆலாவினிடத்தில் பெருமைபெற்றவரும், பரிசுத்த மானவருமான ஒரு மலக்கா யிருக்தார் என்பதே.

நாயகமவர்கள் தங்கள் பீவியை இரகசியத்தை வெளியிடாதவ ரென்றறிந்து, அந்நியரிடத்தில் சொல்லக்கூடாத ஒரு வார்த் தையை பீவியினிடம் சொல்லிவிட்டார். பீவியவர்கள் அதைக் கேட்டு நாயகமவர்களுக்குத் தைரியம் சொல்லித் திடப்படுத்தினார்கள். வேறு ஸ்திரீயாயிருந்தால் தன் புருஷனுடைய இவ்விதமான சிந்தனையை சித்தப் பிரமையென்றெண்ணி சிரிப்பதுமன்றி அதற்கு சிகிச்சை செய்யும் பொருட்டு மந்திரவாதியினிடம் போக முயற்சிப்பாள். ஆனால் புத்தி சாதுர்யமுள்ள பூவையர் தங்கள் புருஷர்களின் எந்த நிலைமையிலும் உதவியாயிருந்து, அவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யத் தாமே முயர்ச்சி எடுத்துக்கொள் வார்கள். எவ்வகையிலும் தைரியம் சொல்லித் திடப்படுத்தித் தங்கள் புருஷரை மனக்கலக்கத்திலிருந்து விடுவிப்பார்கள்.

மேலே சொல்லி வந்த நடவடிக்கையினால் நமக்கு விளங்குவ தென்னவென்றால், ஒரு ஸ்திரீ புத்திசாலியாயிருந்து அவள் தன் புருஷன் மீது வைக்கும் பிராண நேசமானது, சந்தேகமின்றி நம்பக்கூடியதாயு மிருக்கிற பக்ஷம், புருஷன் தன்னுடைய ஒவ் வொரு முக்கியமான இரகசியத்தையும் அவளிடம் சொல்ல வேண்டுமென்பதுதான். தற்கால போதனையானது ஸ்திரீகளைப் புருஷர்கள் அறவே நம்பாதபடி அவர்களை அவமதிக்கும்படி செய்துவிட்டது. ஒரு சாதாரண இரகசியத்தையும் அவர்கள் தங்கள் மனைவிகளுக்குச் சொல்வதில்லை. ஸ்திரீகளுக்கு கச்சா புத்தியென்றும், அவர்களிடத்தில் இரகசியத்தை வெளியிடக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இது அவர்களின் வெறும்பேச்சான எண்ணமேயொழிய வேறல்ல. ஸ்திரீயானவள் அறிவும் ஆழ்ந்த யோசனையும் விவகார விளக்கமும் உடையவளா யிருக்கிற படியால் அவள் தன் புருஷனுக்கு ஒவ்வொரு விவகாரத்திலும் ஒரு நல்ல யோசனை சொல்லக்கூடும். ஸ்திரீயின் மூளையானது இயற்கையில் நுண்ணியதா யிருக்கிறது. அவளு டைய மனதில் உதிக்கின்ற ஒவ்வொரு யோசனையும் நுண்மையும்

தூய்மையுமுடையன வாயிருக்கும், கெட்டவைகளாயிரா. கஷ்டத்தினும் கஷ்டமான ஒரு விவகாரத்தில் மற்றவருடைய அபிப்பிராயம் வேண்டாமலே மனையாள் அதற்குத்தக்க அபிப்பிராயம் கொடுக்கக் கூடியவளாயிருக்கிறுள்.

மேனாட்டு பலாசிபர்களென்னும் அறிவாளர்கள் ஸ்திரீகளுக்கு நல்ல எண்ணமும் நல்ல புத்தியும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறுர்கள். ஸ்திரீயானவள் புருஷனுக்கு அஸிஸ்டெண்டு (உதவியாளர்) என்றும் அவள் தன் புருஷனுடைய ஜீவவாழ்க்கையை ஒரு ஆடவன் செய்யக்கூடாத அவ்வளவு நல்ல விதமாகச் செய்விக்கக் கூடுமென்றும் சொல்லுகிறுர்கள். ஸ்திரீகளுக்கு இத்தகைய சற்குணங்கள் உண்டென்று அவர்கள் ஒப்புக்கொண்டது மாத்திரமல்ல, மேலும் நமது ஆடவர்களின் உதவியாலும் முடிக்கக் கூடாத வேலைகளை அவர்கள் தங்கள் மனைவிமார்களிடம் வாங்குகிறுர்கள்.

இதேபோல் இஸ்லாம்மார்க்கமானது ஸ்திரீகளுக்குப் பெரிய பதவியைக் கொடுத்திருக்கிறது. மூடபுத்தியுள்ள பூர்வகாலத்தில் ஸ்திரீகளுக்கு யாதொரு மதிப்பும்இருக்கதில்லை. அடிமைப் பெண்களைப்போல் அவர்கள் சிறுமையுற்றவர்களென்று எண்ணப்பட்டார்கள். ஸ்திரீயானவள் சந்தான விருத்திக்கு ஓர் கருவியாக மாத்திரம் இருக்கிறுளென்று ஆடவர்கள் எண்ணியிருந்தார்கள். என்றுலும் இஸ்லாம்மார்க்கம் இத்தரணியின் மீது பரவினபோது அது ஸ்திரீகளின் ஹக்காகிய சுதந்திரங்களை அவர்களுக்கு ஸ்தாபிப்பதில் முழுமுயற்சி செய்திருக்கிறது. புத்தியிலும், யூகத்திலும், நுண்ணறிவிலும், தீக்ஷண்யத்திலும், கல்வியிலும், கௌரவத்திலும், தத்வஞானத்தைக் கற்றுத்தேர்வதிலும், ஸ்திரீயானவள் ஆடவருக்கு சமமானவள் என்ற பதவியை அவளுக்கு அளித்து, அடிமைத்தனமென்னும் அரிகண்டத்தை அவள் கழுத்திலிருந்து கழட்டிவிட்டது.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஹிராமலைக் குகையில் தங்கள் மீது நடந்த சகல சம்பவங்களையும் ஒளிக்காமல் ஒவ்வொன்றையும் கதிஜா நாயகியினிடம் சொல்லிவிட்டதானது இஸ்லாம் மார்க்கப் போதனைக்கு அறிகுறியாவான ஓர்அரிய நமூனு

யிருந்தது. இந்த முழுநம்பிக்கையின் பயனுகவே கதீஜாநாயகி, றஸூல் நாயகமவர்கள் வஸ்வாஸூ என்னும் குழப்பமான சிந்தனைகளால் வருந்திக் கொண்டிருந்த ஓர் கஷ்டகாலத்தில், பல விதத்திலும் அவர்களுக்கு தைரியம் சொல்லித் திடசித்தமென்னும் அச்சிலிருந்து மனம் பிறழாவண்ணம் தேற்றித்திரப் படுத்தினர்கள்.

இச்சமயத்தில் கதீஜாநாயகி தென்பு சொல்லித் தேற்றினது போல், ஒரு ஆடவன் செய்திருக்க முடியாது. நாயகமவர்கள் இந்த சம்வத்தை ஒரு ஆடவனிடத்தில் சொல்லியிருக்கும் பக்ஷம் பிறகு இதைக் கேள்விப்பட்ட முஷ்ரிகான அறபுகள் பரிகசித்ததுபோல் அவனும் பரிகசித்து நகைத்திருப்பான். ஆனல் நாயகமவர்கள் தங்கள் விசுவாசியான பீவியின்மேல் நம்பிக்கை வைத்தார்கள். நம்பிக்கை வைத்த பின் நாணமடையாவண்ணம் கிருபைபுரிந்த அல்லாஹு தஆலாவுக்கே எல்லாப் புகழுமென்று அவனை புகழ்வோமாக.

மேலே சொல்லிவந்தவை நமக்கு விளக்கிப் போதிப்பதென்னவென்ருல், நம்முடைய மனையாட்டிகள் புத்திசாலிகளாயும் நம் மீது தங்கள் பிராணனை அர்ப்பணஞ்செய்ய சித்தமானவர்களாயும் இருக்கிற படியால் நாம் அவர்களை அவசியம் நம்பவேண்டும். முக்கியத்திலும் முக்கிய காரியங்களில் அவர்களிடம் ஆலோசனை கேட்பது சரியல்லவென்று நினைக்கக்கூடாது. நம்மிடத்தில் உண்மையான பிரியம் வைத்திருக்கிற ஒரு மனையாட்டியின்மேல் கெட்ட எண்ணங்கொண்டு, அவளை நமது இரகசியக் காரியாக்காமலும் நம்முடைய விவகாரங்களில் அவள் இடத்தில் ஆலோசனை கேட்காமலும் அவளை ஒதுக்கவேண்டிய அவசியமென்ன இருக்கிறது? ஆனல் ஒரு ஸ்திரீயினிடத்தில் நம்பிக்கை வைக்க சந்தேகமாயிருந்தாலும் அல்லது அனுபவத்தில் அவள் விசுவாசமில்லாதவளென்று தெரிந்தாலும், அப்படிப்பட்டவளை நமக்கு இரகசியக் காரியாக்குவதும் அவள்பேரில் நம்பிக்கை வைப்பதும் ஒரு வீண் வேலையேயாம். எல்லா ஸ்திரீகளும் ஒருத்தர் மற்ருெருத்தரைப் போல் இருக்க மாட்டார்களென்பது இயற்கை. அவரவர்களின் சுபாவம் வெவ்வேரு யிருக்குமென்பது எவரும் மறுக்கக்கூடாத சத்தியம். உண்மை இப்படியிருப்பதால் நமது ஜீவவாழ்க்கையில்

நமக்கு துணைவியாயிருக்கக்கூடிய ஒரு ஸ்திரீயை தேடி விவாகஞ் செய்து கொள்ள வேண்டும். ஆகவே அவள் பர்த்தாவின்மேல் பக்ஷமுள்ளவளாயும் இரகசியத்தைக் காக்கும் குணமுள்ளவளாயுமிருக்கவேண்டும் அறிவிலியாயும் மூடமதியாயும் இயற்கையில் நிலைபிறழ்கிறவளாயும் சந்தோஷமில்லாதவளாயும் நிமிஷத்துக்கொரு குணமாக மாறுகிறவளாயும் இருக்கக்கூடாது.

தற்காலத்தில் நாகரிக வெளிச்சமும் போதனுமுறைகளின் பிரகாசமும் உலகத்தின் பலபக்கங்களிலும் பரவிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இப்போது இத்தகைய அறிவும் சற்குணமுமுள்ள பெண்கள் பெருகியே யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மணவதியாய் வரும்போது, நாம் மேலே சொல்லிவந்தபடி செல்வப் பெண்களாகவே யன்றி இல்லப் பெண்ணாக்கப்பட்டு வருவதில்லை. மேலும் ஒவ்வொரு பெண்ணையும் புருஷன் தன் எண்ணத்துக்கிசைய இல்லப் பெண்ணாக்கிக் கொள்ளவேண்டும். கதீஜா நாயகி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய இயல்பான வழக்கங்களையும் எண்ணங்களையும் அறியாதவரா யிருப்பாராயின், இவ்வளவு சீக்கிரத்தில் நாயகமவர்களுக்குத் துணைவியாக நின்று அவர்களைப் பாதுகார்ப்பதிலும் தைரியம் சொல்லித் தேற்றுவதிலும் சிரமமெடுத்துக்கொள்ளமாட்டார். மேலும் இந்த சம்பவங்கள் கதீஜா நாயகிக்குப் பெருந்துன்பத்தை விளைப்பதாக ஏற்பட்டிருக்கும். கதீஜா நாயகி கஷ்டத்தை அடைவதினால் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுடன் இந்த கஷ்டமும் மேற்கொண்ட கஷ்டமாய் இரட்டிக்க இடமிருந்தது. கதீஜா நாயகி தமது நாயகருக்கு தைரியம் சொல்லித் தேற்றினது மாத்திரமல்ல. மேலும் அவர்களுக்கு நேர்ந்த சந்தேகங்களையும் சஞ்சலங்களையும் மாற்றி திடசித்தமுண்டாக்குவதற்கு வேண்டி பாடு பட்டார். அவற்றின் விபரம் பின்னால்வரும்.

இதைச் சொன்னதில் நம்முடைய நோக்க மென்னவென்றால், முஸ்லிமான ஆண், பெண்களனைவரும் தங்கள் ஜீவவாழ்க்கையென்னும் இராஜபாட்டையில் தங்கள் ரஸூல் அலைஹிவஸல்லமையும் அவர்களின் மனையாட்டியையும் பின்பற்றி நடக்கவேண்டுமென்பதேயாம்.

97.384 N130



## நுபுவ்வத்துக்கு உதவியும் கதீஜா பெருமாட்டியும்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு கதீஜா பிராட்டியார் பல வகையிலும் தைரியம் சொல்லித் தேற்றி அவர்களின் நெஞ்சகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த சிந்தனைகளை அகற்றி விட்டாரென்றாலும், அவர் தமது மனச்சாந்தி அதிகரிக்கும் பொருட்டு, நாயகமவர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தமது சிறிய தந்தையின் குமாரரான வரக்கத்இபுனு நவ்பலிடம் போனார். இந்த வர்க்கத் தென்பவர் முன்னர் விக்கிரகத் தொழும்பராய் குறைஷிகளுடன் கூடியிருந்தவர். என்கினும் இப்போது சிறிது காலமாக இவர் கிறிஸ்துவராய் இருந்து வந்தார். இவர் முன்னுள்ள வேதவாக்கியங்களில் அநேகத்தைக் கற்றுத் தேர்ந்திருந்தார். மக்கா வாசிகளில் இவருடைய கல்வியும் பெருமையும் நன்கு மதிக்கப்பட்டு இவர் மிகவும் நம்பிக்கையுள்ளவரா யிருந்தார்.

அவரிடம் கதீஜா நாயகி கேட்ட தென்னவென்றால், “என் சிறிய தந்தையின் குமாரரே! தவுராத், இஞ்சீல் வேதங்களில் முன்னறிக்கையாக, இக்காலத்தில் ஒரு நபி தோன்றுவார் என்றும் அவர் அநாதையாயும் ஏழையாயு மிருப்பாரென்றும், அல்லாஹு தஆலா அவரை சீமானுக்குவான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதா? இதை எனக்காகச் சொல்லும்” என்றார். அதற்கு வர்க்கத்து சொன்ன ஜவாபாவது:—கதீஜாவே! மெய்தான் இப்படிப்பட்ட முன் அறிக்கை வானவேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நபி ஒருவர் அவசியம் உண்டாவார். அவருடைய மற்றகுணங்களில் ஓர் குணமாவது அவர் ஈசா நபி அலைஹிஸ்ஸலாமைப்போல் ஜலத்தின்மேல் நடப்பார். செத்த சவங்கள் அவரிடத்தில் பேசும். கற்கள் அவருக்குச் சலாம் சொல்லும். மரங்கள் அவரை நபியென்று சாட்சி கூறும். இப்போது அந்த நபி வெளியாகுங் காலமும் நெருங்கிவிட்டது. நீர் இதைக் கேட்டதில் உமது நோக்கமென்ன, ஏன் கேட்கிறீர்?” என்றார்.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS 111451

அதற்கு கதீஜா நாயகி “என் கணவரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஹிராமலைக் குகையிலிருந்தார்கள்.

அவர்கள் மேல் திடும்பிரவேசமாக ஜிப்ராயீல் தோன்றினர். அவர்கள் நடுநடுங்கி அச்சமுற்றார்கள். அல்லாஹு தஆலா அவர்களுக்கு வஹி அனுப்பினன் என்றார்.

இதைக்கேட்ட வரக்கத்து 'குத்தூஸ் குத்தூஸ்' என்று சத்த மிட்டு "கதீஜாவே! உம்மால் முடியுமானல் முஹம்மது (ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைச்சற்று என்னிடம் அழைத்து வாரும் என்றார். கதீஜா நாயகி திரும்பிப் போய், நாயகமவர்களை மிகவும் மறைவாக தம்முடன் கூட்டிக் கொண்டு, வரக்கத்இபுனு நவ்பலிடம் வந்தார். அவர் நாயகமவர்களின் வாய்மூலம் ஹிரா மலைக் குகையில் நடந்த எல்லா சங்கதிகளையும் கேட்டு அவர் சொல்லத் தொடங்கினர்:—"முஹம்மதே! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாவின் ஆணை, நீர் இந்த உம்மத்துக்கு நபியாயிருக் கிறீர். ஹிராமலைக் குகையில் உம்மிடம் வந்தவர் அல்லாஹு தஆலாவின் மலக்கான ஜிப்ராயீலா யிருக்கிறார். உம்முடைய வருகையைப் பற்றி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் முன்னறிக்கை யாக எனக்குப் பின் ஒரு நபி வருவார் என்றும், அவருடைய திருநாமம் அஹ்மது என்றும் எச்சரித்திருக்கிறார்" என்றார். பிறகு அவர் நாயகமவர்களின் நெற்றியில் முத்தங் கொடுத்து, மிகத் தாழ்மை யுடன் "நாயகமே! சமீபகாலத்தில் விக்கிரக வணக்கத்தை அழிக்கும் படி உங்களுக்கு உத்திரவு வரும். எங்கள் கூட்டத்தார் உங்களை ஊரிலிருந்து பரிஷ்காரம் செய்யப்போகிற அந்தக் காலம் வரையில், நான் உயிரோடிருக்க வேண்டும். அப்போது நான் என் மார்பைக் கேடயமாக்குவேன்" என்றார்.

வரக்கத்தென்பவர் சொல்லிய இந்த வார்த்தைகளால், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குத் திருப்திகரமுண்டா யிற்று. அவர்களின் மனக்கலக்கம் நன்மாராயமாக மாறினது. கதீஜா றலியல்லாஹு அன்ஹாவுடன் திரும்பி, தங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

கதீஜா நாயகிக்கோ இது விஷயத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குப் பூரண தேருதல் உண்டாக்க வேண்டு மென்ற நோக்க மிருந்தது. ஆனல் குறிகூறும் மாதர் களாலும் சாஸ்திரிகளாலும் கேட்டு வந்த அந்த அந்த அடையா

ளங்க ளெல்லாம் நாயகமவர்களிடத்தி லிருக்கக்கண்டு, தாம் அந்த நுபுவ்வத்தின் பரகத்துகளை அடையவேண்டு மென்ற ஆசையி னாலேயே நாயகமவர்களை மணம் புரிந்து கொள்ள கதீஜா நாயகிக்கு பேராவல் இருந்து வந்தது. இப்போது இவ்வகையான அடை யாளங்கள் தமது நாயகரிடத்தில் தோன்றத் தொடங்கின படியால், கதீஜா நாயகி மிக்க சந்தோஷமானார். தமது நாயகரைப் பூரணமாகத் தேற்றி திடப்படுத்துவதற்கான முயர்ச்சியின் மேல் முயர்ச்சி செய்யத் தொடங்கினர்.

இவ்வகையான தேற்றலுக்கு இரண்டே வழிகளிருந்தன. ஒன்று அறபுகளில் காஹின் என்னும் குறிகாரரும் மற்றொன்று கிறிஸ்துவர்களில் ராஹிபு என்னும் சன்னியாசியுமாவர். அக் காலத்தில் யாரும் இவர்களையே நம்பி யிருந்தார்கள். இவர்கள் தான் வானவேதங்களின் கல்வி வித்தைகளில் தேர்ச்சி யடைந் திருந்தவர்கள். ஆகவே கதீஜா நாயகி தம்முடைய சிறிய தந்தையின் குமாரரான வரக்காவினிடத்திலிருந்து வீட்டுக்கு வந்த பிறகு, அவர் மனதில் ஓர் குழப்பமுண்டாயிற்று. அதாவது:—வரக்கத்து எனக்கு முறையில், சகோதரரா யிருக் கிறார். அவர் என்னையும் என் கணவரையும் மனக்கலக்க முள்ளவர்களா யிருக்கக் கண்டு, எங்களை ஒருவாறு தேற்றி மனவோர்மை யுண்டாக்குவதற்காக இப்படி சொல்லியிருப்பார் என்கிற குழப்பந்தான் கதீஜா நாயகியின் மனதில் பிறந்தது. இந்த குழப்பத்தினால் அவர் நேரே அத்தாஸ் என்பவ ரிடம் போனார். இந்த அத்தாஸ் என்பவர் நைநுவா என்னும் ஊரிலுள்ள ஒரு பெரிய ராஹிபு என்னும் கிறிஸ்துவ சன்னியாசி. இவரோ பெரிய முதுமூப்பரான கிழவர். அவருடைய பெருங்கிழத் தன்மையினால் இரண்டு புருவங்களும் தொங்கி கண்ணின் மேல் விழுந்து கிடந்தன. இவர் கதீஜா நாயகியைக் கண்டவுடன் மரியாதையாக எழுந்து நின்று, "அறபுகுல நாயகி! நீர் இங்கு வருவதற்குச் சிரமம் எடுத்துக் கொண்ட காரணம் யாதோ" என்றார்.

அதற்கு கதீஜா நாயகி, "ஏ அத்தாஸே! நான் உம்மிடத்தில் ஒரு சங்கதி கேட்க வந்திருக்கிறேன். ஜிப்ராயில் என்பவர் இன்னா ரென்று உமக்குத் தெரியுமா? வான வேதங்களில் அவரைக்

குறித்து ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா, இல்லையா? மக்காவில் இந்தப் பெயர் வழங்கக் காணுேமே. மக்காவிலென்ன, அறபுதேசம் முழுவதிலும் அநேகமாக இந்தப் பெயரை ஒருவரும் அறிய மாட்டாரே" என்று சொன்னுர்.

அத்தாஸ் இதைக் கேட்டவுடன், தனது தொங்கிய நரைத்த புருவங்களைத் துரிதம் துரிதமாகத் தூக்கித் திகைப்போடும் கண்ணியத்தோடும் பார்த்தார். அவரின் அரைக்கண் திறப்பானது அவரது எண்ணத்தின் மகிமையை விளக்கினது. அவர் கைகாட்டிக் கொண்டு நின்றவராக "குத்தூஸ் குத்தூஸ்" என்று கூறி இணை வைத்து வணங்குகிறவர்களும் விக்கிரகத் தொழும்பரும் வசிக்கின்ற இந்தப் பூமியின்மேல் ஜிப்ரயீலுடைய பேச்சென்ன வென்றுர்.

அதற்கு கதீஜா நாயகி, "அத்தாஸே! நான் கேட்பதற்கு மாத்திரம் விடை தாரும்" என்றுர். அப்போது அத்தாஸ், "அறபுகுல நாயகி! ஜிப்ரயீல் என்பவர் அல்லாஹுத்தஆலாவுடைய பரிசுத்தரும் அமீனுமாகிய ஒரு மலக்கா யிருக்கிறுர். அவர் தான் மூசா நபி, ஈஸா நபி அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு அல்லாஹுத்தஆலாவினிடத்தி லிருந்து வஹி கொண்டு வருவார். அந்த நாமூசுல் அக்பர் என்னும் ஜிப்ரயீல் இந்தப் பட்டணத்தில் இறங்கத் தொடங்கினுல் நைரும் பரக்கத்தும் பெருகும். பஞ்சத்தின் கொடுமையி லிருந்து அறபு தேசம் செழிப்படையும். என்றுலும் நீர் என்னிடத்தில் இதைக் குறித்து ஏன் விசாரணை செய்தீர் சொல்லும்" என்றுர்.

அப்போது கதீஜா நாயகி, அத்தாஸே! நீர் இரகசியத்தை வெளியிடக் கூடாதென்று அவருக்கு ஆணையிட்டு அதன் பிறகு நபிகள் நாயகம் ஹிராமலைக்குப் போனதும், ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்ததும், நாயகத்துக்கு அவர் படித்துக் கொடுத்ததும் பின்பு மறைந்து போய்விட்டதுமான எல்லா சங்கதிகளையும் அத்தாஸுக்கு எடுத்தோதினுர். அதற்கு அத்தாஸு சொன்னதாவது:—அநேகமாக ஷைத்தானும் மனிதர்களிடத்தில் வந்து அவர்கள் அதிசயிக்கத்தக்க வித்தைகளை காட்டுவதுண்டு. அவன் அருமையான புதுமைகளை அவர்களின் பார்வைக்குத் தோன்றச் செய்வான். ஆகவே இது அந்த ஷைத்தானுடைய ஜாலவித்தையாயு

மிருக்கலாம். நீர் என்னுடைய இந்தக் கடித்தை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடம் கொண்டுபோய் அவர்களுக்குக் காட்டும். அவர் பைத்தியத்தினால் அல்லது பிசாசினால் பீடிக்கப் பட்டிருந்தால் சவுக்கிய மடைவார். நபியா யிருந்தால் இதனால் அவருக்கு யாதொரு நஷ்டமும் நேரிடாது என்பதே.

கதீஜா பெருமாட்டி அத்தாஸ் எழுதிக் கொடுத்த அந்தக் காயிதத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த போது, அங்கு என்ன நடந்து கொண்டிருந்த தென்றால், ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலா மவர்கள், நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு இந்த ஆயத்துகளை (அதாவது நூன் வல்கலமி என்பது முதல் பிஅய்யிக்கு முல் மப்தூன் என்கிற வரையில்) இரைந்து ஓதி காட்டிக் கொண்டிருந்தார்கள். இப்படியாக அவர்கள் ஓதிக் காட்டின சப்தம் கதீஜா நாயகியின் காதுக்கு எட்டின போது அவர் அத்தியந்த சந்தோஷத்தை யடைந்து, ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களை நோக்கி, "நாயகமே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகக் கடவர். தாங்கள் தயைகூர்ந்து என்னோடு சற்று அத்தாசினிடத்திற்கு வரவேண்டுமென்றனர். நாயகமவர்கள் எழுந்து நாயகியுடன் அத்தாசினிடம் போனார்கள். அவர் நாயகமவர்களின் முதுகுப் போர்வையைத் திறந்து பார்த்தார். அதில் நடுப்பகல் சூரிய னைப்போல் பிரகாசிக்கும்படி வரையப்பட்டிருந்த முஹ்ரெ நுபுவ்வத்தைக் கண்டு சாஷ்டாங்கமாக சஜ்தாவில் விழுந்து எழுந்து "முஹம்மதே! (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அல்லாஹ்வின் மேல் ஆணையாக. தவுராத், இஞ்சில் வேதங்களில் மூஸா அலை ஹிஸ்ஸலாமும் ஈஸா அலைஹிஸ்ஸலாமும் முன்னறிக்கையாக அறிவித்திருக்கிற அந்த நபி நீங்களாகவே யிருக்கிறீர்கள்" என்று சொல்லி", அல்லாஹ்வுடைய நபியே! உங்களுக்கு அல்லாஹ்விடத் திலிருந்து ஏதாவது கட்டளை பிறந்திருக்கிறதா? என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் இல்லை என்றார்கள். அப்போதவர் "சமீப காலத்தில் ஜனங்களை நல்வழிக்கு அழைக்கும்படி உங்க ளுக்குக் கட்டளை பிறக்கும். ஜனங்கள் உங்கள் சொல்லை நம்பாமல் உங்களைப் பொய்யரென்று சொல்லுவார்கள். அக்காலம் வரையில்

நான் உயிரோடிருக்கிற பக்ஷம் அல்லாஹ்வின்மேல் ஆணையாக நான் அந்த சத்துராதிகளுடன் சண்டை செய்வேன்" என்றார்.

இதைக்கேட்டு நாயகரும் நாயகியும், தங்கள் வீட்டுக்குவந்து சேர்ந்தார்கள். இதற்குப் பின் கதீஜா பிராட்டியார் அநேகம் குறி கூறும் மாதர்களால் நுபுவ்வத்தின் அடையாளங்களைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். ஒரு நபி பிரசன்னமாவா ரென்று முந்தின நபிமார்கள் கூறிவந்த முன்னறிக்கை தங்களில் தான் நிறைவேறி யிருக்கிற தென்றும், தாங்கள் அல்லாஹு தஆலாவுடைய ஒரு பெரிய நபியாயும் றஸூலாயும் மிருக்கிறீர்கள் என்றும் கதீஜா பிராட்டியார், நாயகமவர்களுக்கு முழுநம்பிக்கை யுண்டாகும்படி தேற்றித் திடப்படுத்தினர்.

ரிஸாலத்தையும் நுபுவ்வத்தையும் பலபடுத்தும் பொருட்டு கதீஜா நாயகி என்னென்ன முயர்ச்சிகள் செய்தார்கள், நாயக மவர்களைத் தேற்றித் திடப்பட்டுத்துவதற்காக எங்கெங்கு அலைந்தார்கள், பார்தீர்களா? றஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் காரியம் சித்தியாவதற்கு கதீஜா நாயகி ஒரு பெரிய உதவியாயும் பக்கபலமாயும் இருந்தன ரென்று எல்லா சரித்திரக் காரரும் ஒரே வாக்காகச் சொல்லுகிறார்கள்.

நமது பெண்டீரும் தங்கள் புருஷர்களுக்கு இதே விதமாக மன உருக்கத்துடன் உதவி புரிந்து அவர்களைக் காப்பாற்றி கஷ்டத்திலும் கஷ்டமான ஒவ்வொரு முக்கிய காரியங்களிலும் அவர்களுடன் ஒத்துழைப்பது அவசியமாகும். மனைவியானவள் கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியா யிருக்கிறாள். ஆதலால் அவள் தன் வாழ்நாள் முழுதும் தன் கணவனுக்குத் துணைவியா யிருக்க கடமைப் பட்டவளாகின்றாள். இதை கதீஜா நாயகி அநுஷ்டித்துக் காட்டினது சூரியப் பிரகாசத்திலும் பிரசித்தமா யிருக்கிறது. அவர் தமது நாயகருக்கு ஏதாவது அச்சமும் சஞ்சலமும் உண்டானால் அப்போது அவர்தாமே அவர்களுக்குத் தைரியம் சொல்லித் தேற்றுவார். கதீஜா பெருமாட்டி மிக்க மன உறுதியும் தக்க பக்தியும் வாய்ந்த ஒரு பெண்மணியா யிருந்தனர். உலுல் அஸ்மியான றஸூல்நாயகமவர்களின் கால் சோரும்படியான காரியங்களில் கதீஜாபெருமாட்டி நிலையிராமல் மனஉறுதியுடன்

நாயகமவர்களின் தளர்ந்த மனதைத் தேற்றித் தைரியப்படுத்துவார். ஆகவே அல்லாஹு தஆலா நுபுவ்வத்தின் ஆரம்ப வேலைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்காக கதீஜா நாயகியைக் கற்பித்தா னென்று எண்ணவேண்டியதா யிருக்கிறது. றஸூல் நாயகமவர் களை அவர் மணம் புரிந்து கொள்ளும்போது அவருக்கு அக் காலத்தின் தாரதம்மியங்களும் நன்மை, தீமை, மெய், பொய், இதுகளின் பாகுபாடுகளும் தெரிந்திருந்தன. அறபுதேசத்தின் நிலைமையும் அத்தேச வாசிகளின் மூடபக்திகளும், வழக்கானு சாரங்களும் அவருக்குப் போதிய அளவு தெரிந்து, அவை களில் மிக்க அனுபவசாலியாயிருந்தார். அவருடைய ஸ்தா னத்தில் ஒரு கன்னிகையான பெண் இருந்திருக்கிற பக்ஷத்தில் நுபுவ்வத்தின் காரியங்களில் அக்கன்னிகை இவ்வளவு முயர்ச்சி செய்யமுடியாது. நாயகமவர்கள் அவசியம் அப்போது றஸூலாவார்க ளென்றாலும் அவர்களுக்கு கஷ்டங்கள் அகத்தி யமாக அதிகரிக்கும். இதனல் என்ன தெரியவந்ததென்றால், அநுபவசாலியான ஒரு பழய ஸ்திரீ தன் புருஷனுக்கு எப்படி உதவிசெய்யக் கூடுமோ அப்படியாக அநுபவமில்லாத ஒரு புதிய பெண் செய்யவே முடியாதென்பதுதான்.

## நல்வழிக்கு அழைக்க ஆரம்பித்தல்.

இதுவரையில் அல்லாஹு தஆலாவின் பக்கத்திலிருந்து இஸ்லாமில் அழைக்க யாதொரு உத்திரவும் நாயகமவர்களுக்கு வந்ததில்லை. ஆதலால் அவர்களின் அதிகநேரம் அல்லாஹு தஆலாவை பக்தி செய்வதிலும் ஆன்மாவைப் பக்குவப்படுத்து வதிலும் கழிந்தது. எப்போதாவது வஹி இறங்கிவிட்டால் அப்போதவர்கள் அங்கம் நிறையக் கம்பளியைப் போர்த்துக் கொள்ளுவார்கள். வஹி இறங்கினதின் சோர்வு வெகுநேரம் தங்கி யிருக்கும். இதே விதமாக ஒருநாள் அவர்கள் கம்பளி போர்த்த வர்களாய் கதீஜா நாயகியின் வீட்டில் படுத்துக்கொண்டிருந்தார்கள். இருந்தாப்போலிருந்து அங்கு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வஹி கொண்டு வந்து யாஅய்யுஹல் முத்தஸிர் கும்பஅன்ஜிர் வறப்பக்க பகப்பிர் (ஓ கம்பளி போர்த்தினவரே! எழுந்திரும், அல்லா வுடைய வேதனையைப்பற்றி உம் ஜனங்களுக்கு அச்சமுறுத்தும், உம்முடைய றப்பைப் பெருமைப் படுத்தும். உம்முடைய வஸ்தி

ரங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும். அகர்த்தையைப் போக்கும். உமது உபகரிப்புக்குப் பிரதிபலனாக அதிகத்தைத் தேடாதீர். உம்முடைய றப்புக்காகப் பொறுமை செய்யும்) என்பவைகளையும் இன்னுமிவை போன்றவைகளையும் அறிவித்தார். இந்த ஆயத்துகள் இறங்கினபோது நாயகமவர்கள் திடுக்கிட்டெழுந்து கம்பளியை ஒருபக்கத்தில் எறிந்துவிட்டார்கள் இந்த உலுல்அஜ் மியாகிய நபியவர்கள் தங்களுக்கு வந்த உத்தரவை எவரிடத்தில் வெளியிடலாமென்று கதீஜா நாயகியின் வீட்டிலேயே தேடும் பாவனையாக, தங்கள் திருவிழியால் நோக்கிக் கொண்டிருந் தார்கள்.

## எல்லாரினும் இஸ்லாமை முந்தி ஒப்புக்கொண்டவர் எவர்?

இவ்விதமாக றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் களுக்கு வஹிவந்த சமயத்தில், கதீஜா நாயகி அங்கிருக்கவில்லை. வீட்டில்தானே ஏதோ ஒரு வேலையில் பராக்காயிருந்து திடும் பிரவேசமாக நாயகமவர்களை வந்து பார்த்தபோது, அவர்கள் மிக்க அவசரமாக எவரையோ தேடிக்கொண்டிருக்கும் பாவனையில் அவர்களைக் கண்டு, "நாயகமே! தாங்கள் என்ன கவலையி லிருக் கிறீர்கள்? தங்களுக்கு என்ன வஸ்து வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் கதீஜாவே ஒன்றும் தேவை யில்லை. எனக்கு வஹிவந்து இப்போதுதான் சற்றுநேரமாகிறது. அந்த வஹியில் எனக்கு இன்னின்ன கட்டளை பிறந்திருக் கிறது. நான் இதைப் பிரஸ்தாபித்தால் முதலில் என் வார்த்தையை ஏற்பவர் எவர் என்றும், இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து எல்லா முஸ்லிம்களிலும் முந்தின முஸ்லிம் என்ற பட்டம் வாங்க முன்வருகிறவர் எவர் என்றும் தேடுகிறேன் என்றார்கள்.

அப்போது கதீஜா நாயகி தமது மரியாதையான பார்வையால் மகிமை தங்கிய தமது நாயகருடைய பிரகாசரூபத்தை உற்று நோக் கிக்கொண்டிருந்ததுமன்றி, இஸ்லாம் மார்க்கப் போதனையாக அவர்களுடைய திருவாயிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த ஒவ்வொரு சொல்லையும் செவியுற்றனர். ஆதலால் அவருக்கு மனதில் பூரிப்புண்டாகி, அவரது இருவிழிகளும் ஆனந்தக்

கண்ணீர் சொரிந்தன. அவர் சரேலென்று நாயகமவர்களின் பாத கமலங்களில் விழுந்து சொல்லத் தொடங்கினதாவது :—

இறைவனிடத்திலிருந்து இரஸூலாக எழுந்தருளிய இரு லோகத்துக்கும் சர்தாராகிய எங்கள் நாயகமே! தங்கள் நுபுவ்வத்தையும் ரிசாலத்தையும் நான் உண்மையென்று ஏற்று எல்லாரினும் முதன் முதலாக இதோ நான் சாக்ஷியம் சொல்லுகிறேன். அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி என்று ஓதினர். ரஸூல் நாயகமவர்கள் கதீஜா நாயகியின் சிரசை தங்கள் பாத கமலங்களிலிருந்து தூக்கி, மார்போடணைத்து ஆசீர்வதித்தார்கள். பின்னர் இஸ்லாம் மார்க்கத்தைப் போதிக்கும் பொருட்டு இல்லத்திலிருந்து வெளியில் புறப்பட்டார்கள்.

சீர்திருத்தமானது முதலில் தன் வீட்டிலிருந்து ஆரம்பிக்கின்ற தென்பதை எவரும் ஒப்புக்கொள்வார்கள். இதனாலே தான் இஸ்லாமை எடுத்தோதலும் அதை ஏற்றலும் ஆகிய இந்த இரண்டு காரியங்களும் நாயகமவர்களின் வீட்டிலிருந்தே ஆரம்பித்தன. மணவாளனின் இரகசியத்தை மணவாட்டி அறிவதுபோல் மற்றவர் அறியமுடியாது. பெண்ஜாதியானவள் தன்புருஷனுடைய எல்லாநடவடிக்கைகளையும் நன்குணர்ந்திருக்கிறாள், அவள் எப்படி அவனுடைய தாருட்டிய பலத்தை அறிந்திருக்கிறாளோ, அப்படியே அவனுடைய பலவீனத்தையும் அறிந்திருக்கிறாள். அவனுடைய மன நிலைமைகளும் அவனால் நிகழும் புண்ணிய பாவங்களும், அவனுடைய புத்தியின் விருத்தி, குறைவுகளும் இப்படியே அவனுடைய ஒவ்வொரு காரியமும் அவளுடைய கண்ணின் முன் கண்ணாடிபோ லிருக்கும். கதீஜா றளியல்லாஹு அன்ஹா முதன் முதல் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பேரில் ஈமான்கொள்ளாம லிருந்தால், அப்போது அவர்களில் ஏதோ ஒரு குறைவு இருந்ததென்று மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைந்திருந்ததென்றும், கதீஜா நாயகிக்கு அது தெரிந்திருந்ததினாலேயே அவர் ஈமான் கொள்ளாமல் முன்பின் யோசனையில் பின்வாங்கினார் என்றும் எவரும் நினைக்க இடமிருந்தது. ஆனால் அப்படியாகவில்லை. எல்லாரினும் முந்தி கதீஜா நாயகிதான் ஈமான் கொண்டு இஸ்லாமுக்குத் தலைவணங்கினார்.

ஆனால் கதீஜா நாயகிக்கு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதிருந்த அதிக ஆசையினாலேயே, யாதொரு ஆக்ஷேபமு மில்லாமல் இஸ்லாமை அவர் ஏற்றுக்கொண்டா ரென்று எவரும் சொல்லும் பக்ஷத்தில், இது சுத்தப்பிசகு. கதீஜாபெருமாட்டி மிக்க அறிவும் புத்தியுமுள்ள ஒரு ஸ்திரீயா யிருந்தனர் அவரது பிரபுத்துவத்தின் பரக்கத்தானது தாட்சண் யத்துக்காக ஒருவருடைய சொல்லை ஒப்புவதிலிருந்து அவரைக் காப்பாற்றி வைத்திருந்தது. அவர் தம் கணவர் சொல்லுக்கு மறுத்து சொல்லாத மங்கையா யிருந்தது மெய்தான் என்றாலும், கணவருடைய பொய் மெய்களான எந்தச் சொல்லையும் அவர் ஏற்றுக் கொள்வா ரென்பதில்லை. இயற்கையாகவே அவரிடத்தில் ஆலோசிக்கும் சக்தி விசாலித்திருந்தது. விசாரணையின்றி வெறு மனே ஈமான் கொள்வது அவரது நோக்கமா யிருந்தால் பிறகு வரக்துபுனு நவ்பலிடத்துக்கும் அத்தாஸ் என்பவனிடத்துக்கும் ஏன் போகவேண்டும்? கிறிஸ்துவ சன்யாசிகளிடத்திலும் குறி கூறுகிறவர் களிடத்திலும் பொய்உண்மையை விசாரித்தறிய ஏன் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும். இவைகளினாலேயே கதீஜா நாயகி தமது கணவருடைய ஆசையில் பீடிக்கப்பட்டே இப்படி ஈமான் கொண்ட வரல்லவென்றும், மேலும் இஸ்லாமின் உண்மை தமது மனதுக்குத் திடப்பட்டதின் பின்னேயும் நாயகருடைய எல்லா இரகசியங்களும் தமக்குப் புலப் பட்டதின் பின்னேயுமே அவர் ஈமான் கொண்டாரென்றும் நன்கு விளங்குகின்றது.

குறைஷிக் குடும்பத்தில் கதீஜா பெருமாட்டியினும் திரண்ட திரவிய முள்ள செல்வர் ஒருவரு மிருந்ததில்லை. அப்படியிருக்க, அவர் ஏன் அநாதையும் ஏழையுமான ஒரு புருஷனை விவாகம் செய்து கொள்ளவேண்டும்? அந்த அநாதையான ஏழைப் புருஷரோ சுகபோகத்தைத் துறந்தவராக காணப்பட, அவர் ஏன் ஸப்ருசெய்து கொண்டிருக்க வேண்டும்? இதற்குப்பின் ரிஸாலத்தும் நுபுவ்வத்தும் வரத்தொடங்கி அப்போது அதிச யமான ஒருகுணம் பிறந்து, மனதில் கஷ்டத்தை யுண்டாக்கக் கூடிய நிலைமையிலும், அவர் ஏன் அந்தப் புருஷனுடன் ஒத் துழைக்கவேண்டும்? கதீஜா பெருமாட்டி மிக்க தீக்ஷண்ணிய முள்ள மனமும் விவகாரங்களில் ஆழத்தை அறியக்கூடிய நுண்

ணிய புத்தியு முள்ள ஒரு பெண்மணியா யிருந்தனர். இந்த உத்தம குணங்களெல்லாம் மேலும் மேலும் அவருக்குப் பிறந் திருந்ததற்குக் காரணம் யாதெனில், அவர் லக்ஷக்கணக்கான ரூபாய்களை முதலாக வைத்து வர்த்தகம் நடத்திவந்தார். அவர் மந்தபுத்தியும் கோழைமனமும் உள்ளவரா யிருந்திருந்தால் அவருடைய வர்த்தகம் அவ்விதம் ஓங்கிவளர்ந்திராது. இந்த விவகார விளக்கமும் புத்தி சாதுர்யமும் கடைசியாக என்ன பயனை விளைத்த தென்றால், இஸ்லாம் மார்க்கப் போதகருக்கு முன்னால் அவர் தாழ்மையுடன் தலைசாய்த்தார் என்பதே.

ஆசையின் மிகைப்பே அவர் இஸ்லாமை ஏற்பதற்குக் காரண மாயிருந்த தென்று எண்ணப்படும் பக்ஷத்தில், பின்பு இந்த விசா ரணையும் விளக்கத் தேவையும் எதற்கென்று எண்ணுவது? ஒரு வனுக்கு மற்றொருவன்மேல் ஆசையுண்டானால் அவன் தன் கண்ணை மூடிக்கொண்டு, அந்த மற்றொருவன் செல்லும் வழியில் அவனைத் தொடர்ந்து விடுகிறான். அதிலும் பெண்கள் வைக்கும் ஆசையோ சொல்லவேண்டியதில்லை. அவர்களின் ஆசையைக் குறிக்கும் கதைகள் அறபு, இராக்தேசத்துக் கவிதைகளில நிறைந்து கிடைக்கின்றன. அதாவது அவர்கள் தங்கள் ஆசை யினாலும் இஷ்டத்தினாலும், தங்கள் வீடுகளையும் குடும்பங்களையும் நாசமாக்கி விட்டார்கள். இப்படிப்பட்ட கண்மூடித்தனமான ஆசை கதீஜா பெருமாட்டிக்கு, நாயகமவர்கள் பேரில் இருந் திருக்கும் பக்ஷத்தில், அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் தீர விசாரிக்காமலே அவர் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசிய மிருந்தது. ஆனால் அப்படிநடக்கவில்லை. மிக்க யோசனையும் தக்க விசாரணையும் செய்த பிறகே, அவர் இஸ்லாமை ஏற்றுக் கொண்டு அஸ் பல்லுலில் முதகத்திமீன் அதாவது இஸ்லாமில் முந் தினவர்களுக்குப் பெருமையுண்டென்னும் வாக்கியத்தின்படி முஸ்லிம்களின் அட்டவணையில் அவர் தமது பெயரை முதலில் பதிவு செய்து கொண்டார். முஸ்லிமான பெண்கள் எல்லாரினும் கதீஜா நாயகியே முதன் முதல் இஸ்லாமை ஏற்றுக்கொண்டவரா யிருப்பதுபற்றி, அவருடைய பரிசுத்தமும் அவருடைய பெரு மையும் மற்றவருக்கில்லையென்ற மதிப்புடன் பார்க்கத்தக்கனவா யிருக்கின்றன. இதுவுமன்றி உம்முல் மூமினீன் என்னும் மகிமை

தங்கிய பட்டமானது மற்றவருக்கு அவ்வளவாக லாயக்கில்லாமல் கதீஜா நாயகிக்கே முற்றிலும் பொருந்துகின்றது, இந்த ஒரு பெருமைதான் மற்ற நம்பிராட்டிமார்களில் கதீஜா நாயகியை மேன்மை படுத்தினது. இதனாலேயே அவர் மற்றவரினும் மிக்க சிறப்புள்ளவரென்று எண்ணப்படுகிறார்.

## கட்டளையை ஜனங்களில் பிரஸ்தாபிக்கும்போது நேர்ந்த கஷ்டங்களில் கதீஜாபெருமாட்டியின் உதவி.

கதீஜா பெருமாட்டி இஸ்லாமை ஏற்றுக்கொண்ட பிறகு றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைச் சேர்ந்தவர்களிடம் இஸ்லாத்தின் மீது அறுக்காறு உண்டாயிற்று. ஆகவே ஆண் பிள்ளைகளில் முதன்முதல் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களும், பின்பு ஜெய்துபுனுல் ஹாரிசு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அபூபக்கர் ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். இவர்களுக்குப் பிறகு ஹஸரத் உதுமானுபு அப்பான், ஜுபைருபுனுல் அவாம், தல்ஹாபின் அப்துல்லா, ஸஅதுபுனுல் அபி வக்காஸ், அப்துர் ரஹ்மானுபுனு அவுபு றலியல்லாஹு அன்ஹும் இவர்கள் ஷஹாதத்து கலிமா ஓதி இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு இஸ்லாத்தில் சேர்ந்ததினால் குறைஷித் தலைவர்களிலும் கல்விமான்களிலும் பெரிய புகார் உண்டாய்விட்டது. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் கூடி கூடிப் பேசுகிற சப்தம் கிளம்பிவிட்டது. அபூபக்கர் போன்ற குறைஷித் தலைவர், எவருடைய பலாத்காரமுமில்லாமல் தாமே தமது மனப்பிரியத்துடன் இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டாரென்றால் இஸ்லாம் மார்க்கத்தில் ஏதோ விசேஷமிருக்கவே வேண்டுமென்றும் அதன் சட்டதிட்டங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்றும் தினேதினே ஜனங்கள் ஆராந்து அதில் சேர்ந்து கொண்டு போவதற்குக் காரண மின்னதென்று கண்டு பிடிக்க வேண்டுமென்றும் அந்த தலைவர்களும் கல்விமான்களும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். இதுவிஷயத்தில் எல்லாரையும் காண முக்தி ஆலோசிக்க முயன்றவர்கள் அபூஉபைதா ஜர்ராஹ், அபூமஸ்லமா மக்ஜுமி, உஸ்மானுபுனு மல்ஊன், அர்கமுபுனுல்

அரகம் றலியல்லாஹு அன்ஹும் இவர்கள்தான். இவர்கள் இஸ்லாம்மார்க்க சட்டதிட்டங்களை உற்றுணர்ந்துப் பார்த்துப் பிறகு இவர்களும் இஸ்லாமில் சேர்ந்து விட்டார்கள். இவர்களுக்குப் பிறகு நூற்றுக்கணக்கான அறபு கனவான்கள் இஸ்லாமைப் பின் பற்றினார்கள்.

இதனால் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவுக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அவர் முதன் முதலாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டபோது அவருடைய பந்துக்கள் அவரைப் பலவகையிலும் நிந்தித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் எவருடைய நிந்தனையையும் லக்ஷியம் பண்ணாதவரா யிருந்தார். இப்போது இஸ்லாமுடைய சங்கம் விசாலிப்பதைக்கண்டு அவருடைய ஈமானில் ஒரு புதிய பலமும் பக்தி விசுவாசங்களில் ஒரு பூரிப்பும் அவருக்கு உண்டாயின. அதனால் அவர் சலுவை பேசிப் பெருமையடிப்பவரா யிருந்தார். எந்த மார்க்கத்தை அவர் எல்லாரினும் முன்னதாக ஏற்றுக்கொண்டாரோ அந்த மார்க்கம் உண்மையும் சத்தியமும் நிறைந்த மார்க்கமாக வெளிப்பட்டது. கடைசியாக எல்லா அறபுகளும் அதற்கு மிகமரியாதையுடன் தலைசாய்க்கும்படி நேரிட்டது.

இது நிற்க, றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் ஒரு விஷயத்தில் அதிக சந்தோஷமிருந்தது. அதென்னவென்றால், எந்த மார்க்கத்தை பிரசாரம் செய்யும் பொருட்டு உலகத்தில் அவர்கள் அனுப்பப்பட்டார்களோ அந்த மார்க்கத்துக்கு எல்லாரினும் முந்தி அதிக உதவியாக நின்றவர் தங்கள் மணவாட்டியா யிருந்தனர் என்பதுதான். அறபு கனவான்களில் அநேகர் இஸ்லாத்தில் சேர்ந்து கொஞ்சநாள் சென்றபிறகு, கதீஜா நாயகி ஈமான் கொண்டிருக்கும் பக்ஷம், அப்போது றஸூல் நாயகமவர்களுக்கு இவ்வளவு சந்தோஷ முண்டாகாதிருக்கலாம். ஆனால், இவர் இஸ்லாத்தில் முந்தவேண்டு மென்று இறைவன் விதித்திருக்க அதற்கு மாறாக எப்படி நடக்கும்?

இப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி ஸல்ல மவர்களின் செய்கை எப்படி நிகழ்கின்றதென்றால், அவர்கள் மக்காவின் குன்றுகள் மேல்ஏறி ஏறி கூவி அழைத்து அறபுகளுக்கு அதினும் முக்கியமாக குறைஷி குடும்பத்தாருக்கு இஸ்லாம் மார்க்கத்தை

பிரஸ்தாபிக்கத் தொடங்கினர்கள். அறபுகளில் மூடராயிருந் தவர்கள் அவர்கள் கூப்பிட்டழைக்கும் சப்தத்தைக்கேட்டுச் சிரிப்பவர்களாயும், அவர்கள் பிரசங்கிக்கும் சொற்களைக் கேட்டுப் பரிகசிப்பவர்களாயு மிருந்தார்கள். ஆனால் எந்த ஜனங்களுடைய இருதயங்களில் இஸ்லாத்தின் ஒளி பிரகாசிக்காமல் மறைந் திருந்ததோ அவர்கள் தங்கள் மூட இருளை இஸ்லாமின் ஒளியால் அகற்றித் தங்கள் மனங்களை அவ்வொளியால் நிறைத்து, ரஸூல் நாயகமவர்களின் பாதகமலங்களில் விழுந்து பணிகிறவர்க ளாயும் உண்மையான மனதோடு ஈமான் கொள்கிறவர்களாயு மிருந் தார்கள்.

அறபு காபிர்கள், ஒரு அநாதையா யிருந்த 'ஒரு பையன்' இவ்வளவு ஊர்ஜிதமாகத் தன் மார்க்கத்தைப் பிரஸ்தாபிக்கிரு னென்று கண்டு பொருமை கொண்டு, நாயகமவர்களை இம்சிக்க வேண்டுமென்று அவர்க ளெல்லோருஞ் சேர்ந்து ஒரு சபைகூடி ஆலோசித்தார்கள். என்ருலும் கதீஜா பெருமாட்டியின் பிரபுத்துவ அதிகாரமானது அவர்களின் சதியாலோசனைகளை யெல்லாம் தனது வெள்ளத்தால் அழித்துவிடுவதா யிருந்தது. அவர் தமது பொருளை யெல்லாம் இஸ்லாத்துக்காக அள்ளி இரைப்பவரா யிருந்தார். இஸ்லாம் மார்க்கப் பிரசார வேலைக்கு என்னென்ன சாதனங்கள் வேண்டியிருந்தனவோ அவைகளெல்லாம் கதீஜா பெருமாட்டியின் ஒரு அற்ப சமிக்கையினல் கிடைப்பனவா யிருந்தன. பசித்திருந்தவர்களுக்கு உணவு கொடுக்கப்பட்டது. அநாதைகளை சம்ரக்ஷித்து, விதவைகளை விசாரித்தனர். எனவே ஒவ்வொரு நன்மையான காரியத்திலும் பணம் தாராளமாக செலவு செய்யப்பட்டது. குறைஷிகளி லிருந்து அல்லது வேறு குடும்பத்தி லிருந்து யாராவதொருவன் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டால் இஸ்லாத்தில் சேராத அவன் குடும்பத்தார் அவனுக்கு அன்னந் தண்ணீர் கொடாமல் அவனைத் துன்புறுத்துவார்கள். அவன் வீட்டை அழித்து விடுவார்கள். அவன் பெண்ஜாதியை அழைத்து வைத்துக்கொண்டு, அவனு டைய காலக்ஷேபத்துக்குச் செய்யக்கூடிய உதவியை மறுத்து அவனைக் கஷ்டப்படுத்துவார்கள். எனினும் கதீஜா பெருமாட்டி தமது தாராள சிந்தையினல் அவர்களுக்கு எவ்வித கஷ்டமும்

வராமல் காப்பார். வீடில்லாதவர்களுக்கு வீடு கிடைக்கும். ஆதரவில்லாதவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். உணவில்லாதவர்களுக்கு உணவு கிடைக்கும். அண்ட இடமில்லாமல் அபயமென்று வந்தவர்களுக்கு அடைக்கலம் கிடைக்கும். திக்கற்றவர்களின் மனதைத் தேற்றி அவர்களுக்குத் தைரியம் சொல்லி திடப்படுத்துவார். உம்முல் மூமினீனாகி கதீஜா பெருமாட்டி அக்காலத்தில் நவ் முஸ்லிம்களுக்கு செய்த இந்த உதவியானது நாகரீகத்துக்குக் கொஞ்சமும் தாழ்ந்ததாகுமா?

குறைஷி காபிர்கள் நவ் முஸ்லிம்களை இம்சித்து அவர்கள் மேல் கொடுமையான நடவடிக்கை நடத்தினது மாத்திரமல்ல, அவர்களுடைய கொடிய செயல்கள் நேரே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களையும் அணுகத் தொடங்கின. அவைகளை விட்டுக் காக்கும் பொருட்டு வீட்டுக்கு வெளியே அபூதாலிபுடைய உதவியும், வீட்டுக்கு உள்ளே கதீஜா நாயகியின் உதவியும் நாயகமவர்களுக்குப் பக்கபலமா யிருந்தது. உண்மையை நோக்குமிடத்து, அல்லாஹு தஆலாவின் உதவியே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு என்நேரமும் கூடவே இருந்திருந்தது. என்றாலும் வெளி அபாயங்களையும் கஷ்டங்களையும் தடுப்பதற்காகவும் இரண்டு புஜபல கேடயங்களிருந்தன. அவைகளில் ஒன்று அபூதாலிபுடைய புஜபலமும், மற்றொன்று கதீஜா பெருமாட்டின் புஜபலமுமேயாம்.

மக்காவில் அங்கங்கே ஓர் அதிசயமான இரைச்சல் உண்டாய் விட்டது. எவனைப் பார்த்தாலும் அவனுடைய நாவிலிருந்து "ஆ! அப்துல்லாவுடைய அநாதைக் குமாரன் என்ன வம்பை வளர்த்தி விட்டான். எப்படி நடக்கத் தொடங்கினான். என்ற பேச்சும் பிரஸ்தாபமும் வெளியாகிக் கொண்டிருந்தது. ஒருவன் சொல்லுவான்: நல்லதிருக்கட்டும், அவனோ பயித்தியம் பிடித்தவன். இந்த குவைலிதுடைய மகள் கதீஜாவுக்கு என்ன கேடு பிடித்தது. இவள் ஏன் ஒரு அநாதையின் பாதுகாப்பில் தன் வயதைப் போக்குகிறாள். அவன் சொன்னபடி யெல்லாம் கேட்டு தன் இரகசியத்தையும் சிந்த சித்தமா யிருப்பாளேன் என்று சொல்வான். மற்றொருவன் சொல்வான்:—முஹம்மதினிடத்தில்

பலிக்கக்கூடிய பெரிய சூனியமிருக்கிறது. அவன் யாரையாவது உறுத்துப் பார்த்தால் உடனே அவனைத் தன் மனிதனுக்கிக் கொள்கிறான். எனவே இப்படியே ஒவ்வொருவனும் தன்தன் யோசக்கினைக்குத் தக்கவாறு பேசிக்கொண்டிருந்தான். என்றாலும் குபுரு என்னும் பேரிருளைப் பிளப்பதற்காக ரிஸாலத் தென்னும் சூரியன் உதித்து விட்டதென்றும், இனி அந்தச் சூரியனுடைய உக்கிரமான கிரணங்களைத் தடுக்க எந்த வலியவராலும் முடியாதென்றும் அவர்களில் ஒருவனும் அறியவில்லை. கதீஜா நாயகி, காபிர்கள் சொன்ன இந்த எல்லா வார்த்தைகளையும் தமது காதினால் கேட்டுக் கொண்டிருந்தார். இந்த வார்த்தைகளால் ரஸூல் நாயகமவர்களுக்கு மனவருத்த முண்டானால் அப்போது கதீஜா நாயகி, "அல்லாஹ்வுடைய ரஸூலே! தாங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? எந்த ரஸூலையும் அவர் கூட்டத்தார் பழித்துப் பரிகசித்தே யொழிய, ஒரு ரஸூலும் அவர்களிடம் வரவில்லையே தன் கூட்டத்தாரால் பழித்துப் பரிகசிக்கப் படாத ஒரு நபி இது வரையில் எவராவது வந்ததுண்டா? நபிமார்களைக் காபிர்கள் துன்புறுத்துவது பூர்வகாலத்தி லிருந்து வழக்கமாக நடந்து வருகிறதே என்று வணக்கமாக எடுத்தோதுவார். இதைக் கேட்டு நாயகமவர்கள் தங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்வார்கள். அதனால் சட்டளையைப் பிரஸ்தாபிக்கும் பூரிப்பான நாட்டம் அவர்கள் மனதில் மிகைத்து விடும். இதனாலேயே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஒருமுறை திருவுளமா யிருக்கிறார்கள், அதாவது :—காபிர்களில் நின்றும் என் மனதுக்கு வருத்தத்தை யுண்டாக்கும் படியான வார்த்தைகளை நான் கேட்கும் போது, நான் அதை கதீஜாவினிடம் சொல்வேன். அவர் என் மனம் ஆறுதலடையும்படி தேறுதல் சொல்வார். கதீஜாவினுடைய வார்த்தைகளால் நீங்கி இலேசாகாத யாதொரு வருத்தமும் எனக்குண்டானதில்லை என்பதே.

இந்த ஹதீதினால் தெரியவருகிற தென்ன வென்றால், கட்டளையைப் பிரஸ்தாபிக்கும் ஆரம்பகாலத்தில் இடையூறாக நேர்ந்த கஷ்டங்களை இலேசாக்குவதில் கதீஜா நாயகியின் கரங்கள் சோராமல் வேலை செய்து கொண்டிருந்தன. எண்ணிறந்த ஜனங்கள் இஸ்லாமைப் பின்பற்றி அதற்கு அவர்கள் உதவியாக நின்று ஒரு

இரும்புக் கோட்டையைப் போல் தன்னை உறுதிப் படுத்துகிற வரையில் கதீஜா நாயகி களைப்பாறுமல் நிலைநின்றனர்.

ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹுவினுடைய சங்கதி யாருக்குத் தெரியாது? இந்த புத்தகத்திற்கும் அவர்களுடைய சரித்திரத்துக்கும் யாதொரு சம்பந்த மில்லை யென்றாலும், அவர்கள் இஸ்லாமை அங்கிகரித்த ஓர் அற்புத சம்பவத்தை மாத்திரம், நண்பர்களின் பார்வைக்கு இங்கு கொண்டுவர வேண்டுமென்று என் மனம் என்னைத் தூண்டி வற்புறுத்துகின்றது. அதாவது :—

திடனுக நீங்களும், அல்லாவையன்றி நீங்கள் வணங்குகிறவைகளும், நரகத்தின் விறகுகளே இன்னும் நீங்கள் அந்த நரகத்துக்கு வருகிறவர்கள் தாம் என்ற அர்த்தம் பொருந்திய ஆயத்து இறங்கினபோது அபூஜஹல் ஒரு சபையில் சப்தமிட்டுச் சொன்னதாவது :—ஏ குறைஷிகளே! இப்போது முஹம்மதுடைய நாவானது நீண்டு விட்டது. அவர் இப்படியாக மீறிப் பேசுவதை இனி நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நேற்றுவரையில் அவர் தமது கட்டுக்கதையான மார்க்கத்தை மாத்திரம் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். இன்று உங்கள் மார்க்கத்தை தூஷிக்கிறுர். உங்கள் சுவாமிகளைத் திட்டுகிறுர். உங்கள் பிதாக்களை நரகத்துக்கு விறகென்கிறுர். உங்களுக்கு வெட்கமில்லையா? உங்கள் வீரத்தில் மண்விழுந்து விட்டதா? உங்கள் ஆண்மைத்தனம் அடியோடுபோய்விட்டதா? நீங்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் கேட்கிறீர்களே. உங்கள் பிதாக்களைத் தூஷித்துத் தாழ்த்துவதையும் பார்க்கிறீர்களே. அதைப்பற்றி உங்களில் ஒருவரும் உம், என்று ஒரு சின்ன வார்த்தையும் சொல்லுகிறீர்களில்லையே. இனி முஹம்மதுவின் இந்த அதிக பேச்சுகளைக் கேட்டு சும்மா பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. ஆதலால் யாவரும் அறியும்படி, பொதுவாக நான் பிரஸ்தாபிப்பதென்ன வென்றால், யாராவது முஹம்மதை கொலை செய்துவிட்டால் அவனுக்கு நூறு சிகப்பு ஒட்டகையும் நாற்பதினுயிரம் வெள்ளி நாணயமும் கொடுப்பேன். உங்களில் எவர் ஆண்பிள்ளையோ, எவருடைய நரம்புகளில் வீர உதிர மிருக்கிறதோ அவர் எழுந்துவந்து வாளின் மேல் சத்தியம் செய்து அந்த வேலையை முடிக்கட்டு மென்று சொன்னன்

அபூஜஹல் இப்படிச் சொன்னபோது அந்த காபிர்களின் கூட்டத்தில் இருந்த உமர்பாரூக் எழுந்துநின்று, ஏ அபூஜஹலே! இப்போது நீ சொன்ன இந்த இனமென்பது வெறும்பேச்சா அல்லது உண்மைதானு? நீ உன் வாக்கின் மேல் உறுதியாயிருப்பாயா? என்று கேட்டார்கள். அதற்கு அபூஜஹல் ஹுபல் என்னும் பெரிய விக்கிரகத்தின்மேல் ஆணையிட்டு, நான் என் வாக்கை நிறைவேற்ற சித்தமா யிருக்கிறேனென்றுன். அப்போது உமர்பாரூக் உருவினகத்தியை கையால் பிடித்தவராய் கொலை செய்யப்போகும் எண்ணத்துடன் பிரயாணமானர். அன்றியும் முஹம்மதை கொலை செய்யாதவரையில் லாத்து, உஸ்ஸாவென்னும் சுவாமிகளின் மேல் ஆணையாக நான் பூமியில் உட்காரேன் என்றும் சொல்லிக் கொண்டார்.

அவர் புறப்பட்டுப் போகும் வழியில் நயீமுபுனு அப்துல்லாவைக் கண்டார். அவர் உமர் பாரூகை பார்த்து ஏ உமரே! நீர் இவ்வளவு அவசரமாக எங்கு போகிறீரென்று கேட்டார். அதற்கவர் நான் முஹம்மதை கொலை செய்வதற்காகப் போகிறேன் என்றூர்கள். அதற்கு நயீம் என்பவர் "என்ன உமரே! உமக்கு அப்துல் முத்தலிபுடைய குடும்பத்தாரையும் ஹாஷிம் குலத்தாரையும் கதீஜாவின் பிரபுத்துவ அதிகாரங்களையும் பற்றி பயமில்லையா? இவ்வளவு பெரிய வேலையை செய்யத் துணிந்து விட்டீரே" என்றூர். அவரை நோக்கி உமர் பாரூக், ஓ நயீமே! நீ முந்தியே ஈமான் கொண்டிருப்பதாகத் தெரிகிற தென்றூர். அதற்கவர், இல்லை நான் என் பிதாக்களுடைய மார்க்கத்தில் தானிருக்கிறேனென்றூர். அப்போதவர் அவரை நோக்காது விட்டுவிட்டு, நடக்கத்தொடங்கினர். அப்போதவர் ஏ உமரே! சற்று நில்லும். ஒரே ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேளும். முஹம்மதுடைய தலை இப்போதே உம்முடைய கைக்கு வந்து விட்டது போல் பறக்கிறீரே ஏனென்றூர். அதற்கவர்கள் அவரை நோக்கி துரிதமாகச் சொல். உன்னுடைய சங்கதி என்ன வென்று கேட்டார். அப்போது நயீம், உமரே! நீர் முந்தி உம்முடைய வீட்டுக்குப்போய் விசாரித்துப்பாரும். உம்முடைய தங்கை பாத்திமாவும், அவர் புருஷன் சயீதுபுனு புலைலும் முன்னமே முஹம்மதுடைய மார்க்கத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

ஆதலால் முந்தி அவர்களைத் திருத்தி அதன்பிறகு எதையும் செய்ய எண்ணம் வையு மென்று சொன்னார்.

இதைக்கேட்ட உமர் பாரூக்கு கோபாக்கினி அதிகரித்து வழியிலிருந்து திரும்பி தமது சகோதரியின் விட்டுக்குப் போனார்கள். போய்பார்க்கக் கதவுமூடப் பட்டிருந்தது. விட்டிற்குள்ளே அவரது சகோதரி ஏதோ ஒரு அறபி வாசகத்தை இரைந்து ஓதிக்கொண்டிருக்கிற சத்தத்தைக் கேட்டார். கொஞ்சநேரம் பொறுத்துக் கதவைத் தட்டினார். தட்டவே பாத்திமா தம்முடைய தமயனார் உமர் தான் வந்துவிட்டாரென்று தெரிந்து, உடனே தாம் ஓதிக்கொண்டிருந்த குர்ஆனை எடுத்து ஒரு மூலையில் மறைத்துவிட்டு அச்சமயம் அங்கு வந்து இஸ்லாமுடைய போதனைகளைப் படித்துக்கொண்டிருந்த ஹப்பாப் என்பவரையும் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்துப் பிறகு வந்து கதவைத் திறந்தார். உமர் பாரூக் உள்ளேவந்து தங்கையை நோக்கி, நீ என்ன ஓதிக்கொண்டிருந்தாய் என்று கேட்க, அவர் ஒன்றுமில்லை, நானும் என் புருஷனும் வசனித்துக்கொண் டிருந்தோமென்றார். அப்போது உமர் பாரூக், நீங்கள் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டீர்களென்று நான் கேள்விப்பட்டேன் என்றார். அதற்கு பாத்திமா பதில் சொல்லாமல் மௌனமாயிருக்கவே, உமர் அவரை அடிக்கத்தொடங்கி அவரது தலைரோமத்தைப் பிடித்துக்கொண்டார். சயீது ஓடி விலக்கப்போனார். அவரையும் அடித்துக் காயப்படுத்தினார். இவ்விதமாக அவர்களைத் துன்புறுத்தி அவஸ்தைப் படுத்தினபோது, சகிக்கொணாமையால் பாத்திமா துணிகரமாக சொன்னதாவது:—சோதரா! நாங்கள் இஸ்லாத்தில்தான் சேர்ந்துவிட்டோம். சந்தேகமின்றி நீங்கள் தப்பு வழியிலிருக்கிறீர்கள். நீங்கள் எங்களை வெட்டித் துண்டு துண்டாக்கி விட்டபோதிலும் சரி, அப்போதும் அந்தத் துண்டங்களிலிருந்து அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என்ற சப்தம் கிளம்பும். நீங்கள் எங்களைக் கொன்றுபோடுங்கள், அவசியம் கொன்றே போடுங்கள். நாங்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தீனை விட்டுத் திரும்பமாட்டோம்! திரும்பமாட்டோம்!! திரும்பமாட்டோம்!!!—என்றார்.

உமர் பாரூக் தனது தங்கையின் உறுதியான நிலைமையைக் கண்டு பிரமை கொண்டுவிட்டார். ஒரு பக்கத்தில் போய் இருந்து சிரம் குனிந்து உற்று ஆலோசிக்கத் தொடங்கினர். பாத்திமாவின் உற்சாகம் மேலிட்டிருந்தது. அவர் ஒலுவு செய்துகொண்டு தாஹா என்னும் சூரத்தை இராகத்து அழகாக ஒதத் தொடங்கி தாஹா மாஅன்ஜல்னு அலைக்கல் குர்ஆன் லிதஷ்கா என்றும் இதன் தொடரான சில ஆயத்துகளையும் ஓதிவரு கையில் அர்ரஹ்மானு அலல் அரஷிஸ் தவா என்ற ஆயத்தை ஓதினர். அப்போது உமர் பாரூக் அவர்கள் தலைநிமிர்ந்து தங்கையை நோக்கினர்கள். தங்கையோ ஓதலை நிறுத்தாமலே லஹுமாபிஸ் ஸமாவாதி வமா பில்அர்லி வமா பைனஹுமா வமா தஹ்தஸ்ஸார் என்று ஓதினர். இப்போது ஹஜரத் உமர் அவர்களால் சும்மாயிருக்க முடியாமல் தங்கையை நோக்கி சோதரி! வானங்களிலுள்ளவை களும் பூமியில் உள்ளவைகளும் பூமிக்கு கீழே இருப்பவைகளும் இவையாவும் உங்கள் ஆண்டவனுடைய ஆதீனமா? என்று கேட் டார்கள். அதற்கு பாத்திமா ஆமாம் சகோதரா, இதிலென்ன சந்தேகம்? எங்கள் ஆண்டவனுடைய மகிமை இப்படித்தானி ருக்கிறதென்று சொன்னர். அப்போதவர்கள் பாத்திமாவை நோக்கி தங்காய்! உங்களுடைய ஒரே ஆண்டவனுடைய பெருமை இத்தன் மையாயிருக்கிறது. எங்களுடைய ஆயிரத்து ஐந்நூறு விக்கிரகங் களான சுவாமிகளின் கதி எவ்வாறிருக்கிறதென்றால், மக்காவின் ஒரு பிடிமண் அளவான பூமியின்பேரிலும் அந்த அந்த சுவாமி களின் ஆட்சி நடைபெறுது. சரி அந்தக் கிதாபை சற்று என்னிடம் கொடுங்கள்; நானும் அதைப் பார்க்கிறேனென்று கிட்டே நெருங்கினர்கள்

அப்போது பாத்திமா "ஹா! ஹா!! சகோதரா! நீங்கள் அலக் காயிருங்கள். நீங்கள் அதைத் தொடவுங் கூடாது, தொட்டால் பெரிய ஆபத்தாய் முடியும்" என்றார். அப்போது ஹஜரத் உமர் அவர்கள் பயந்து, தலை குனிந்து தூரத்தில்போய் உட்கார்ந்து கிதாபைத் தொடுவதினால் என்ன தோஷம்? என்று கேட் டார்கள். அதற்கு பாத்திமா சொன்னதாவது:—அண்ணா! இந்த கிதாபைத் தொடுவதற்காக ஒரு விதி ஏற்பட்டிருக்கிறது அதென்ன வென்றால் சுத்தமானவர்களே யன்றி மற்றவன் அதைத் தொடக் கூடாது என்பதுதான். ஆகவே ஒருவன் சுத்தமாகாத

வரையில் அவன் இதைத் தொடக்கூடாது என்றார். அதற்கு உமர் அவர்கள் இப்போது நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்க, நீங்கள் ஒலுவுசெய்து சுத்தமாகுங்கள். அதன்பிறகு இந்த கிதாபை ஆசையுடன் கையிலேந்திக்கொண்டு பார்த்து விடுங்கள் என்றார்.

எனவே ஹஸரத் உமர் அவர்கள் ஒலுவுசெய்து சுத்தமாகி கிதாபைக் கையிலெடுத்துக் கொண்டு, மிக்க ஆவலுடன் அதிலுள்ள மகிமை தங்கிய ஆயத்துகளைப் பார்வையிட்டு வருகையில் அல்லாஹு லாஇலாஹ இல்லாஹு லஹுல் அஸ்மாஉல்ஹுஸ்னு என்ற ஆயத்தின்மேல் அவர்களின் பார்வை சென்றது. அந்த வாக்கிய சுத்தத்தின் இன்பமும் நுட்பமும் அவர்கள் மனதைக் கவர்ந்து கொண்டன. தனக்குத் தெரியாமல் அவர்களுக்கு அழுகை வந்து விட்டது. மா அஹ்ஸன ஹாதல் கலாமு—ஆஹா இது என்ன அழகான வாக்கியமா யிருக்கிறதென்று வியந்து கூறினார்கள். பிறகு தங்கையை நோக்கி மாதே! நான் என்னுடைய இருதயத்தில் இஸ்லாமுடைய இன்பம் ஏதோ கொஞ்சம் தட்டுபடக்காண்கிறேன் நீ சாக்ஷியாயிரு. நான் உன் முன்னிலையில் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி என்று ஷஹாதத் கலிமா சொல்லுகிறேன் என்றார்கள்.

இப்போது பாத்திமாவுக்கும் அவர் புருஷன் சயீதுக்கும் அளவில்லாத ஆனந்தமுண்டாயிற்று. ஹஸரத் உமருல் பாரூக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கையை நோக்கி, இப்போது என்னை வெகு சீக்கிரமாக இருலோகத்துக்கும் சர்தாராகிய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சமுகத்துக்கு அழைத்துக்கொண்டு போங்கள் நானும் அவர்களுடைய சிஷ்யர்களின் அட்டவணையில் என் பெயரைப் பதிவு செய்து என்றுமழியாத ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்வேன் என்றார்கள்.

இது நிற்க, இங்கு அபூஜஹலுடைய சொல்லின்படி, ரஸூல் நாயகமவர்களை கொலை செய்வதற்காக உமர் றலியல்லாஹு அன்ஹு புறப்பட்டிருக்கிறார்களென்ற சேதி முஸ்லிம்களுக்கு எட்டிவிட்டது. ஆகையினால் அவர்களெல்லாரும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடன் ஹஜரத் அர்கம் றலியல்லஹு அன்ஹுவின் வீட்டில் போய் மறைந்து, கதவைமூடி உள் தாழ்ப்பாள் போட்

டுக்கொண்டார்கள். இவ்விதமாக முஸ்லிம்கள் உமர் பாரூக்வுடைய பயத்தில் ஆழ்ந்து ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், யாரோ கதவைத் தட்டின சப்தம் கேட்டது. அத்துடன் சில வசன சப்தமும் வந்தது. அதாவது:—

"உங்களில் ஆதரவுவைக்கும் ஒருவன் உங்கள் ஆஸ்தானத்திற்கு வந்திருக்கிறான். உங்களைத்தவிர அவனுக்கு உற்ற துணைவர் ஒருவருமில்லை. அவன் தன் கஷ்ட நிவர்த்திக்கு உங்களின் வேண்டுதலுள்ளவன். அன்றியும், பதிப்புற்ற பாவியானவன். சொற்செயல்களில் வெட்கமடைந்தவன். தோழரைவிட்டு தூரத்தில் விழுந்து கிடந்தவன். நேசரைவிட்டு நெடுங்காலம் நீங்கியிருந்தவன். இவ்விதமாக ஆதரவுவைத்து தங்கள் ஆஸ்தானத்தில் வந்தவன் எவனோ, அவன் நிராதரவாகித் திரும்பி விடுவானென்பது முடியாது".

ரஸூல் நாயகமவர்களின் சகவாசிகளான முஸ்லிம்கள் வாசல் நடையில்வந்து கதவிடுக்குகளால் குனிந்துபார்க்க, உமர் பாரூக்கு உருவின கத்தியைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு கதவைத் தட்டுவதைக்கண்டு, அஞ்சி நடுங்கி ஹஸரத் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களின் சமுகத்தில்போய் அறிவித்தார்கள். நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹு தஆலாவைவணங்கிசஜ்தாவில்விழுந்து யா அல்லாஹ்! இஸ்லாமின் உதவிக்காக குறைஷிகளின்நின்றும் தைரியமுள்ள ஒரு சுத்தவீரனைத் தரவேண்டுமென்று அல்லாஹு தஆலாவினிடத்தில் துஆ கேட்டு பின்பு எழுந்து, தாங்களே தனியாகவந்து கதவைத் திறந்தார்கள். குறைஷி வீரர்மேல் ஹாஷிமீ ரஸூலுடைய அற்புதப்பார்வை விழுந்தது. அவர்கள் உமரைப் பார்த்து உமரே! நீர் சண்டைக்கு வந்தீரோ அல்லது சமாதானத்துக்கு வந்தீரோ என்று கேட்டதுமன்றி, தங்களுடைய இருகரத்தாலும் உமரை இறுகக்கட்டி யணைத்தார்கள். அதனால் உமருடைய ஒவ்வொரு உறுப்பும் உதறி நடுங்கியது. உடனே அவருடைய நாவிலிருந்து அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹி என்ற ஷஹாதத்து கலிமா ஜாரியாய் விட்டது. ஹஸரத் நாயகமவர்கள், உமர் றலியல்லாஹு அன்ஹு வின் சிரசையும் நெஞ்சையும் மோந்து முத்தமிட்டு, அல்லாஹு அக்பர் என்று இரைந்து தக்பீர் ஓதினார்கள். அங்கிருந்தவர்களெல்லாரும், உமர் றலியல்லாஹு அன்ஹுவை, முன்சென்றழைக்க

வாசற் கதவினிடம் வந்து சேர்ந்துகைலாகு கொடுத்து உமர் அவர்களை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தார்கள்.

இதுவரையில் சொல்லிவந்தது அவர்கள் இஸ்லாமில் சேர்ந்த சங்கதியாயிருந்தது. இப்படி அவர்கள் இஸ்லாமில் சேர்ந்து கொண்டபோது பெரிய பெரிய குறைஷி தலைவர்களின் தைரியம் தகர்ந்தது. அபூஜஹல் தன் தலையில் அடித்துக் கொண்டான். குறைஷி காபிர்களில் வெட்கமும் தலைகுனிவும் வியாபித்தன. இங்கு உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமூகத்தில், "யாரஸூ லுல்லா! காபிர்கள் தங்கள் சுவாமிகளான விக்கிரங்களை வெளியரங்கத்தில் வணங்கும்போது, முஸ்லிம்கள் தங்கள் ஒரே ஆண்டவனாகிய பரிசுத்த நாயனை உள்ளே மறைந்து வணங்க வேண்டிய அவசியமென்ன, இது பெரிய அநீதியாகும். அல்லாவின் ஆணை நாம் நம்முடைய ஆண்டவனை பகிரங்கத்தில் வணங்கு வோம். இதற்கு எவன் நம்மைத் தடைசெய்ய வருகிறான் பார்ப் போமென்று சொல்லி, எல்லா முஸ்லிம்களையும் நாயகமவர்களையும் தம்மோடுகூட அழைத்துக்கொண்டு, அந்த வீட்டிலிருந்து புறப் பட்டு கஃபாவை நோக்கிச் சென்றார்கள். தாரு இஸ்மாயில் என்ற ஸ்தானத்தில் குறைஷித் தலைவர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் உமர் றலியல்லாஹு அன்ஹுவையும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடன் மற்ற முஸ்லிம்களையும் கூட்ட மாக வரக்கண்டு, ஒஹோ நாம் எண்ணினது தப்பு; இதோ உமர் பாருக்கு எல்லா முஸ்லிம்களையும் கொலை செய்வதற்காக தாரு இஸ்மாயீலுக்கு இழுத்துக் கொண்டு வருகிறார் பாருங்களென்று பேசிக்கொண்டார்கள். முஸ்லிம் கூட்டம் பைத்துல் ஹறமை நெருங்கிச் சென்றபோது, உமர் றலியல்லாஹு அன்ஹு உரத்த சப்தமாக "ஏ குறைஷிகளே! என்னை இதுவரையில் அறியாதவன் எவனோ அவன், இப்போது நல்லவிதமாகத் தெரிந்துகொள்ளக் கடவன். நான் கத்தாபுடைய மகன் உமர். நான் உங்களை இஸ்லாமில் கூப்பிடுகிறேன், வாருங்கள். இந்த அருளாற்றினிடம் வந்து சேருங்கள். சேர்ந்து திருப்தியடையுங்கள். இல்லையாயின் ஞாபகமிருக்கட்டும். நான் ஒவ்வொருத்தருடைய தலையையும்

இந்த வாளால் வெட்டிச் சாய்த்து விடுவேன். குபுரு என்னும் கட்டிடத்தை அழித்து, அது உலகத்தில் இல்லாதபடி நிர்மூல மாக்கி விடுவேனென்று ஆர்பரித்துச் சொன்னார்கள். இஸ்லாமிய சுத்தவீரரின் இந்த சப்தமானது மின்னல் மின்னி இடித்ததுபோ லிருந்தது. இதைக்கேட்ட குறைஷி காபிர்கள் விலவிலத்து மெய் மறந்து கால் பெயர்ந்து இங்குமங்குமாகச் சிதறி யோடி விட்டார்கள்! கஃபா ஷரீபானது எவருமில்லாதபடி முஸ்லிம்க ளுக்குக் காலியாய்விட்டது. ஆகவே முஸ்லிம்கள் மஸ்ஜிதுல் ஹராமில் பிரவேசித்தார்கள். இரைந்து பாங்கு சொல்லப்பட்டது. பரிபூரண சந்தோஷத்துடன் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல் லாஹ் என்ற சப்தத்தையும் இணைத்தார்கள். அல்லா ரஸூலுக்கி னுடைய நாமங்களின் அச்சத்தால் அறபு தேசம் அதிர்ந்தது. முஸ்லிம்கள் லுஹரு தொழுகையைத் தொழுது முடித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் நாயகமவர்கள், உமர் றலியல்லாஹு அன்ஹு வின் கையைப் பிடித்துக்கொண்டு கஃபாவில் நுழைந்தார்கள். சுவாமிகளான விக்கிரங்களின் ஒரு கும்பல் இருந்தது. ஹஸரத் நாயகமவர்கள் இரைந்த சப்தமாக ஜாஅல் ஹக்கு வஜஹகல் பாத்திலு இன்னல் பாத்தில கான ஜஹூகா என்ற ஆயத்தை ஓதினார்கள். உமர் றலியல்லாஹு அன்ஹு சில பைத்துக்களைப் படித்தார்கள். விக்கிரங்களைக் கூப்பிட்டு, ஏ விக்கிரகங்களே! முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் மெய்யாக அல்லாஹ்வுடைய ரஸூலாயிருந்தால் நீங்கள் அவர்களைக் குறித்து சாக்ஷியம் கொடுங்கள். அல்லாஹ் ஒருவனே என்பது உண்மையாயிருந்தால் நீங்கள் அவனுக்கு சஜ்தா செய்யுங்களென்று சொன்னார்கள். உடனே எல்லா விக்கிரகங்களும் சஜ்தாவில் விழுந்து விட்டன. அப்போதுதான் இந்த ஆயத்து இறங்கினது. யாஅய்யுஹந் நபிய்யு ஹஸ்புக் கல்லாஹு வமனித்தப அக்க மினல் மூமினீன் (இதன் பொரு ளாவது:—நபியே! அல்லா உமக்குப் போதுமானவன். இன்னும் மூமின்களில் நின்றும் உம்மைப் பின்தொடருபவரும் உமக்கு போதுமானவர், என்பதே) உம்மைப் பின்பற்றினவரும் என்றதில் உமர் றலியல்லாஹு அன்ஹுவை சமிக்ஞையாகக்காட்டி யிருக் கிறது. அவர்களால் முஸ்லிம்கள் தங்கள் விரோதிகளிடத்தில் பெரிய பெரிய பழிவாங்கினார்கள். அன்றியும், அவர்களால் இஸ்லாம் நாளுக்குநாள் விருத்தியடைந்து ஊர்ஜிதப்பட்டது.

## அபூதாலிபுடைய மரணம்.

ஹஸரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய காரியங்கள் கைகூடி, அவர்கள் விருத்தியடைவதற்கும் இஸ்லாமின் முன்னேற்றத்துக்கும் காரண பூதராக யிருப்பவர்கள், அவர்களின் பெரிய பிதாவாகிய அபூதாலிபும் மனையாட்டியாகிய கதீஜாவுந்தான் என்று எல்லா அறபுகளுக்கும் பொதுவாகத் தெரியத் தொடங்கியது. இந்த இருவரும் இல்லாமற்போனால் இஸ்லாம் ஒருபோதும் விருத்தியடைய மாட்டாதென்று எல்லா அறபுகளும் சொல்லிக்கொண்டிருந்தனர். வெளிப்படைக்கு இது மெய்யென்றே தோன்றிற்று. ஏனெனில், அபூதாலிபு இஸ்லாமில் சேராமலிருந்தாலும் உள்ளன்பினால் தமது சகோதரருடைய புத்திரருக்கு உதவிசெய்வதில் முனைந்து கொண்டிருந்தார். ஒருநாள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், ஜெய்துபுனுல் ஹாரிசையும் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹுவையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு தொழுகையில் பராக்கா யிருந்தார்கள். அபூதாலிபு அப்பக்கமாக வருகையில் இவர்கள் மூவரும் தொழுது கொண்டிருப்பதைப் பார்த்து, ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்துகொண்டு, தொழுகையில் இவர்களால் நிகழும் அந்த அசைவுகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். ரஸூல் நாயகமவர்கள் தங்கள் தொழுகையை முடித்தபோது அபூதாலிப் அவர்களை நோக்கி "என் சகோதரருடைய புத்திரரே, நீர் இப்போது செய்துகொண்டிருந்ததென்ன? நீர் அநுஷ்டிப்பது எந்த மார்க்கம்?" என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் "என் பெரிய பிதாவே! இது அல்லாஹ்வுடைய மார்க்கம். இது அன்பியாக்களும் அமரர்களும் அநுஷ்டிக்கும் மார்க்கம். இது என் மூதாதையாகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அநுஷ்டித்த மார்க்கம். அல்லாஹு தஆலா எனக்கு ரிஸாலத்தென்னும் பதவியைக்கொடுத்து என்னை மேன்மைபடுத்தினான். அடியார்களை சீர்திருத்தும் பொருட்டு என்னை இவ்வுலகத்துக்கு அனுப்பினான். ஆகையால் நான் உங்களையும் இந்த மார்க்கத்தில அழைக்கிறேன். ஒரே ஆண்டவன் உண்டென்று நம்புங்கள். அவனுக்கு எவரையும் எதையும் இணையாக்காதிருங்கள். அவனையே வணங்குங்கள்" என்று சொன்னார்கள். அதற்கு அபூதாலிபு, "மகனே! நீர்

சொல்வது உண்மைதான். ஆயினும் என் முன்னோர்களான பெரியோர்களின் மார்க்கத்தை விட்டுவிட என் மனம் இசையவில்லையே. அப்துல் முத்தலிபுடைய அநுஷ்டானங்களை அகற்றிவிட எனக்குப் பிரியமில்லையே. இவை தடையாயிராத பக்ஷம் அவசியம் நான் உம்மைப் பின்பற்றுவேன். ஆயினும் நீர் அஞ்ச வேண்டாம். மன ஓர்மையுடன் நீர் உம்முடைய காரியத்தில் பராக்காயிரும். என் உயிருள்ள நாளளவும் உம்மை எதிர்த்துப்பார்க்க ஒருவனுக்கும் சக்தியில்லை" என்றார்.

அபூதாலிபு இப்படிச் சொன்னது வெறுஞ் சொற்களென்று எண்ணவேண்டாம். எதார்த்தத்தில் அவருடைய ஆயுள்பரியந்தம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் மீது நேரிடையாய் பகைமை செலுத்த காபிர்களுக்குச் சமயம் வாய்க்கவில்லை. அவர்களால் நேரவிருந்த அநேகத் தீங்குகள் அபூதாலிபினாலேயே அடங்கிவிட்டன.

அபூதாலிபுடைய பக்கபலமும் அவருடைய மேன்பாடுமே இஸ்லாத்தின் அபிவிருத்திக்கு ஓர் முக்கிய கருவியாயிருக்கிறதென்று காபிர்கள் எண்ணியிருந்தார்கள். அந்த எண்ணத்துக்கு மாறாக யாதொரு கருவி காரணங்களின் உதவியில்லாமலே இஸ்லாமை வெளிப்படுத்தும் நோக்கம் அல்லாஹு தஆலாவுக்கிருந்தது. ஆகவே இந்தக் கருவி காரணங்களின் வழிகள் அடைக்கும்காலம் நெருங்கி வந்து விட்டது.

அபூதாலிபு மரணவியாதியினால் பீடிக்கப்பட்டார். இனி பிழைப்பது அசாத்தியமென்று அவருக்குப் புலப்பட்டபோது, குறைஷி கனதனவான்களில் அநேகம்பேரைக் கூப்பிட்டு, அவர்களுக்கு அபூதாலிபு சொன்னதாவது :—

குறைஷிகளே! நான் உங்களுக்கு வஸிய்யத் செய்கிறேன். கஃபாவைக் கண்ணியப்படுத்துவது உங்கள்மேல் கடமையென்று கருதுங்கள். பந்து பாசத்தையும், பலஹீனர்களின் உதவியையும் இரப்போர்க் கிவேதையும் மறக்கவேண்டாம். மெய் பேசவேண்டும். உங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பொருள்களை அமானத்தாக உடையவர்களிடம் ஒப்படைக்க எப்போதும் நல்ல எண்ணம் வைக்க வேண்டும். இன்னும் நான் உங்களுக்கு வஸிய்யத்செய்கிறேன். என் சகோதாருடைய புத்திரரான முஹம்மது (ஸல்லல்லாஹு அலை

ஹிவஸல்லம்) அவர்களுக்கு உதவிசெய்வதுடன் அவரைப் பின் பற்றவும் செய்யுங்கள். அவர் குறைஷிகளில் அமீனுயும் அறபி களில் அதிக சத்திய புருஷராயுமிருக்கிறுர். அவர் ஒரு மார்க் கத்தை கொண்டுவந்திருக்கிறுர் அந்த மார்க்கமோ எவர்மனமும் ஏற்கக் கூடியதாயிருக்கிறது. அது உண்மையென்று நாவு சாக்ஷியம் சொல்லுகிறது. அறபுகளில் அநேக பெரியோர்கள் அந்த மார்க்கத்தின் சட்டதிட்டங்களை ஒப்புக்கொண்டிருப்பது எனக்குத் தெரியும். ஹாஷிம் குலத்தினரே! நீங்களும் அவரை அடுத்திருங்கள். உங்கள் உயிராலும் பொருளாலும் அவருக்கு உதவி செய்யுங்கள்—என்பதே.

அபூதாலிபு மரணவியாதியில் வருந்திக்கொண்டிருந்த சம யத்தில், அவர்களைப் பார்ப்பதற்காக ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் விஜயம்செய்து அவரின் தலைமாட்டில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் அவரைப்பார்த்து என் பெரிய பிதாவே! தங்களின் பெரிய உபகாரச் சுமை என்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. எனது பிராயத்தில் தாங்கள் எனக்குப் போஷகராயிருந்தீர்கள். நான் பெரியவனானபோது எனக்கு வேண்டிய முக்கிய காரியங்களெல்லாம் தங்களால் நிறைவேறின. தங்களின் பாதுகாப்பையும் தயவையும் என் உயிருள்ளமட்டும் நான் மறக்கமாட்டேன். இப்போது நெருக்கடியான நேரமா யிருக்கிறது. அன்றியும் நுபுவ்வத்தின் காலமாயிருக்கிறது. ஆதலால் ஒரே ஒருமுறை கலிமாவை மாத்திரம் தங்கள் நாவினுல் சொல்லிவிடுங்கள். கியாமத்து நாளில் தங்களுக்காக நாணப் படாமல் நான் ஷபாஅத்துச் செய்வேன் என்றுர்கள். அதற்கு அபூதாலிபு அது என்ன கலிமா என்று கேட்க, நாயகமவர்கள் லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்று சொன்னுர் கள். அப்போது அபூதாலிபு "மகனே! நீர் எனக்கு நன்மையை விரும்புகிறவர் என்று எனக்கு நன்ருய்த் தெரியும். ஆனுல் நான் மரணமான பின்பு உம்முடைய பெரிய தகப்பன்கடைசியில்" பயந்துபோனுர் என்று என் கூட்டத்தார் உம்மை நிந்திப்பார்க ளென்று நான் அச்சப்படுகிறேன். எனக்கு இந்த அச்சமில்லா விட்டால் நான் இந்த கலிமாவைச் சொல்லி உம்முடைய மனதை சந்தோஷப்படுத்தி நிருப்பேன் என்றுர்.

எனவே றமலான் மாதத்தின் நடுவே அபூதாலிபு மரணத்தை யடைந்தார். அல்லாஹ்வுடைய வல்லமையானது இஸ்லாத்தின் உதவிக்கு வழியாயிருந்த ஒரு சாதனத்தைப் பிடுங்கிக் கொண்டு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை நிரபராதி யாக்கிவிட்டது.

## கதீஜா பெருமாட்டியின் மரணம்.

அபூதாலிபு மரணமாகி மூன்று நான்கு நாட்கள் ஆயின. கதீஜா பெருமாட்டிக்கும் சரீரம் அசௌக்கிய மடைந்தது. அப்போது அவருக்கு வயது அறுபத்தைந்து ஆகிவிட்டது. அவரிடத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு அதிக பிரியமிருந்தது. அவர் சவுக்கியத்தை யடையவேண்டு மென்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் எவ்வளவோ சிகிச்சைகள் செய்தார். மரணத்தை தடுக்க யாதொரு மருந்தும் இல்லை. ஆதலால் கடைசியில் ஹிஜ்ரத்துக்கு மூன்று வருஷமிருக்க அவரும் மரித்து ஆகிரத்துக்குப் பிரயாணமாய் விட்டார். மக்காவில் ஹஜூன் என்னும் கபுருஸ்தானில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

அடுத்தடுத்து சம்பவித்த இந்த இரண்டு இடிகளாலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய மனம் அதைரியப்பட்டு ஒடுங்கினது. இங்கு பெரிய பிதாவின் அன்பான ஆதரவை இழந்து விட்டது ஒருபக்க மிருக்க, அங்கு தயவுள்ள துணைவியாகிய மனைவியரும் பிரிந்து விட்டார். அந்த மனைவி யரோ தமது வாழ்நாளில் ஒருபோதாவது நாயகருக்கு ஒரு இம்சையுங் கொடாத உத்தமி. அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை நிவர்த்திக்க எப்போதும் நானென்று முன்னின்ற உத்தமி, அவர்க ளுக்காகத் தமது ஆஸ்தியை ஒரு பொருட்டாக மதிக்காமல் அள்ளி யிறைத்த மனைவி. அவர்களுக் கெதிரில் பெரிய பெரிய குறைஷி கனவான்களை இலக்ஷியம் செய்யாத மனைவி. கஷ்டங் களும் துன்பங்களும் நேர்ந்த காலத்தில் அற்ப நேரமும் அவர்களை விட்டுப் பிரியாமல் கூடவே இருந்த மனைவி. அவர்கள் மேல் எல்லாரினும் முந்தி ஈமான் கொண்ட மனைவி. ஆகவே இத்தகைய மனைவியின் மரணத்தைப் பற்றி அவர்கள் எவ்வளவு துக்கித் தாலும் அது கொஞ்சமேயாம்.

ஆகவே இந்தத் துக்கத்தில் நாயகமவர்களுடைய நிலைமை எவ்வாறாய் விட்டதென்றால், அவர்கள் வீட்டை விட்டு வெளியே புறப்படாதவர்களா யிருந்தார்கள். கதீஜா பெருமாட்டியின் குணாதிசயங்களையும் அவரது மேன்பாடுகளையும் குறித்து ஜனங்கள் அநேகமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். இதுவும் துக்கத்தை யுண்டுபண்ணியது. இந்த இரண்டு சம்பவங்களினால் இந்த வருஷத்துக்கு (ஆமுல் ஹஜன்) துக்க வருஷமென்று பெயர் வைத்ததுமன்றி, தங்கள் வீட்டையும் (பைத்துல் ஹஜன்) துக்க வீடென்று அநேகமாய்ச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள்.

இவ்விதமாக இஸ்லாமின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமென்று அறபுகள் தப்பாக எண்ணியிருந்த இந்த இருவரும் (அபூதாலிபும், கதீஜா நாயகியும்) காலஞ் சென்றார்கள். இப்போது அறபிக் காபிர்களுக் கெதிரில், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் அஸ்ஹாபுகளுடன் தனித்து விட்டார்கள். கதீஜா நாயகி உயிரோடிருக்கிற வரையில், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மனதில் வேறு விவாகஞ் செய்து கொள்ள விருப்பமே வராதபடி, அவர்களுடைய மனதை அப்பெண்மணி கவர்ந்து இருந்தார்.

குறிப்பு:—இக்காலத்திய ஸ்திரீகளில் அநேகர் தங்கள் புருஷன்மார் தங்களை விட்டு வேறு விவாகஞ் செய்து கொள்கிறார்க ளென்றும் தங்களை திரும்பியும் பார்க்காம லிருக்கிறார்க ளென்றும் அவர்கள் மேல் குற்றங்கூறி முறைப்பாடு செய்யக் காண்கிறோம். புருஷர்களில் அந்தக் குற்றமில்லாதபடி அதன் வழியை அடைக்க ஸ்திரீகளுக்கென்ன கஷ்டமிருக்கிறதோ எமக்குப் புலப்படவில்லை. ஆனால் தங்கள் புருஷன்மார் தங்களை வெறுப்பதற்குக் காரணம் இன்னதென்று இவர்கள் யோசித்துப் பார்ப்பதில்லையென்றே தோன்றுகிறது. அப்படியவர்கள் யோசித்துப் பார்க்கும் பக்ஷத்தில், இவர்கள் தங்கள் புருஷர் மேல் கூறுங்குற்றம் இவர்களையே சாருகிறதென்று தெரிந்து கொள்ளுவார்கள்.

புருஷன் சில சமயம் தன் பெண்சாதியின் மேல் வெறுப்பா யிருப்பதுண்டு. அப்படி யிருந்தால் அநேகமாக அவன் வேறு ஸ்திரீகளின் கண்ணில் அகப்பட்டு அவர்களைத் தன் மனைவிகளாக

விவாகஞ் செய்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருவான். இதன் காரணங்களை விவரமாக விளக்கி அடியில் எழுதுகிறோம்:—

(1) அநேகம் ஸ்திரீகளில் ஒரு வழக்கமுண்டு. அதாவது :— அவர்கள் ஒரு கல்யாணத்துக்கோ அல்லது ஒரு சுப காரியத்துக்கோ எங்கேயாவது போக நேரிட்டால், அப்போது அவர்கள் தங்களை நல்லவிதமாக சிங்காரித்து டாம்பீகமான ஆடையாபரணாதிகள் அணிந்து அழகாகப் போகிறார்கள். வீட்டிலிருந்தாலோ புறட்டடத்தலையும் குறட்டுவாயுமா யிருப்பார்கள். தலைசீவி கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் துணிமணிகளைச் சுத்தமாக தரிக்கவேண்டுமென்றும் நினைவு வருகிறதில்லை. தலைமயிர் அவிழ்ந்து விரிகோலமா யிருக்கும். புடவைகள் அழுக்கில் புரண்டு கிடக்கும். அலங்கரிப்பும் கிடையாது. அழகு படுத்துவதுங் கிடையாது. வெகுகாலைக்குப் பிறகு ஞாபகம் வந்தால் தலையில் சீப்புபடும். சிக்கறுத்துச் சீவுவதில் ஜீவன் துடிக்கும். புருஷன் வெளியே போயிருந்து வீட்டுக்குள் வந்தால், தன் வாழ்க்கைத் துணைவியாக வந்த அந்த மனைவியை இந்தக் கேடான நிலைமையில் காண்கிறான். ஸ்திரீயின் துக்ககரமான அந்த நிலைமை அவன் மனதுக்குச் சந்தோஷமா யிருக்கிறதில்லை. அன்னபானம் முதலிய தனக்கு அவசியமான வேண்டுதல்களை முடித்துக் கொண்டு உடனே வெளியே போய் விடுகிறான். சமயோசிதமாக எங்கேயாவது சுத்தமும் அழகும் அலங்காரமுள்ள ஒரு ஸ்திரீயைக் கண்டால், அவள் பக்கம் அவன் மனம் சாய்ந்து விடுகிறது. போகப்போக அவளை விவாகஞ் செய்து கொள்ள அவனுக்கு விருப்பமுண்டாய் விடுகிறது. இப்படியும் ஆகாமற் போனால், மேலுக்கு ஆடையாபரணாதிகளால் அலங்காரமாகி வெட்கத்தை விற்கும் குணங்கெட்ட பாஜாரியான பரஸ்திரீயின் வலையில் அப்புருஷர் அகப்பட்டு அலைவதும் அவர்களின் மனைவிகள் தங்கள் வீடுகளில் விழுந்து கிடந்து வாடுவதுமுண்டு.

(2) இன்னுஞ் சில ஸ்திரீகளின் வழக்கமாவது :—புருஷன் வெளியேயிருந்து வீட்டுக்கு வந்தால், அவள் தன் குழந்தைகளை அடிக்கவும் அறையவும் ஆரம்பிப்பாள். அந்த நிர்பாக்கியன் பகலெல்லாம் என்ன பாடு பட்டானோ இறைவனுக்கே தெரியும். பகல் முழுதும் பாடுபட்டுப் பின்பு கொஞ்சம் சுகமடையலா மென்று

மாலையில் வீட்டுக்கு வந்தான். வந்த உடன் இந்த துன்பத்தில் சிக்கிக்கொண்டான். ஆண் குழந்தை ஒரு பக்கம் ஆ என்று அலறுகிறது.பெண் குழந்தை ஒரு பக்கம்! அழுதழுது மடிகிறது. அவனுக்கோ உயிர் துடிக்கிறது. மனம் பதறுகிறது. வீட்டில் இரண்டு நாழி நேரம் உட்கார்வது அவனுக்கு இரண்டு ஜாமம் போல் தெரிகிறது. அதனால் அவன் வேறு விடத்தில் போய் உட்காருகிறான். இந்த வழக்கத்தினால் வரவர அவன் மனமானது ஒரு அமைதிவாய்ந்த ஸ்திரீயின் பக்கம் திரும்பிவிடுகிறது. கடைசியாக இந்த மனைவி அவன் பார்வையிலிருந்து விழுந்து விடுகிறாள்.

(3) சந்ததி யுண்டாகாமலிருப்பதும் பெண்ஜாதி புருஷர்களில் வெறுப்பை யுண்டாக்குவதற்கு ஓர் காரணமா யிருக்கலாம்.

(4) கெட்ட நடவடிக்கையுள்ள ஸ்திரீகளும் தங்கள் புருஷருடைய பார்வையிலிருந்து விழுந்து விடுகிறார்கள். ஏனெனில் புருஷன் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்தால் அவள் சுவருக்குப்பின் எட்டிப் பார்த்துகொண்டு அல்லது ஜன்னலில் குனிந்துகொண்டு அண்டைவீட்டு ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருக்கிறாள். வீட்டுச் சாமான்களோ அவை இருக்கவேண்டிய விடங்களில் இல்லாமல் கண்டகண்ட விடங்களில் விழுந்துகிடக்கின்றன. சமையலறையில் குவியல் குவியலாக குப்பை சேர்ந்திருக்கிறது. செம்பு பாண்டங்களிலும், மட்பானைகளிலும் ஈக்கள் மொய்த்துகொண்டிருக்கின்றன, சோற்றுப்பானை காற்றில் ஆறுகிறது. குழம்புச்சட்டியைப் பூனை உருட்டுகிறது. அழுக்குப் புடவைகளைக் களைந்து, கண்டகண்ட விடங்களில் போடப்பட்டிருக்கிறது. தண்ணீர் குடங்களில் பாசிபடிந்து மாசக் கணக்காகக் கழுகப்படாம லிருக்கின்றன. இவ்வாறு அந்தந்த வஸ்து அந்தந்தவிடத்தில் இல்லாமலும், எந்தெந்த வேலையை எப்படி எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி செய்யாமலும் இருந்தால், புருஷனுடைய மனதில் அந்த ஸ்திரீயின்மேல் என்ன பிரியமிருக்கும்? இந்த ஒழுங்கீனத்தைக் கண்டு அவன் மனம் சங்கடப் படுகிறது. அதனால் அவன் வேறு கலியாணம் செய்துகொள்ள தயாராய் விடுகிறான்.

(5) ஆகாததும், சிரமங்கொடுக்கத் தக்கதுமான ஆடையாபரணங்களைக் கேட்டு நச்சுவதானது புருஷர்களின் மனதைப்

பெண்ஜாதிகளின்றும் திருப்பி விடுகிறது அவன் மாதம் சொற்ப ரூபாய் வருமான முள்ளவனை யிருக்கிறுன். அவளோ தனக்கு பட்டு புடவை வேண்டு மென்றும் சரிகைச் சட்டை வேண்டு மென்றும் "இந்த மாசத்தில் எனக்கு காப்பு செய்து கொடுக்கா விட்டால் என் உயிருக்கும் உன் உயிருக்கும் தீங்குவரும்' என்றும் சொல்லுகிறுள். பெண்ஜாதி இப்படிக் கெல்லாம் இம்சிப்பதினுல் அவன் மனம் நெருக்குண்டு கஷ்டமடைகின்றுன். இதனுல் அவனுக்கு ஊணிலும் ருசியில்லை. குடிப்பிலும் சுகமில்லை. வீட்டுக்கு வந்தால் மனைவி இரைச்சலிட்டு இன்னும் என் வெள்ளிஆபரணங்கள் செய்தாகவில்லையா என்று கதறுகிறுள். இவ் விதமான நச்சுதல் கடைசியாகத் தூக்கக் கூடாத சுமையாய் போ கிறது. ஆகவே புருஷன் அவளைவிட்டு விடுகிறுன்.

(6) சில ஸ்திரீகள் புருஷனுடைய சுபாவத்தை கவனத்தில் வைக்காமல், எந்த நிலைமையிலும தங்கள் நோக்கத்தை முறை யிட்டு கொண்டிருப்பார்கள். அவர்களும் சிறுமையடைவார்கள். புருஷன் எப்படி கஷ்டபடைந்து வந்திருந்தாலும் அவள் தன் காரியத்திலேயே கண்ணுயிருப்பாள். அவன் வரவேண்டியது தான், அது இரவாயிருந்தாலும் பகலாயிருந்தாலும், உடனே அவனுக்கு இவள் தன் வீட்டுக் கஷ்டங்களைச் சொல்லிக்காட்ட முன்னுல் வந்து விடுவாள். இப்படியா யிருந்தால் அவன் மனம் ஏன் நடுங்காது?

(7) ஸ்திரீயானவள் தன் தாய் வீட்டையே அதிகமாக ஆசித்திருப்பாளாயின், அவளும் தன் புருஷனுடைய ஆசைக்கு அகன்றவளாய்ப் போவாள். எந்த ஸ்திரீ தங்கள் தாய் வீட்டிலேயே இருக்கிறுர்களோ அந்த ஸ்திரீகளின் புருஷன்மார் அநேகமாகத் தங்கள் அவசியத்துக்காக வேறு வழியைத் தேடிக் கொள்ளுகிறுர்கள்.

ஆகவே வெளிமேச்சலில் திரிகிற புருஷன்மார்களுடைய மனையாட்டிகள், தங்கள் புருஷன்மார் அப்படித் திரிவதற்கு காரண மென்ன வென்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அந்தக் காரணமோ அந்த அந்நிய ஸ்திரீகளை இவர்கள் தங்கள் சுபாவத் துக்கு ஒத்திருக்கக் காண்கிறுர்கள். இவர்கள் எப்படி விரும்பு கிறுர்களோ அப்படியாக அந்த ஸ்திரீகள் நடந்துகொள்ளு

கிறார்கள். எப்போதும் அவர்கள் ஆடவன் மனதைக் கைவசப் படுத்த அதை உருக்கவுமான வேலையிலிருக்கிறார்கள். வீட்டு மனை யாட்டிகளும் அவர்களைப்போல் உபசரிக்கவும் அலங்கரிக்கவும் அன்பு காட்டவுமான குணங்களைப் படித்துக் கொள்வார்களானால் அவர்கள் மேல் இவர்கள் அதிக பிரியமுள்ளவர்களாய்ப் போகக்கூடும். உபசரிப்பும் அலங்கரிப்பும் பதிவிரதைகளுக்கு ஆபரணமாயிருக்கின்றன. பாஜாரியான பரஸ்திரீகள் அப்படிச் செய்கிறார்களென்றால், ஆடவர்களின் மனதை வசப்படுத்தவும் பணம் பறிக்கவுமே அப்படிச் செய்கிறார்கள். குல ஸ்திரீகள் அப்படிச் செய்தால் அது அவர்களின் எதார்த்த குணமாகும். அபிநயிப்பும் அபத்தமுமான செய்கையல்ல இது.

எனவே நபிகள் பெருமானாரும் கதீஜா பெருமாட்டியும் கூடி வாழ்ந்த இவ்வாழ்க்கையை நாம் கூர்ந்து பார்க்கும்போது, கதீஜா நாயகியின் மன உருக்கமே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் வேறு விவாகம் செய்து கொள்ளாததற்குக் காரணமென்று நன்கு விளங்குகிறது. அவர் தமது லௌகிக சம்பந்தமான எல்லாக் கடமைகளினும் பெருமை தங்கிய தனது நாயகரின் மனதை உருக்கவும் வசப்படுத் தவுமான எண்ணமே அவருக்கு மேலிட்டிருந்தது. கஷ்டங்களில் அவர்களுக்கு உதவி செய்கிற வராயும், துன்பங்களில் அவர்களுக்குத் தைரியம் சொல்லித் திடப் படுத்துகிறவராயு மிருந்தனர். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு கதீஜா நாயகி அதிக பிரியமுள்ளவராயும் பெருமையுள்ளவராயு மிருந்ததற்குக் காரணம் இவைகளேயாம்.

ஆகவே பதிவிரதைகளான பெண்கள் எவர்களோ அவர்களே தங்கள் கணவர் மனதைக் கைவசப்படுத்துவார்கள். கணவருக்கு வந்த சுகதுக்கங்கள் தங்களுக்கு வந்ததாகக் காண்பார்கள். கணவர் வெளியே போயிருந்தால் வீட்டுச்சாமன்களை வைக்க வேண்டிய ஒழுங்குபடி தாங்களே வைக்கவாவது வேலைக்காரிகளைக் கொண்டுவைக்கச் சொல்லவாவது கடமை செய்வார்கள். வழங்கும் பாத்திரங்களைச் சுத்தமாக்கியும் அழகாக்கியும் வழங்கு வார்கள். வெளியேபோன புருஷன் வீட்டுக்கு வந்தால் சிரித்த முகமாக அழகான புஞ்சிரிப்போடு முன்சென்று அழைப்பார்கள். அப்போதவனுக்கு வேண்டிய தின்னதென்று நினைவில் வதை

திருப்பார்கள். நேரப்படி சோறு சமைப்பார்கள். அவனுடைய குழந்தைகளைப் பிரியத்துடன் வளர்ப்பார்கள். அவன் படுத்தால் விசிறி வீசுவார்கள். கால் அமுத்துவார்கள். அவன் நித்திரையிலிருந்தெழுந்தால் அவன் என்ன கேட்கிறானென்று எதிர்பார்ப்பார்கள். அவன் விருப்புவதை அவன் சொல்வதற்கு முன்னமே தயார்செய்து கொடுப்பார்கள். இவ்விதமாக நடந்துகொள்ளுகிற ஸ்திரீகள் உயிரோடிருக்கிற வரையில், கணவர்கள் அவர்களை விட்டுவிடவும் வேறொருத்தியை விவாசம் செய்து கொள்ளவும் முடியாதென்று அந்த ஸ்திரீகள் மெய்யாக நம்பவேண்டியது. இப்படிப்பட்ட ஸ்திரீகள் எப்போதும் சந்தோஷமாயிருப்பார்கள். இவர்கள் இறந்துபோனால் இவர்களுடைய புருஷன்மார், இவர்களைப்பற்றி துக்கங்கொண்டு இவர்களுடைய குணங்களைப்பற்றி ஜனங்களிடத்தில் எப்போதும் பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பார்கள்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய நம் பிராட்டிமார்களில் கதீஜா பெருமாட்டி மாத்திரமல்ல, மற்றவருடைய இல்வாழ்க்கையை நீங்கள் நோட்டமிடும்பக்ஷத்தில் அவர்களும் இதே ஒழுக்கமும் அடக்கமும் திருத்தமு முள்ளவர்களாயிருந்தார்களென்பதை அறிவீர்கள். இவர்களும் தவிர ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் மகளார் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா தமது கணவர் அலி றலியல்லாஹு அன்ஹுக்கு அன்புடன் அடங்கி வழிபட்டு வந்ததானது, அவர்களுக்கு மறு விவாகம் செய்துகொள்ள நினைவும் வராமலிருக்கும்படி செய்து விட்டது.

ஆகவே தங்கள் கணவர்மேல் குற்றங்கூறுகிற பெண்கள், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய வீட்டாரைப் பின்பற்றி தங்கள் கணவரைக் கைவசப்படுத்தும் நடவடிக்கைகளை கடைபிடிப்பார்களென்று நம்புகிறோம். அப்படிக்கில்லாமல் அந்த ஸ்திரீகளின் குணங்களும் வழக்கபழக்கங்களும் நடவடிக்கைகளும் கெட்டவைகளாயும் தூஷிக்கப்பட்டவைகளாயுமிருந்தால் அப்போதவர்கள் யாதொரு மந்திரஸ்தாபனத்தாலும் மணவாளரை வசப்படுத்த முடியாது. யாதொரு தாவீஜாலும் எண்ணம் பலிக்காது. இந்த வீண்வேலைகளிலெல்லாம் காலத்தை வீணாக

கழிப்பது பயனில்லாப் பாடாகவே முடியும். இதை அவர்கள் தங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். புருஷனை வசப்படுத்துவதற்கு எல்லாவற்றினும் பெரிய மந்திரம் அவனுக்கு அன்புடன் வழிபடுவதேயாம். ஒரு குல ஸ்திரீக்கு எல்லாவற்றினும் சிறந்த ஆபரணம் கற்புடைமையாகும், எல்லாவற்றினும் மிக்க அழகு கல்வியும் எல்லாவற்றினும் அதிக சங்கை அல்லா ரஸூல்களின் வழிபாடுமாம். உலகத்தில் ஒரு பெண் அல்லாஹ், ரஸூல்களுக்குப் பிறகு அன்பாகக் கண்யப்படுத்தி மரியாதை பாராட்டத்தக்க மனிதன் அவள் புருஷனேயாம். பின்னர் தாவீஜிலும் மந்திர உச்சாடனங்களிலும் மாய்கின்ற மதிகெட்ட ஸ்திரீகளைப்பற்றி எவ்வளவு கைசேதப்படவேண்டும்! அவர்கள் தங்கள் குணங்களையும் நடவடிக்கைகளையும் திருத்திக் கொள்ளாமல் கணவர்கள் தங்களை வெறுத்துவிடும்படியான துன்பத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தாவீஜாலும், மந்திரத்தாலும், பீர்களாலும், பகீர்களாலும் உதவி வேண்டி ஷிர்க்கென்னும் துன்பத்திலும் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். மொத்தத்தில் அவர்கள் துன்யாவுடன் தீனையும் இழந்து விடுகிறார்கள். இகபரங்கள் அற்றவளாய் அல்லாஹ்வுக்கும்ரஸூலுக்கும் பொருத்தமில்லாதவளாய், குடும்பத்தாருக்கு வெறுப்புள்ளவளாய் தானும் சந்தோஷமில்லாதவளாய்ப்போகிறாள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் இவ்வுலகத்தில் என்ன சாதிக்கக்கூடும்? வாணாள் முழுவதையும் துக்கத்திலும், விசனத்திலும் போக்குவார்கள். செத்தால் அகந்தம் பாவங்களான சுமையைத் தூக்கிக் கொண்டு இவ்வுலகத்திலிருந்து போவார்கள்.

ஆடவருக்கு எப்படியோ அப்படியே, பெண்டிருக்கும் அல்லாஹுத் தஆலா இல்மைக் கொடுத்திருக்கிறான். எழுதப்படிக்கத் தெரிந்த பெண்களும் இந்த துன்பத்தில் சிக்கிக்கொண்டிருப்பது மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. அவர்களுக்கு எதைக் கற்பித்து விட்டார்களோ இறைவனுக்கே தெரியும். அவர்களுக்கும் அவர்கள் கணவர்களுக்கும் அற்பகோமும் ஆகிறதில்லை. தாய்வீட்டிலேயே மாசக்கணக்காய் வசித்து வருகிறார்கள். தோழிகளும் அடுத்தவீட்டுப்பெண்களும் அவர்களை அவமதிக்கிறார்கள். இவ்விதம் புருஷனைவிட்டுப் பிரிந்திருப்பது தங்கள் குலப்பெருமையென்றும் தாங்கள் படித்த படிப்பின் பயன் என்றும் எண்ணு

கிறார்கள். இந்த எண்ணத்தை இவர்கள் மனதில் அமைத்தது எத்தப்பாடமோ தெரியவில்லை. தற்கால நிலைமையானது நமக்கு இன்னும் போதிப்பதென்னவென்றால், கல்விகற்ற ஒரு பெண்ணைக் கல்லாத ஒரு மனிதனுக்கும், இதேபோல் கல்வி கற்காத ஒரு பெண்ணை கல்வியுள்ள ஒரு மனிதனுக்கும் விவாகஞ் செய்விக்கக் கூடாதென்பதுதான். இல்வாழ்க்கை சம்பந்தங்களில் இந்தத் திருத்தமான ஏற்பாடாய்விட்டால் அப்போதும் இந்த முறைப்பாடுகள் அறவே நீங்கிவிடமாட்டாதுவென்றாலும் அநேகமாய் குறையக் கூடும்.

இதே தோரணையில் இன்னுமொரு வார்த்தையும் சொல்லி விடுவது பிரயோசனத்தைத் தராமலிராது. அஃதுயாதெனின், பெண்களுக்கு உயர்தரக் கல்வி வரையில் கற்பிக்காமல், மார்க்க சம்பந்தமான கல்வி மாத்திரம் கற்பிப்பதே மிக உத்தமம். உயர்தரக் கல்வியில தேர்ச்சியடையும் தன்மையும் அவர்களுக்கில்லை. அவர்களுக்கு அது வேண்டிய அவசியமுமில்லை. ஒரு பெண் அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் விதித்த விதிகளையும் கடமைகளையும் அறிவதுடன் புருஷனுடைய ஹக்குகள் பிள்ளைகளின் பரிபாலனம் வீட்டு குடும்ப காரியங்களை நடத்தும் முறைமை இவைகளிலும் தேர்ச்சியடைந்தால் இவ்வளவு கல்வியே அவளுக்குப் போதும். இதற்குமேல் அதிகம் வீணாசையாம்.

ஆண்பிள்ளை எவ்வளவு கற்றுத்தேர்ந்தவனாயிருந்தாலும் இவ்வளவு எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு பெண் அவனை ஒரு சீஷாவுக்குள் அடைக்கமாட்டுவாள். அவனுக்கு அவசியமானவைகளை அவள் தன் ஞாபகத்தில் வைக்கக்கூடும். ஆனால் இவளினும் குறைந்த கல்வியுள்ள ஒரு பெண்ணுக்கு உயர்தரக் கல்வியுள்ள ஒரு புருஷனைத் தேடவேண்டிய அவசியமில்லை. அவளுக்கு சம அந்தஸ்துள்ள புருஷனையே தேடுங்கள். முதல் நோக்கத்தில் இது ஒரு புதிய வழியாகத் தெரியும். என்றாலும் இதன் உண்மையை நீங்கள் ஆராய்ந்து பார்க்கும் பக்ஷத்தில், இல்வாழ்க்கையின் இனிமையான இரகசியங்கள் இதில்தானிருக்கின்றன வென்று உங்களுக்குப் புலப்படும்.

## கதீஜா பெருமாட்டியின் மேன்பாடுகள்.

உம்முல் மூமினீன் ஹஸரத் கதீஜா றலியல்லாஹு அன்ஹா அழகுள்ளவராயு மிருந்தனர். சீமாட்டியாயு மிருந்தனர். மேன் குலத்தவராயு மிருந்தனர்; உயர்குணத்தவராயு மிருந்தனர். அவரிருந்த மேன்பாடுகள் எல்லாவற்றினும் அதிக சிறந்த மேன்படு யாதெனில், அவர் தமது நாயகருக்கு அன்புடன் வழிபட்டு வந்ததேயாம். அவர் காலஞ் சென்ற பிறகு ஆயிஷா ஸித்தீகா றலியல்லாஹு அன்ஹாவை, ரஸூல் நாயகமவர்களுக்கு விவாகஞ் செய்யாம லிருந்தால் அவர்கள் மனம் சகிப்பது மிகவும் கஷ்டமேயாம்.

கதீஜா றலியல்லாஹு அன்ஹாவின் மேன்பாடுகளும் நற்குணங்களும் எண்ணிறந்தவைகளா யிருக்கின்றன. ஆயினும் சுருக்கமாகச்சிலவற்றைச்சொல்லுகிறேும்:—புகாரியில் ஹஸரத்து அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களால் ரிவாயத்து செய்யப் பட்டிருப்பதாவது:—இந்த உம்மத்திலுள்ள எல்லா ஸ்திரீ களினும் மேன்மையுள்ளவர் கதீஜாவாகவும், சென்ற கால உம் மத்தில் மரியமாகவு மிருக்கிறுர்கள் என்பதே (அலைஹிவஸ் ஸலாம்.)

கதீஜா நாயகி காலஞ்சென்ற பிறகும் ரஸூல் நாயகமவர்களின் மனதில் அவரின் முஹப்பத்திருந்தது. ஏதேனும் குருபானி செய்தால் முந்தி கதீஜா நாயகியின்தோழிகளுக்கு இறைச்சி அனுப்பி விட்டு அதன் பிறகு மற்றவருக்கு அனுப்புவார்கள். கதீஜா நாயகியின் பந்துமித்திரரா யிருக்கிற எவராவது எப்போதாவது ஹஸரத்அவர்களிடம் வந்தால் அவர்களை மிகவும் உபசரித்து விசாரித்து அனுப்புவார்கள். இவ்விடத்தில் யோசிக்கவேண்டிய தென்னவென்றுல், ஒருவனுக்கு மனைவி இறந்துபோனுல் அவளுடைய பந்துமித்திரர்களும் அவனுக்கு இறந்தவர்கள் போலாகிறுர்கள். அவனது பந்துக்கள் அவனுக்கும் யாரோ எவரோ என்று, எப்போதும் எவ்வித சம்பந்தமு மில்லாதபடி அந்நியராய் விடுகிறுர்கள். இது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய சுன்னத்துக்கு முற்றிலும் விரோதமா யிருக்கிறது. கதீஜா நாயகியின் மரணத்துக்குப் பிறகும் அவருடைய பந்துமித்திரர்களிடம் ரஸூல் நாயகமவர்கள் எப்படி

நடந்து கொண்டார்களோ அப்படியே எல்லா முஸ்லிம்களும் தங்கள் மனைவிமார்களின் மாணத்துக்குப் பிறகு அவர்களின் பந்துமித்திரர்களை உபசரித்து விசாரிக்க வேண்டும். ஏனெனில், மனைவியின் மரணத்தினால் மனைவி முறை மாத்திரம் போய் விட்டதே தவிர, அவள் குலத்தில் மற்ற முறைகள் ஒன்றும் போக வில்லை. அப்படி யிருக்க மனைவி மரித்தவுடன் அவள் பந்துக்க ளுடன் துர்க்குணத்தை வழங்கி உறவைத் தறித்து விட்டால் அந்தப் புருஷன் சுய காரிய நோக்க முள்ளவனென்றும் உறவற்ற அந்நியனென்றும் அவர்களால் அவமதிக்கப்படுகிறான். ஆகலால் அப்படிச் செய்யக்கூடாது. அல்லஹ்வுக்கும் ரஸூலுக்கும் பயப்பட வேண்டும்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுள மானதாக, அப்துல்லாஹிபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களால் ரிவாயத்து செய்யப்பட்டதாவது:— சொர்க்கத்துப் பெண்கள் எல்லாரினும் நான்கு பெண்கள் மிக்க நல்லவர்கள். அவர்கள் யாரெனில், (1) குவைலிதுடைய குமாரத்தி கதீஜா. (2) முஹம்மது (ஸல்)வுடைய குமாரத்தி பாத்திமா. (3) இம்ரானுடைய குமாரத்தி மரியம். (4) பிர் அவுனுடைய பெண்ஜாதி ஆசியா (றலியல்லாஹு அன்ஹும்) இவர்களேயாவர்.

இமாம் புகாரியவர்கள், உம்முல் மூமினீன் ஆயிஷா றலியல் லாஹு அன்ஹா அவர்கள் சொல்வதாக ரிவாயத்து செய்திருப்ப தாவது:—ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் என் வீட்டுக்கு வந்தால், கதீஜா றலியல்லாஹு அன்ஹாவை நினைத்து அவரை அதிகமாகப் புகழ்ந்து பேசுவார்கள். இந்த வழக்கப்படி அவர்கள் ஒருநாள் அவரை புகழ்ந்துபேச ஆரம்பித்த போது, எனக்கு ரோஷம்பிறந்ததினால்,"ரஸூலுல்லாவே தாங்கள் கதீஜாவை நினைத்துப் புகழ்கிறீர்களே! அவரென்ன ஓர் விதவை யான கிழவியா யிருந்தவர்தானே. அவருக்குப் பிறகு அல்லாஹு தஆலா தங்களுக்கு அவரினும் மிக்க நல்ல பீவியைக் கொடுத் தருளினான். தாங்கள் அடிக்கடி அவரைப்பற்றி பேசுவானேன்?" என்றேன். இதைக் கேட்டவுடன் ரஸூல் நாயகமவர்களின் முகம் கோபத்தினால் சிவந்து போயிற்று. அப்போது அவர்கள்

திருவாயிலிருந்து பிறந்த வார்த்தைகளாவன :—அல்லாஹ்வின் மீது ஆணையாக, எனக்கு கதீஜாவினும் நல்ல ஒரு பீவி கிடைக்க வில்லை. எல்லா ஜனங்களும் காபிரா யிருந்த காலத்தில் அவர் ஈமான் கொண்டிருந்தார். எல்லாரும் என் வார்த்தைகளைப் பொய் யென்று மறுத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் அவைகளை ஏற்று என்னை சத்தியவானக மதித்தார். எனக்குப் பொருளுதவி செய்யாமல் எல்லாரும் என்னை நிர்பாக்கியனுக வைத்திருந்த காலத்தில் அவர் தம் பொன்னையும் பொருளையும் எனக்கு அர்ப் பணம் செய்தார். அல்லாஹுத தஆலா அவர் வயிற்றிலிருந்தே எனக்கு அவ்லாதை (சந்ததியைக்) கொடுத்தான். மற்ற எந்த பீவியினுலும் சந்ததி அளிக்கவில்லை என்பதாகும்.

ஆயிஷா றலியல்லாஹுஅன்ஹா சொல்லுகிறதாவது :— கதீஜாவைப் பற்றி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் இப்படிச் சொன்னதைக் கேட்டு எனக்கு பயம்பிடித்துக் கொண்டது. இனி கதீஜாவைப் பற்றி நாயகமவர்களின் சமுகத்தில் அப்படி ஒன்றும் சொல்லேன் என்று அன்றுமுதல் அறுதிமானம் செய்து கொண்டேன் என்பதே.

மேலே சொல்லிவந்த ஹதீஸினுல் தெரியவந்த தென்னவெனில்: எந்த பீவிகள் தங்கள் புருஷருக்கு வழிபடுகிறவர்களா யிருக்கி ருர்களோ அந்த பீவிகள் மரணத்தை யடைந்த பிறகும் அவர்க ளுடைய பிரியமும் மதிப்பும் புருஷனுடைய மனதில் முன்போலவே குடிகொண்டிருக்கும். அக்தப் புருஷன் தன்னுடைய மற்றொரு பீவியால் அவர்களைப் பற்றி யாதொரு கெட்ட வார்த்தையைக் கேட்கவும் சம்மதிக்க மாட்டான். ஆனல் எந்த ஸ்திரீகள் துர் நடத்தையும் புருஷனுக்கு விரோதம் செய்தலுமான குணத்தை பூண்டிருக்கிருர்களோ அவர்கள் செத்தவுடன் "குப்பை யொழிந்து கூடம் சுத்தமாயிற்று" என்பது போல் புருஷன் அவர்களின் நினைவை தன் மனதிலிருந்து நீக்கிவிடுகிருன்.

## அவ்லாது (சந்ததிகள்.)

இன்னுமொரு சம்பவத்தை நோக்கியும் கதீஜா பெருமாட்டி றலியல்லாஹுஅன்ஹா மற்ற நம்பிராட்டிகளைவிட மிக்க பெரு மையும் பாக்கியமும் வாய்ந்தவராயிருந்தனர். அதென்னவெனில்,

"அவரின் வயிற்றிலிருந்து ரஸூல் நாயகமவர்களுக்கு ஆண்களும் பெண்களுமாக ஆறு குழந்தைகள் பிறந்தன. அதன் முதன் முதலாகப் பிறந்தவர் ஹஸரத் காஸிம் றலியல்லாஹு அன்ஹு. இவரோ நான்கு வருஷப் பிராயத்தில் மரணத்தையடைந்தார். பிறகு ஜெய்னப் றலியல்லாஹு அன்ஹாவும், இவருக்குப் பிறகு அப்துல்லாவும், பிறகு ருக்யாவும், பிறகு உம்முகுல்ஸூமும் பிறகு பாத்திமத்து ஜோஹ்ராவும் (றலியல்லாஹு அன்ஹும்) பிறந்தார்கள். அப்துல்லா றலியல்லாஹு அன்ஹுவும் இரண்டு வருஷப் பிராயத்தில் மரணத்தையடைந்தார். கதீஜா றலியல்லாஹு அன்ஹா தம்முடைய குழந்தைகளை மிகவும் பக்ஷமாகவும் பிரியமாகவும் பரிபாலித்து வந்தனர். இதனால் அவரை "கானத் ருக்பத்தல் பய்த்தி வ உம்மல் அயாலி" குடும்ப எஜமானியாயும் குழந்தைகளின் மாதா வாயுமிருந்து வந்தனர் கதீஜா" என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள்.

அவ்லாதுகளை அன்புடன் பக்ஷமாகப் பரிபாலித்து வந்ததும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சந்தோஷத்திற்கு ஓர் சாதனமாயிருந்தது. எந்த ஸ்திரீகள் தங்கள் மக்களை அடிப்பவர்களாய் அல்லது அவர்களைப் பரிபாலித்து சீர்திருத்தஞ் செய்வதில் கெட்டகுணத்தை உபயோகிப்பவர்கள யிருக்கிறார்களோ அவர்கள் பொதுவாகத் தங்கள் புருஷர்களுடைய வாழ்நாளையும் தங்களுடன் தாழ்நாளாக்கிக் கொள்ளுகிறார்கள். மக்களைப் பெற்ற மாதாக்கள் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிபட்டு தங்கள் புருஷர்களின் உத்திரவதை மதித்து வீட்டு வேலைகளை ஒழுங்காகசெய்து பிறகு அவ்லாதுகளின் பரிபாலன விஷயத்திலும் முழுகவனம் வைப்பது அவர்கள் மேல் விதித்த (பர்லு) கடமையா யிருக்கிறது.

குழந்தைகளைப்பெற்று குடும்பக் காரியத்தில் தலையிட்டிருக்கும் ஒவ்வொரு ஸ்திரீயும் "உம்முல் அயால்" (குழந்தைகளின் மாதா) வாகலாம். அப்படி யிருக்க ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவை மாத்திரம் 'உம்முல் அயால்' என்று சிறப்பித்துச் சொன்னார்கள். ஆகவே குறிப்பிட்டு ஒருவரை "உம்முல் அயால்" என்று சொல்வதானது பிள்ளை

களின் முழு பரிபாலனத் தன்மையான கடமைகள் அவரில் விசேஷித்து விளங்குகின்றன வென்பதற்கு ஓர் அத்தாட்சியாயிருக்கிறது. அவருடைய இல்வாழ்க்கை சம்பந்தமான எல்லாக் குணங்களிலும் இதுவும் புகழத்தக்க ஓர் குணமாக விளங்குகின்றது.

ஒரு பிள்ளையானது நல்லவிதமாகப் பரிபாலித்து நற்பயிற்சி செய்யப்படுமானல், இவ்வுலகத்தில் அந்தப்பிள்ளை தன் பெற்றோரின் சரியான ஞாபகார்த்தமா யிருக்கும். "மாதாவின் மடியே மக்களுக்குப் பிரதம கல்விச்சாலை" என்பது மறுக்கப்படாத விஷயம். குழந்தை ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும், அது தன் தாயினுடைய வழக்கப் பழக்கமான நடவடிக்கையில் நின்றும் எதைக் கற்கின்றதோ அதுவே அதன் குணமும் சுபாவமுமாய்ப் போகின்றது. சண்டைக்கார குடும்பத்தில் பிறந்த ஓர் மாதாவின் மகள் சண்டைக்காரியாயும், சாந்தமுள்ள குடும்பத்தில் பிறந்த ஓர் மாதாவின் மகள் கட்டாயம் சாந்தமும் பொறுமையு முள்ளவளாயு மிருப்பது சகஜமேயாம்.

ஹஸரத் பாத்திமத்துஸ் ஸஹ்றா றலியல்லாஹு அன்ஹா தம்முடைய சங்கையுள்ள மாதாவான உம்முல் மூமினீன் கதீஜத்துல் குப்ரா றலியல்லாஹு அன்ஹாவின் சகவாசத்திலும் பரிபாலனத்திலு மிருந்துவந்த காரணத்தால், கதீஜா பெருமாட்டியின் எல்லா நற்குணங்களும் அவரில் இடம்பெற்றன. அவர் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட போது, கதீஜா பெருமாட்டி எப்படி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு வழிபட்டு வந்தனரோ அப்படியே அவர், அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்கு வழிபடுகிறவராயிருந்தார். கதீஜா பெருமாட்டியின் உண்மையும் பொறுமையும் சாந்தமும், எக்காரியத்திலும் அல்லாஹ்வை நம்பி அவன் பால் திடசித்தம் வைத்தலும் இம்சைகளைச் சகித்தலும் ஆகிய எல்லாக் குணங்களின் அடையாளங்கள் அவரில் இலங்கிக் கொண்டிருந்தன. பாத்திமத்து ஸஹ்றா றலியல்லாஹு அன்ஹா பெரும்பாலும் தம் தாயாருடைய சமுகத்திலேயே இருந்து வந்தார். தாயாருடைய பரிபாலிப்பும் படிப்பித்தலுமான பயன் எப்படி முடிந்ததென்றல், கடைசியாக பாத்திமத்து ஸஹ்றா றலியல்லாஹு அன்ஹாவும் சொர்க்கத்து ஸ்திரீகளின் தலைவியாக ஒப்புக்கொள்ளப் பட்டார்.

அறபு, அஜம் இத்தேசங்களின் சாதாத்துகளுக்குத் தாயாருமானுர் இன்று சிறு சிறு குழந்தைகளும் அவரது நாமத்தை மரியாதை யுடன் உச்சரிக்கிறுர்கள். அவரது நாமத்தைக் கேட்டால் மரி யாதைக்காக உணர்ச்சியில்லாமலே தலைசாய்ந்து விடுகிறது.

கதீஜா றலியல்லாஹு அன்ஹா தம்முடைய குழந்தைகளை மிகவும் கிருபையாகவும் தயவாகவும் பக்ஷமாகவும் நடத்திவந்தார். இப்படியேதான் நடத்தவேண்டுவது கடமை குழந்தைகளை தாயாரே பக்ஷமாக நடத்தாவிட்டால் அந்நிய ஸ்திரீகள் அவர்களை எப்படி பக்ஷமாயும் அன்பாயும் நடத்துவார்கள்? ஒருபோதும் நடத்தமாட்டார்கள். வீட்டிலுள்ள ஸ்திரீகள் தங்கள் குழந்தை களைத் திட்டிக்கொண்டிருந்தால் வெளியிலுள்ள ஸ்திரீகள் அவர் களோடு ஒத்து ஊத சித்தமாய்விடுகிறுர்கள். வீட்டிலுள்ள ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை வாழ்த்திப் புகழ்ந்தால் வெளி யிலுள்ள ஸ்திரீகளும் அக்குழந்தைகளை வாழ்த்திப் புகழ்வாரா கிறுர்கள். இது அநுபவம். தங்கள் தாய் தந்தையருக்குப்பணிந்து நடப்பவராயிருக்கும்படி குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது. சந்தேகமின்றி அவர்கள் பணிந்து நடக்கவே வேண்டும், ஆனுல் அதோடுகூட அந்தத் தாய்தந்தையருக்கு ஒருவிஷயம் கற்பிக்க வேண்டி அவசிய மிருக்கிறது. அதாவது, அவர்கள் தங்கள் குழந்தைகளை மாதா பிதாக்களுக்கு வேண்டிய பக்ஷமும் தயவும் இரக்கமும் அன்புமான குணத்தால் ஆண்டு வரவேண்டுமென் பதுதான்.

எந்தத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அதிகமாக அடித் துக் கொண்டிருக்கிறுர்களோ அவர்களின் குழந்தைகள், முடிவில் சண்டிகளாயும் அடம்செய்பவர்களாயும் போகின்றுர்கள். அவர்கள் வாலிபரானுல் அநேகமாய் தாய்தந்தையரின் உத்தரவுக்கு அவர்கள் வசப்படுவதில்லை. இப்படிச் செய்யாமல், எந்தத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை விழி நோக்கால் பயமுறுத்துவதே போதுமென்று நினைக்கிறுர்களோ அவர்கள், தங்கள் குழந்தைகளை தங்கள் பிரியப் படி ஒழுக்கமும் அச்சமும் உள்ளவரா யிருக்கப் பார்க்கிறுர்கள்.

குழந்தைகளைப் பரிபாலிப்பதென்னும் இந்தப் பெருஞ்சுமை யானது அவர்களின் தாய்மார்கள்பேரில் சுமத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் அவர்கள் தங்கள் குழந்தைகளை மிருதுவாயும் இலகுவா

யும் அமைதியாயும் பரிபாலித்து அவர்களுக்கு நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் படிப்பிக்கவேண்டும். அவர்கள் பெரியவராய் தங்கள் தாய்தந்தையருக்கு மாதிரி ரூபமாகவும் மறையாதனுபாகர்த் தமாயு மிருக்கத்தக்க காரணங்களில் அவர்களை வளர்ச்சி யடையும் படி விடவெண்டும். அவர்களின் பொருட்டால் தாய்தந்தை யருடைய நற்பெயர்விளங்கும். அவர்களைப் பார்ப்பவர் எவரோ அவரே அவர்களின் சீர்த்திருத்தத்தைப்பற்றி தாய் தந்தையரை மெச்சிப் புகழ்வார்கள்.

கதீஜா பெருமாட்டி றலியல்லாஹு அன்ஹா இவ்விதமே செயதார்கள். அவர்களின் ஆண்மகவுகள் அதிர்ஷ்ட வசத்தால் ஆயுள்விருத்தி யில்லாமலே சென்று போனார்கள். அப்படி இருந் திருந்தால் அவர்கள் அறபு குல மேன்மக்களுக்குத் தலைவர்களா யிருப்பார்கள். ஆனால் உயிரோடிருந்த பெண்களோ தங்கள் தாயாரின் முழு அடையாளங்களா யிருந்தார்கள். அவர்களின் பொருட்டால் ஒரு போதாவது நுபுவ்வத்துடைய குடும்பத்தின் பேரில் எவ்விதமான குறைவும் உண்டாகவில்லை. கதீஜா பெரு மாட்டிக்கிருந்தது போல், ஆறு குழந்தைகளைப் பரிபாலிப்பதும் அவர்களுக்கு அவசியமானவைகளைச் சிந்தையில் வைப்பதும், பின்பு தம் கணவருக்கு நேர்ந்த துன்பங்களில் தாமும் கூடவிருந்து சமாளிப்பதுமான இந்த அபார சக்திகள் எவருக்கிருக்கக்கூடும்? எதார்த்தமாக கதீஜா பெருமாட்டியினிடத்தில் மேன்மைத்தனமும் அதிகாரத்தன்மையுமான எண்ணிறந்த குன இரத்தினங்கள் இலங் கிக்கொண்டிருந்தன. அவர் எப்படிப்பட்ட ஸ்திரீயா யிருந்தன ரென்றால், காலமானது ஆயிரம் வருஷம் சுற்றி ஆடினதின் பின்னால்கூட அவருக்கு எதிர்மறை எடுத்துக்காட்ட முடியவில்லை.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கோ நுபுவ்வத்துடைய அபார வேலைகளால் கொஞ்சமும் ஒழிவு இருந்ததில்லை. அவர்கள் குழந்தைகளை கவனிப்ப தெங்ஙனம்? ஆனால் அக் குழந்தைகளுக்கு வேண்டியவைகளைப்பற்றி அவர்க ளுககுக் கவலை இருக்கவே இருந்தது. மற்றபடி அக் குழந்தை களைப்பற்றி ஆலோசித்தல், நல்லொழுக்கங்களைக் கறபித்தல் முதலியவை யெல்லாம் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவின் பொறுப்பாயிருந்தது. ஆனால் அவர் அதிக பொருளும் திரண்ட

ஆஸ்தியுமுள்ளவரா யிருந்தனர். என்றாலும் ரஸுூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் அவ்லாதுக்காக பயிற்சி செய்யவாவது உணவு ஊட்டவாவது ஒரு வேலைக்காரி நியமிக்கப் பட்டிருந்தாளென்று ஒரு ரிவாயத்தும் நமக்குத் தென்படவில்லை. ஆனால் அறபுகளின் வழக்கப்படி பால் குடிபிராயத்தில் இந்தக் குழந்தைகளும் ஒரு குலஸ்திரீயான பால்காரிவசம் ஒப்பு விக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் பால்குடி பிராயத்துக்குப் பிறகு புத்தி பூர்த்தியான வயதில் ரஸுூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய அவுலாதுகளின் எல்லாப் பணிவிடைகளும் கதீஜா றலியல்லாஹு அன்ஹா தம் கையினாலேயே செய்து வந்தனர்.

உம்முல் மூமினீனாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹாவின் இந்த சிரத்தையும் சிசு வளர்ப்பான காரியமும் எக்காலமும் மக்களைப் பெற்ற மாதாக்களுக்கோர் பாடமாயிருக்கிறது. குழந் தைகள் பெருகுவதைக்கண்டு பயப்படுகிறவர்களும் அவர் களின் பரிபாலனத்தை வெறுப்பவர்களுமான தாய்மார்கள் யாவரோ அவர்கள் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவின் செய்தி களால் நற்புத்தியடைந்து தங்கள் குழந்தைகளைப் பரிபாலித்துச் சீர்திருத்தஞ்செய்ய சித்தமாகக் கடவர்.

ரஸுூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் திருவாயினால், " ஒருவன் தன்னுடைய இரண்டு குமாரத்திகளைப் பட்சத்துடன் அவர்கள் பருவம் எய்துகிறவரையில் பரிபாலித்து வருவானாகில், நாளை கியாமத்தில் அவன் " இவ்விதமாக என்னை நெருங்கி யிருப்பான் " என்று திருவுளமானார்கள். இவ் விதமாக என்று சொல்லும்போது தங்களின் கைவிரல்களில் இரண்டை ஒன்றோடொன்றைப் பொருத்திக் காண்பித்தார்கள்.

அறபுதேசத்தில் மூடபுத்தி நிறைந்திருந்த காலத்தில், பெண் மக்களிருப்பது பிராணச்சங்கடமென்று கருதப்பட்டு வந்ததுமன்றி குலத்துக்கு ஈனமென்றும் எண்ணப்பட்டது. ஒருவனுக்கும் மற்றொருவன் மேல் கோபமுண்டாகும்போது ஆண்டவன் உனக்கு ஒரு குமாரத்தியைக் கொடுப்பானாக என்று சொல்லுவான். இப் படிச்சொல்வது எல்லாவற்றிலும் பெரிய ஒரு வசையாயும் சாபமாயு மிருந்தது. ஆனால் ரஸுூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்

களின் சிரசில் தீர்க்க தரிசன மகுடத்தைச் சூட்டி அவர்களை நபியாக எழுப்பினபோது, தங்கள் கூட்டத்தார் எண்ணியிருந்த இந்த எண்ணமென்னும் வேரைக் கெல்லியெறிந்து, குடும்ப விருத்திகளுக்கு பெண்மக்களே காரணமாயிருக்கிறார்களென்றும் அவர்களைப் பிரியத்துடன் பட்சமாகப் பரிபாலனம் செய்யுங்களென்றும், அவர்களைப் பயிற்றுவதிலும் பரிபாலிப்பதிலும் கவனம் வையுங்களென்றும், அவர்களுக்கு நல்லவிதமாக நடந்துகொண்டவன் எவனோ அவன் நாளை கியாமத்தில் என்னைக் கண்டுகொள்வான் என்றும், அவர்களின் பால் பாசத்தை அறுப்பவன் எவனோ அவன் என்னை விட்டு விலகியிருப்பான் என்றும் எல்லாருக்கும் பொதுவாகப் போதித்தார்கள். ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குக் குமாரத்திகள் உண்டானபோது தான் இந்த ஹதீஸை அவர்கள் சொன்னார்களென்பதில்லை. மேலும் அல்லாஹு தஆலா அவர்களுக்கு முதன் முதல் ஆண் குழந்தைகளைக் கொடுத்திருந்தபோதிலும், பெண்கள் விஷயமாக அவர்கள் இந்த சட்டத்தை எல்லாரும் அநுஷ்டிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள். கடைசியில் போகப்போக, மூட இருள் நிறைந்த அறபு தேசத்திலிருந்து பெண் கொலையென்னும் கொடிய வழக்கம் நீங்கிவிட்டது. ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்மக்களுக்குப் பெருமையும் சங்கையும் கிடைத்தன.

ஆண்மக்களைவிட பெண்மக்களை அதிக பிரியத்தோடும் பக்ஷத்தோடும் வளர்க்கவேண்டியது அவசியம். ஏனெனில் ஆண் மக்கள் ஆயுசு பரியந்தம் தங்கள் தாய்தந்தையருடன் கூடி வாழக்கூடும். பெண்மக்களோ வரையறையான ஓர் காலம் வரையில்தான் தங்கள் மாதாபிதாக்களின் மனைக்கோர் மகிமையென்று மதிக்கப் படுகிறார்கள். அதன் பிறகு அவர்கள் அந்நிய கிரகத்தில் போய் வசிக்கும்படி நேரிடுகின்றது.

எந்தப்பெண்கள் தங்கள் தாய்தந்தையர் வீட்டில் சந்தோஷமில்லாமல் கஷ்டத்தை யடைகிறார்களோ அவர்கள், தங்கள் கணவன் வீட்டுக்குப்போய் முந்தியகஷ்டங்களை ஞாபகம்செய்து, தங்கள் தாய்தந்தையரை விட்டுப் பிரிந்திருப்பதே சிலாக்கியம் என்று நினைக்கிறார்கள். மணம்புரிந்த பின் மாதர்கள் தங்கள் வீட்டைத் துன்ப மனையென்றும், கணவன் வீட்டை இன்ப மனையென்றும்

எண்ணுகிருர்களென்ருல் இது எவ்வளவு பரிதாபமும் ஆச்சரியமும் படவேண்டிய இடமாயிருக்கிறது? ஆனல் இதில் அந்தப் பெண்கள்பேரில் யாதொரு குற்றமும் இல்லை. இவையெல்லாம் பெற்ருேர்களின் இரக்கமின்மையான நடவடிக்கையின் பயனுயிருக்கிறது. பெற்ருேர் தங்கள் பெண்களைப் பிரியத்தோடு நம்பயிற்சியோடும் நற்குணத்தோடும் நடத்திப் பரிபாலித்திருந்தால், அவர்கள் தங்கள் கணவர் வீட்டுக்குப் போனுலுங்கூட மாதா பிதாக்கள்செய்த நன்றிகளை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். நல்ல நசீபுள்ள பெண்களின் முக்கிய கடமை என்னவென்ருல், அவர்கள் தங்கள் கணவன் வீட்டுக்குப்போனுல் கணவனுடைய நினைவும் கணவன் வீட்டு நினைவும், தங்கள் தாய்தந்தையருடைய நினைவினும் அவர்கள்வீட்டு நினைவினும் அதிகமாயிருக்கவேண்டும். இதுவே அவர்களின் இல்வாழ்க்கைக்குரிய கடமையாயிருக்கிறது. ஆதலால் இக்கடமையை அவர்கள் தங்கள் பிரியத்துடன் நிறைவேற்றவேண்டும். பிரியமில்லாமல் மற்றவர் சொல்லுக்குப் பயந்து அவர்கள் இப்படிச் செய்யும் பக்ஷத்தில் அதற்கு ஜவாப்தாரி அவர்களின் தாய்தந்தையரே.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் புத்திரிகளில் முந்தினவர் ஜெய்னபு றலியல்லாஹு அன்ஹாவாவர். இவர் நுபுவ்வத்துக்குப் பத்துவருஷம் முந்தி பிறந்தவர். இவருக்குப் பருவம் எய்தியபின் இவாது சிறிய தாயார் மகனை அபுல் ஆஸ் இபுனு ரபீ இபுனி அப்தில் உஸ்ஸா இபுனி அப்திஷ்ஷம்ஸ்இபுனி அப்தில் மனுபுக்கு இவர் விவாகம் செய்விக்கப்பட்டார். இவரிடத்தில் அபுல் ஆசுக்கு அலியென்று ஒரு ஆணும் உமாமாவென்று ஒரு பெண்ணும் பிறந்தார்கள். இந்த அலிய்யுபுனு அபில்ஆஸ் வாலிப பருவத்தையடைந்தார். முஸ்லிம்கள் மக்கமாநகரை வெற்றிக்கொண்ட தினத்தில் இவர் தம் பாட்டனுரான ஹஸரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடன் ஒரே ஒட்டகையிலிருந்ததை ஜனங்கள் பார்த்தார்கள். உமாமா (றலி) என்பவரோ பாத்திமா றலியல்லாஹு அன்ஹா மவுத்தானபிறகு, ஹஸரத் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் நிகாஹில் வந்தார். இவரால் அவர்களுக்கு ஒரு ஆண் பிறந்தது. அந்த ஆண்குழந்தையின் நாமம் அலிய்யுல் அவ்ஸித்து. ஜெய்னபு

றலியல்லாஹு அன்ஹா ஹிஜ்ரீ எட்டாவது ஆண்டில் வபாத்தை யடைந்தார். அவரை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் தங்கள் கையால் அடக்கம் செய்தார்கள்.

இரண்டாம் புத்திரி ருக்யா றலியல்லாஹு அன்ஹாவாவர். இவர் ஜெய்னபுக்கு மூன்று வருஷம் இளையவர். இவர் நுபுவ் வத்துக்கு முன் அபூலஹபுடைய மகன் உத்பாவுக்கு நிகாஹு செய்யப்பட்டிருந்தார். ஆனால் அபூலஹபைச் சபித்து தப்பத் யதா சூரத்து இறங்கினபோது அபூலஹப் தன் குமாரர்களை வற் புறுத்தி நீங்கள் முஹம்மது (ஸல்) உடைய மகளை நீக்கிவிடாத வரையில், நான் உங்கள்பேரில் பொருத்தமாயிரேன் என்று சொன் ஞன். பின்பு உத்பா இவரை வீடு கூடு முன் விவாக பந்தத்தி லிருந்து நீக்கிவிட்டான். பின்பு இவர் உதுமான் றலியல் லாஹு அன்ஹு அவர்களின் நிகாஹில் வந்தார். உதுமான் றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் இவருடன் ஹப்ஷாவுக்கு ஹிஜ் ரத்து செய்திருந்தார். அவ்விடத்திலேயே இவருக்கு அவர் களால் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் அப்துல்லாஹ். இந்த அப்துல்லாஹ் ஒரு வருஷத்து அல்லது இரண்டு வருஷத்துப் பிராயத்திலிருக்கும்போது இவரது கண் விழியில் ஒரு சேவல் தன் மூக்கால் கொத்தினது. அதனுல் இவர் மரணத்தை யடைந்தார். ருக்யா றலியல்லாஹு அன்ஹா ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஷவ்வால் முதல்பிரையன்று வபாத்தை யடைந்தார். ஜன்னத்துல் பகீஉவில் அடக்கமானர்.

மூன்ரும் புத்திரி உம்மு குல்சூம் றலியல்லாஹு அன்ஹாவா வர். இவரும் பீவி ருக்யாவைப் போலவே அபூலஹ்புடைய மகனுக்கு விவாகம் செய்விக்கப்பட்டிருந்தார். பிறகு புருஷனுல் நீக்கிவிடப் பட்டார். ருக்யாவின் மரணத்துக்குப் பிறகு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இவரை, உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நிகாஹு செய்வித்தார்கள். இவர் வயிற்றி லிருந்து சந்தானவிருத்தி யுண்டாகவில்லை. ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் இவர் வபாத்தையடைந்தார்.

நான்காம் புத்திரி எல்லாரினும் இளைஞரான ஹஸரத்து பாத்திமத்து ஜஹ்ரா றலியல்லாஹு அன்ஹாவாவர். இவர் நுபுவ் வத்துக்கு ஐந்து வருஷம் முந்தி பிறந்தவர். இவருக்கு செய்திதத்

துக்கிஸா, ஜுஹ்ஹாராபத்தூல், ஜாக்கியா, ராஸியா, மர்ஸிய்யா ஆகியப் பட்டப்பெயர்கள் கிடைத்தன. பத்தூல் என்ற சொல்லுக்கு உலகத்தை வெறுத்தவர் என்பது பொருள். ஏனெனில், இவர் அங்குமிங்கும் போக்குவரத்து செய்யாமல் எப்போதும் தம் தாயாரான கதீஜா பெருமாட்டியின் சமுகத்திலேயே உட்கார்ந்திருப்பார். இதனால் அவர் இச்செல்வப் புதல்வியைப் பிரியத்துடன் "பத்தூல்" என்று கூப்பிடுவார்.

ஹஸரத் பாத்திமத்து ஜொஹ்ரா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பேச்சிலும் நடையிலும் வடிவத்திலும் குணத்திலும், ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு மிகமிக ஒத்திருந்தார்கள். ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இவரைக் கண்யப்படுத்துவார்கள். இவரிடத்தில் ரொம்பவும் பிரியமாயிருப்பார்கள். இவர் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நிகாஹு செய்யப்பட்டார். ஹசன், ஹுசேன், முஹஸின் என்ற மூன்று ஆண்களும் ஜெய்னபு, குல்சூம், ருக்யா என்ற மூன்று பெண்களும் பிறந்தார்கள். முஹ்ஸினும் ருக்யாவும் குழந்தைப் பருவத்திலேயே வபாத்தை யடைந்தார்கள். ஜெய்னபை அப்துல்லாஹிபுனு ஜஃபர்தைய்யார் றலியல்லாஹு அன்ஹுவுக்கும், குல்சூமை ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹுவுக்கும் நிகாஹு செய்விக்கப்பட்டது. பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுக்கு நிகாஹு செய்விக்கும்போது, அவருக்கு வயது பதினைந்தும் மாதம் ஐந்தும் நாள் பத்தும் சென்றிருந்தன. ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வபாத்தை யடைந்து மூன்று மாதஞ் சென்றபிறகு, ஹிஜ்ரீ பதினோராவது ஆண்டு றமலான் மாதம் செவ்வாய்க்கிழமை இரவில் இவர் வபாத்தை யடைந்தனர். இரவிலேயே ஜன்னத்துல் பகீஉவில் அடக்கம் செய்யப்பட்டார். தங்களின் கண்மணியான புத்திரர் ஹஸரத் இமாம் ஹுசேன் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை மகனார் ஹஸரத் இமாம் ஜெய்னுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களில் நின்றுமே செய்யிதுமார்களின் வம்சவளி நடந்துவருகிறது. இவ்விதமே இதுவரையில் உற்பத்தியான சாதாத்துகளும் மஷாயிகுகளும் குதுபுமாரும் கவுஸுகளும் அவ்லியாக்களுமான இவர்கள் எல்லோருக்கும்

பிறப்பிடமான காரணமாயிருந்தவர் பாத்திமத்து ஜொஹ்ராவும் அவர் தாயார் கதீஜத்துல் குப்ராவுமேயாவர். (றலியல்லாஹுா அன்ஹுமா.)

இதுவரையில் நீங்கள் படித்து வந்தது கதீஜா றலியல் லாஹுா அன்ஹாவின் ஜீவவிருத்தாந்தமேயாம்.

அல்லாஹுா தஆலா நமக்கும் நம்முடைய பெண்களுக்கும் உம்முல் மூமினூகிய கதீஜா றலியல்லாஹுா அன்ஹாவின் அடிச் சுவட்டின்பேரில் நடக்கவும், நம்முடைய இல்வாழ்க்கையில் அவரது வழக்க பழக்கங்களைப் பின்பற்றி பரக்கத் தென்னும் ஒளியை அடைந்து, ரஸுல் ஸல்லல்லாஹுா அலைஹிவஸல்லமவர் களின் சந்தோஷத்துக்குக் காரணமாகவும் நல் உதவி புரிவானுக.

## அநுபந்தம்.

ஒரு பெருமானுடைய அல்லது ஒரு பெருமாட்டியினுடைய ஜீவிய சரித்திரத்தையோ அல்லது குணதிசயத்தையோ வாசிப் பதில் அவரது நிலைமைகளும் சம்பவங்களும் நமக்குத் தெரிய வேண்டுமென்கிற நோக்கம் மாத்திரமே இருந்தால் போதாது. மேலும் அவரது ஜீவியவிருத்தாந்தத்தைப் பார்வையிடுவதினுல் நம்முடைய அக்கண்களில் எதார்த்த வொளியென்னும் வெளிச்சம் வியாபிக்கவேண்டும். ஜீவ விருத்தாந்த சரித்திரங்களோ நம் தேசத்தில் எவ்வளவாக வழங்கி வருகின்றன வென்றுல் அவைகளை யெல்லாம் ஓரிடத்தில் சேகரஞ்செய்தால் ஆயிரம் நூல் ஆகலாம். எனினும், அவைகளில் நற்புத்தி போதித்தல், அச்சமூட்டல், சீர்திருத்தல், நற்குணங்களைப் படிப்பித்தல் முதலான சத்விஷயங் களடங்கிய சரித்திரங்கள் சிலவேயாம். அவைகளிலுங்கூட ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுா அலைஹிவஸல்ல மவர்களுடைய குடும்பப் பெரியோரின் குணதிசயங்கள் நிறைந்த சரித்திரங்களே மிக்க நல்ல சரித்திரங்களாம். இந்தப் பெரியோர்களில் புருஷர் களுமுண்டு; ஸ்திரீகளுமுண்டு. புருஷர்களின் ஜீவ விருத்தாந்தம் புருஷர்கள் அநுஷ்டிக்கத் தக்கதும், ஸ்திரீகளின் ஜீவ விருத் தாந்தம் ஸ்திரீகள் அநுஷ்டிக்கத் தக்கதுமாயிருக்கின்றன. ஆனுல் இதோ நீங்கள் வாசித்துவரும் இந்த கதீஜத்துல் குப்ரா றலியல் லாஹுா அன்ஹாவின் ஜீவிய சரித்திரமானது, ஆடவர் பெண்டிர்

இரு தரத்தாருக்கும் ஒரு செல்வமாயும் அநுஷ்டிக்கத்தக்க ஒரு முதலாயு மிருக்கின்றது.

இதைப் பார்வையிடுவதினுல் ஆடவருக்கு விளங்குவதென்ன வெனில், இஸ்லாத்தில் எல்லாரினும் பெரிய தலைமைத்தனம் பூண்ட முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் தங்கள் மனையாட்டிகளுடன் எவ்வாறு நடந்துகொண் டார்கள் என்பதும், அவர்கள் தங்கள் இல்வாழ்க்கையை இனிய வாழ்க்கையாக்க எப்படி முயர்ச்சித்தார்கள் என்பதுமேயாம்.

இக்காலத்தில் ஆடவர் தங்கள் மனையாட்டிகளை இழிவாக நினைக்கிறுர்கள். அவர்களுடைய ஹக்குகளென்னும் சுதந்தி ரங்களை அழித்துப்போட சித்தமாய் விடுகிறுர்கள். ஸ்திரீகளை அடிமைப் பெண்கள்போல் அலட்சியமாய் நினைக்கிறுர்கள். இந்த கிதாபைப் பார்வையிடுவதினுல், இப்படிபட்ட ஆடவர் எவ்வளவு தப்பான வழியில் நடக்கிறுர்களென்பதும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய சற்போதனைக்கு எவ்வளவு தூரம் விலகி யிருக்கிறுர்க ளென்பதும் நன்கு விளங்கும்.

நம்பிராட்டிமரர்களில் ஒருவரான கதீஜா றலியல்லாஹு அன் ஹாவின் ஜீவிய சரித்திர மட்டுமல்ல, மற்ற நம்பிராட்டிகளில் எவ ருடைய சரித்திரத்தை நீங்கள் வாசித்தாலும், அதில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் மனையாட்டி களுடன் கடுகடுப்பாயும் இரக்க மின்மையுமாக நடந்துகொண்டார்க ளென்று ஒரு விஷயமாவது உங்களுக்குத் தென்படாது தாங்கள் எப்போதாவது ஒரு பீவியின்மேல் கோபமானுலுங்கூட அந்த பீவியின் தப்பிதத்தைச் சாந்தமாக எடுத்துக் காண் பித்து மிருதுவாக நற்புத்தி போதிப்பார்கள். ஆயிஷா றலி யல்லாஹு அன்ஹாவின் ஜீவிய சரித்திரத்தை வாசிப்பதனுல் அவரைப்பற்றி பிரஸ்தாபமான ஒரு அவதூறுல் நேர்ந்த தப்பான எண்ணத்தினுல் கொஞ்சநாள் அவருக்கும் ரஸூல் நாயகமவர் களுக்கும் நடுவே வெறுப்பு ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. என்றுலும் அப்போது தங்களால் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவுக்கு யாதொரு இம்சையுண்டாயிற் றென்றுவது அல்லது தாங்கள் அவரது ஹக்குகளைக் கொடாமல் நிறுத்திக்கொண்டார்க ளென்றுவது ஏற்படவில்லை.

இக்காலத்திலே மூடர்களாயிருக்கிற சில முஸ்லிம்கள் அணுவணுவான அற்ப வார்த்தையின் பேரிலும் தங்கள் பெண்ஜாதிகளை அடிக்கிறார்கள். கியாமத்துடைய அமளிதான் நடக்கிறதோ என்று அண்டை அயலில் உள்ளவர்கள் நினைக்கும் படி; அவ்வளவு பலமாக இரைச்சலிட்டு அவர்கள்மேல் சரமாரி பொழிகிறார்கள். பெண்ஜாதிகளைக் கண்டிக்க இதுவும் ஒருவழிதானா? குடும்ப விவகாரம் அமைதியாய் நடைபெற மாட்டாதோ? முஸ்லிம்களின் சர்தாரான நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் இப்படித்தானா இல்வாழ்க்கை நடத்தினார்கள்? நாம் நமது இல்லத்திலும் இல்லத்துக்குப் புறம்பிலும், நமது நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுடைய சுன்னத்தான நடவடிக்கைகளை அநுஷ்டிக்கா திருக்கிறவரையில் நம்முடைய மனநிலைமைகள் மாறமாட்டா.

எந்தப் புருஷனுடைய சமிக்ஞையால் அவன் பெண்ஜாதி மெழுகைப்போல் இளகவில்லையோ, அல்லது பிரம்பைப்போல் நடுங்கவில்லையோ அந்தப்புருஷன் ஆண்பிள்ளையா? தன் மனை வியைத் தன் வசப்படுத்தி அவளைத் தன் சிநேகிதை யாக்கிக் கொள்ள முயல்வதுதான் ஆண்மைத்தனம். இப்படிச் செய்கிற வர்கள் எவரும், எப்போதும் தங்கள் மனையாட்டிகளிடம் சந்தேக முள்ளவர்களா யிருக்க மாட்டார்கள்.

கன்னியர்கள் கண்ணாடி பாத்திரங்களா யிருக்கிறார்களென் றும், அவைகளில் இடிபடா திருக்கும்படி கவனமாய்ப் பார்த் துக்கொள்வதுபோல் கன்னியர்களைக் கவனத்தில் வையுங்களென் றும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். ஸ்திரீகளின் நாஸுக்கும் மெல்லினத்துக்கும் இதைவிட நல்ல ஒரு உபமானம் சொல்லமுடியாது. ஸ்திரீகளின் மனம் மிகவும் மென்மையானது. ஆடவரை நோக்க அவர்களின் சக்திகளெல்லாம் பலஹீனமானவை. அவர்களுக்குக் கொஞ்சமேனும் இம்சையுண்டானாலவர்கள் அழத்தொடங்குகிறார்கள். கணவன் உறுத்துப் பார்த்தால் அவர்கள் கலங்குவார்கள். கணவன் கொஞ்சம் கோப மானால் அவர்கள் மனம் நடுங்கும். இந்த குணமானது ஸ்திரீ களில் இயற்கையாக அமைந்துள்ளது. இதனாலேதான் ரஸூல்

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஸ்திரீகளை இம்சிக்கவும் அவர்களுக்கு வருத்தங்கொடுக்கவும் கூடாதென்று பொதுவாக உத்தரவு செய்திருக்கிறார்கள். இதுவே அவர்களின் வழக்க நடையா யிருந்தது.

அல்லாஹு தஆலா ஆடவர் விழிகளில் அச்சமுறுத்தும் சக்தியையும், ஸ்திரீகளின் இருதயத்தில் அந்த அச்சுறுத்தலை இழுக்கும் குணத்தையுங் கொடுத்திருக்கிறான். புருஷன் கொஞ்சம் கோபத்துடன் உறுத்துப்பார்த்தால் பெண்சாதியின் மனம் உருக ஆரம்பிக்கிறது. ஸ்திரீயினது இயற்கையான குணம் இத் தன்மையுடையதென்றும், அவள் ஒரு மென்மையான மனதையும் பலங்குன்றிய சுபாவத்தையும் உடையவளென்றும் நமக்குத் தெரிந் திருக்க, பலாத்காரத்தாலும் கடூரத்தாலும் அச்சமுறுத்தி அடிப் பதாலும் அவளைத் தனக்கு சினேகியாக்க முயல்வது பரிதபிக்கத் தக்கது. கோணலான கண்ணாடி பாத்திரத்தை இரும்பு சம்மட் டியால் அடித்து நேராக்க முடியாது. அது உடைந்துபோம். மேலும் அற்பத்தினும் அற்ப அனலின் ஆவியே அதை க்ஷணப் பொழுதில் குணப்படுத்தி நேராக்கும்.

ஆடவர்போலவே ஸ்திரீகளும் இந்த சரித்திரத்தை வாசித்து, கணவனுக்கு வழிபடல், ஜீவனஞ்செய்யு, முறைகள், மனைவி விவ காரங்களின் சீர்திருத்தம், மக்களைப் பரிபாலித்தல் முதலிய நல்ல பாடங்களை ஞாபகஞ் செய்து, தங்கள் மனதில் அமைத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு அடிக்கடி சொல்லிக் காட்ட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இதற்குமுன் ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லும்போது, அதோடுகூடவே என்னென்ன நற்புத்திகள் போதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றின்படி நடந்துகொள்வதே அவர்களுக்குப் போதுமாயிருக்கிறது.

நம் காலத்திலுள்ள சரித்திரக்காரருக்கு நாம் விண்ணப்பத் துடன் தெரிவித்துக் கொள்வது யாதெனில், அவர்கள் இஸ்லாமில் சிறந்த ஒரு பெருமாட்டியின் சரித்திரத்தை எழுதத் தொடங்கினால் அப்போது அவர்கள் அடியில்வரையும் விஷயங்களை கவனத்தில் வைக்கவேண்டும். அவையாவன :—

அந்த சரித்திரத்தில் எந்த விஷயங்கள் அனுஷ்டிக்கவும்

அமலுக்குக் கொண்டுவரவும் தக்கவைகளா யிருக்கின்றனவோ, அந்த விஷயங்களைத் தெளிவாகவும் விபரமாகவும் விளக்கி அவைகளைத் தற்கால துர்வழக்கங்ளோடு சீர்தூக்கிக் காட்டவேண்டும். எதற்கெனில், நம் பெண்கள் கொஞ்சம் யோசித்து தங்கள் நடவடிக்கை என்னவா யிருக்கிறதென்பதையும், இக்காலம்போல் கல்வி அபிவிருத்தி இல்லாமல் எத்திசையும் மூட இருள் மூடிக்கொண்டிருந்ததும், இப்போதைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதுமான அக்காலத்தில், இப்பூவுலகில் பிறந்த அந்த மாதுசிரோமணிகளின் நடவடிக்கை என்னவா யிருந்ததென்பதையும் தெரிந்து கொள்வதற்கேயாம். இஸ்லாமில் சிறந்த ஒரு பெருமாட்டியின் ஜீவிய சரித்திரத்தை எழுதி இதர மதஸ்தர்களின் ஆக்ஷேபங்களை எடுத்துக் கொள்வது பயன் தரத்தக்க தல்ல மேலும் அம்மாது சிரோமணிகளின் நடவடிக்கைகளோடு நம் பெண்களின் நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்டி, இவர்களில் உள்ள குறைகளைப் பூர்த்திசெய்யும்படி பலமாக இவர்களுக்கு விருப்பூட்டுவதே நல்லதாகும். இதையே ஜீவிய சரித்திரமெழுதுவதின் முக்கிய நோக்கமென்று நாம் கருதுகிறோம்.

முஸ்லிம்களெல்லாரினும் முக்கிய முஸ்லிமாவாகிய கனம் தங்கிய கதீஜா நாயகி என்னும் பெருமாட்டியின் ஜீவிய விருத்தாந்தமாகிய இந்தச் சரித்திரத்தை, ஆயிரக்கணக்கான ஆடவர், பெண்டீர் அனைவரும் வாசிப்பார்கள். என்றாலும் எவர் முந்தி தம்மை கதீஜா றலியல்லாஹு அன்ஹாவுடையவும் அவரின் பர்த்தாவான கத்முல் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடையவுமான வழிப்பாட்டில் ஆக்குவாரோ, அவரே சுபமுற்ற ஆடவரும் அவரே சுபமுற்ற பெண்டிருமாவர். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவுடன் எவ்வாறு வாழ்க்கை நடத்தினார்களோ அவ்வாறே, ஆடவர் தம்மனையாட்டிகளுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். இன்னும் கதீஜா றலியல்லாஹு அன்ஹா தங்கள் கணவரான சர்வரே காயினாத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு எப்படிபணிந்து நடந்து கொண்டார்களோ அப்படியே பெண்டிரும் தங்கள் புருஷருக்கு பணிந்து நடந்து கொள்ளவேண்டும்.

அல்லாஹு தஆலா, கதீஜத்துல் குப்ரா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் முன்னறிக்கையாகக் கூறிய நல்மாராயப்படி, சுவர்க்கத்தில் முத்துமாளிகையைக் கொடுத்தருள்வானாக. இன்னும் நாம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய சுன்னத்தைப் பின்பற்றி நல்ல பரிபூரண முஸ்லிமாகும்படி நமக்கு நல்லுதவிபுரிவானாக ஆமீன். வஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா கைரின் முர்ஸலீன். றஹ்மத்தின்லில் ஆலமீன். வஆலா அஹ்லி பய்த்திஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன். பிறஹ்மத்திக்க யாஅர்ஹமர் ராஹிமீன்.

ஸீரத்துல் குப்ரா

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111451
EGMORE MADRAS

73
5-5

# அன்வாருல் குர்ஆன்

என்னும்

## திருமறை பிரகாசம்

1வது ஒளி

(குர்ஆன் ஷரீபின் 30-வது பாகமாகிய)

## அம்மயத் ஜுஸ்உவின் தர்ஜுமா

(முதல் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸ்உவில் உள்ள எல்லா ஸூறுக்களுக்கும் தர்ஜுமா செய்யப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆயத்தையும் முதலில் அரபியில் ஒரு நூதன எழுத்தைக் கொண்டு அச்சிடப்பட்டு, அதை அடுத்து அதற்குத் தமிழில் உச்சரிப்பு காயிதா உடன் போடப்பட்டு அதனோடு அந்த ஆயத்தின் பொருளை சுத்தத் தமிழில் போடப்பட்டு இருக்கின்றன. இந்த புஸ்தகம் அம்மயத ஜுஸ்உவிலுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் பொருளை அறிந்து கொள்ள உதவுவதுடன் அறபியே தெரியாதவர்கள் அம்மயத் ஜுஸ்உவிலுள்ள எந்த ஸூறுவையும் ஓத தெரிந்து கொள்ளவும் உதவும்.

இதன் விலை அணா 12.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5

பிரான்ச் ஆபீஸ்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 194, கெய்ஸர் தெரு, கொழும்பு 11.